பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆடி 6 ஞாயிற்றுக்கிழமை (22-07-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:238

# சர்வஜன வாக்கெடுப்பில் எதிர்த்து வாக்களிப்பதற்கு தமிழ்க் கட்சிகள் தீர்மானம்

## ஈ.பி.டி.பியும் வரதர் அணியும் சந்திரிகா பக்கம் நிற்க முடிவு

கொழும்பு,ஜூலை22

**எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறும் சர்வஜன வாக்கெடுப்பில் எதிர்த்து வாக்களிப்பது என்று ஈ.பி.டி.பி. மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகள் அனைத்தும் தீர்மானித்திருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.**

சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் புதிய அரசமைப்புக்கு மக்கள் அங்கீகாரம் கோரும் ஜனாதிபதியின் முடிவை ஈ.பி.டி.பி. வரவேற்றிருக்கின்றது. அந்த வாக்கெடுப்பின் போது ஜனாதிபதியின் கோரிக்கைக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு மக்களை இணங்க வைக்கும் பிரசாரத்தில் முழு அளவில் ஈடுபடப்போவதாக ஈ.பி.டி.பி. கூறிவருகின்றது.

வரதர்அணியின் முடிவு இன்னும் உத்தியோகபூர்வமாக வெளியிடப் படாவிட்டாலும், ஜனாதிபதி சந்திரிகாவின் கருத்துக்கு மாறாக, அந்த அமைப்பு செயற்படாது என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

### காங்கிரஸ் கருத்து

சர்வஜன வாக்கெடுப்பில் எதிர்த்து வாக்களிப்பது என காங்கிரஸ் திட்டவட்டமாக முடிவு செய்துவிட்டது என்றும் -

இதற்காகச் சூறாவளிப் பிரசாரம்

(14ஆம் பக்கம் பார்க்க)

### அரசின் ஜனநாயக விரோதச் செயலைக் கண்டித்து

## ஜே.வி.பி. ஏற்பாட்டில் நாளை 19 மாவட்டங்களில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஜூலை22

அரசின் ஜனநாயக விரோதச் செயல்களைக் கண்டித்தும், எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், நாளை திங்கட்கிழமை ஜே.வி.பியின் ஏற்பாட்டில் கொழும்பு மாவட்டம் உட்பட நாடு முழுவதிலும் உள்ள 19 மாவட்டங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறவுள்ளன.

எந்தத் தடை விதிக்கப்பட்டாலும் திட்டமிட்டபடி ஜே.வி.பி. இந்த ஆர்ப்பாட்டங்களை நடத்தியே தீரும் என்று அதன் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

(14ஆம் பக்கம் பார்க்க)

### கருத்துச் சுதந்திரத்தை நசுக்குகின்றார்

## சந்திரிகாவைக் கண்டிக்கிறது சர்வதேச மன்னிப்புச்சபை!

கொழும்பு,ஜூலை22

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கருத்துச் சுதந்திரத்தையும் ஒன்று கூடும் சுதந்திரத்தையும் நசுக்குகிறார்.

- இவ்வாறு சர்வதேச மன்னிப்புச் சபை குற்றஞ்சாட்டியுள்ளது.

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து கடந்த வியாழனன்று கொழும்பில் நடத்திய அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தின்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலீஸார் நிஜ சன்னங்களைப் பயன்படுத்தித் தாக்குதல் நடத்தியமையைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கையிலேயே சர்வதேச மன்னிப்புச்சபை இவ்வாறு குற்றம் சுமத்தியிருக்கின்றது.

அமைதியான முறையில் எதிர்ப்புத் தெரிவிக்க முயன்றவர்கள் மீது அளவுக்கு அதிகமான அடக்குமுறை

(14ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டில் குடும்பஸ்தர் பலி!

### சித்தாண்டியில் சம்பவம்

மட்டக்களப்பு,ஜூலை22

மட்டக்களப்பு சித்தாண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு குழந்தைகளின் தந்தையான குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

வந்தாறுமூலையைச் சேர்ந்த கே.வீரப்பன் என்பவரே உயிரிழந்தவராவார். இவரது சடலத்தை அவரது மனைவி அடையாளம் காட்டியுள்ளார்.

இவர் மட்டக்களப்பு ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்துக்குச் சென்றுவிட்டுத் திரும்பும் போதே படையினரால் சுடப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## பிஸ்டல் குழு சூடு: மட்டக்களப்பில் கான்ஸ்டபிள் பலி!

மட்டக்களப்பு,ஜூலை22

மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்துக்கு முன்பாக நேற்று காவல் கடமையில் இருந்த பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பிஸ்டல் குழுவினரின் தாக்குதலில் உயிரிழந்தார்.

மஞ்சத்தொடுவாய் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த பந்துல என்ற கான்ஸ்டபிளே உயிரிழந்தவராவார்.

பாடசாலையின் முன்பாக கடமையில் இருந்த சமயம் சைக்கிளில் வந்த ஒருவர் இவர் மீது பிஸ்டலால்

(14ஆம் பக்கம் பார்க்க)

## அடையாள அணிவகுப்பு

தென்மராட்சி,ஜூலை22

அல்லாரையில் கடந்த 7ஆம் திகதி பெண் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட மூன்று படையினரும் எதிர்வரும் 25ஆம் திகதி சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் உத்தியோகப்பற்றற்ற நீதிவான் சு.கந்தசாமி முன்னிலையில் நடைபெறும் அடையாள அணிவகுப்பில் ஆஜர்படுத்தப்படவிருக்கின்றனர்.

(ம-117)

## குடும்பஸ்தர் கைது

யாழ்ப்பாணம்,ஜூலை22

மட்டக்களப்பு வாழைச்சேனையில் கடந்த வியாழக்கிழமை குடும்பஸ்தர் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தேசிய மனித உரிமை ஆணைக்குழுவின் மட்டக்களப்பு கிளை அலுவலகத்தில் அவரது உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாழைச்சேனை கல்குடா வீதியைச் சேர்ந்த நவரத்தினம் பாஸ்கரன் என்ற குடும்பஸ்தரே கைது செயப்பட்டவராவார். (ம-6)

## சிப்பாய் உயிரிழப்பு

கொழும்பு,ஜூலை22

வெலிஓயாவுக்கு வடக்கே றணபாபுர பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றுக் காலை 7.40 மணியளவில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததாகவும் மற்றும் இரண்டு சிப்பாய்கள் காயமடைந்ததாகவும் விசேட ஊடகத் தகவல் மையம் தெரிவித்தது.

காயமடைந்த சிப்பாய்கள் அனுராதபுர ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (உ)

## மல்வத்தை மகாநாயக்கர் விசனம் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை22

எதிரணியின் ஜனநாயக மீட்புப் போராட்டத்தை அரசு கையாண்ட விதம் தொடர்பாகத் தனது விசனததை மல்வத்தை மகாநாயக்கர் ஜனாதி

(14ஆம் பக்கம் பார்க்க)

## நடிகர் திலகம் சிவாஜி காலமானார்!



சென்னை,ஜூலை22

தமிழ்த் திரையுலகின் முடிசூடா மன்னரான நடிகர் திலகம் சிவாஜி கணேசன் (வயது77) நேற்றுமுன்னிரவு சென்னையில் அப்பலோ மருத்துவமனையில் காலமானார்.

சுகவீனம் காரணமாக கடந்த 12ஆம் திகதி முதல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த அவரது உடல்நிலை நேற்றுக் காலை மிக மோசமான கட்டத்தை அடைந்ததால் அவர் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்றிரவு 7.20 மணியளவில் அவரது உயிர் பிரிந்தது.

இதுவரை ஐந்நூறுக்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்துள்ளார். சிறுவயதில் இருந்தே நாடகங்களில்

(14ஆம் பக்கம் பார்க்க)

### நாடாளுமன்றைக் கூட்டுமாறு கோரி

## கோட்டே முன்பாக எம்.பிக்கள் சாகும்வரை உண்ணாவிரதம்?

கொழும்பு,ஜூலை22

சர்வஜன வாக்கெடுப்பை ரத்துச் செய்யக் கோரியும் -

ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை உடனடியாக மீளக் கூட்டுமாறு கோரியும் -

பெரும்பான்மையான எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கொழும்பு ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டேக்கு முன்பாக அடுத்த வாரம் அளவில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கத் திட்டமிட்டுள்ளனர் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

(14ஆம் பக்கம் பார்க்க)

### பலாலித் தளத்துக்கு நெருக்கமாக

## ஈவினையில் இரு இளைஞர்கள் கிளைமோர்களுடன் உயிரிழப்பு!

புன்னாலைக்கட்டுவன்,ஜூலை22

பலாலி அதிஉச்சப் பாதுகாப்பு வலயத்தின் எல்லையில் - வடக்குப் புன்னாலைக்கட்டுவனுக்கு அருகே - ஈவினைப் பகுதியில் உள்ள விவசாயத் தோட்ட நிலப் பிரதேசத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் இரு இளைஞர்கள் உயிரிழந்தனர்.

கிரனேட்டுகள், கிளைமோர்க் குண்டுகள் சகிதம் ஒளிந்திருந்த இரு நபர்களே படையினரின் சுற்றிவளைப்பை அடுத்து கிரனேட்டை வெடிக்க வைத்து தற்கொலை செயததாக ஒரு தகவல் தெரிவித்தது.

உயிரிழந்த இருவரும் காணப்பட்ட பிரதேசத்துக்கு அருகில் கை

(14ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை அன்புவழிபுரத்தில் நேற்று அதிகாலை மோதல்

### இடையில் சிக்கி பெண் உயிரிழப்பு

திருகோணமலை,ஜூலை22

திருகோணமலை அன்புவழிபுரம் பகுதியில் நேற்று அதிகாலை 1.30 மணி அளவில் விடுதலைப் புலிகளுககும் இராணுவத்தினருக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த மோதல்களின் இடையில் சிக்கி பெண் ஒருவர் உயிரிழந்தார்.

அன்புவழிபுரத்தில் பதுங்கியிருநத படையினர் அப்பகுதியில் சென்ற விடுதலைப் புலிகளின் குழு ஒன்றின் மீது தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து இந்த மோதல் ஆரம்பமானதாக தெரிவிக்கப்பட்டது. சுமார் 40நிமிடங்கள் அப்பகுதியில் தொடர்ச்சியான வேட்டுச் சத்தங்கள் கேட்டதாகப் பிரதேச வாசிகள் கூறினர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்




புளொட் அமைப்பின் வீரமக்கள் தின நிகழ்வுகளின் இறுதி வைபவம் கடந்த வாரம் நடைபெற்றது.

யாழ்.முற்றவெளியில் நடைபெற்ற இறுதி நிகழ்வுகளின் போது தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபிக்கு முன்பாக முகப்பு வளைவு திறந்து வைக்கப்பட்டது. '4 ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு உயிர்க்கொடை உத்தமர் நினைவாலயம்' என்று எழுதப்பட்ட வளைவின் தோற்றத்தை முதல் படத்தில் காணலாம்.

முற்றவெளியில் நினைவுத் தூபிக்கு அருகே இடம்பெற்ற அஞ்சலி உரை நிகழ்வில் இடம்பெயர்ந்த வடக்கு முஸ்லீம்களின் அமைப்பின் பிரதிநிதி எஸ்.எம்.ஹமீட், புளொட் அமைப்பின் சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா, ஸ்ரார் கல்வி நிறுவன அதிபர் இரா. செல்வவடிவேல் ஆகியோர் உரையாற்றுவதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம். (ஐ)

# சர்வஜன வாக்கெடுப்புக்கு முன் சம்பள உயர்வு வழங்க வேண்டும்

## தொழிற்சங்க ஒன்றியம் அரசிடம் கோரிக்கை

கொழும்பு,ஜூலை22

சர்வஜன வாக்கெடுப்புக்கு முன்னதாக, அரசு ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்குமாறு அரசிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

'வாழ்க்கையைக் கொண்டு நடத்தத் தேவையான சம்பளத்தைப் பெற்றுக் கொள்வதற்கான தொழிற்சங்கங்களின் ஒன்றியம்' என்ற தொழிலாளர் கூட்டமைப்பு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

அடுத்த மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வஜன வாக்கெடுப்புக்கு முன்னதாக அரச ஊழியர்கள ஊதியம் 6ஆயிரத்து 841 ரூபாவால் அதிகரிக்கப்பட வேண்டுமென்றும் -

இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி எதிர்வரும் 26ஆம் திகதி கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாகவும் -

அத்துடன் இந்த வேண்டுகோளை வலியுறுத்தி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி அரச ஊழியர்கள் ஒருநாள் அடையாளப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவிருப்பதாகவும் -

மேற்படி கூட்டமைப்பின் பிரதம அமைப்பாளர் அமரசிறி கெடிலே ஆராச்சி தெரிவித்தார்.

தமது சம்பள அதிகரிப்புக் கோரிக்கைக்குச் சாதகமான பதிலை அரசு சர்வஜன வாக்கெடுப்புக்கு முன்னர் தெரிவிக்கவேண்டுமென்று கோரும் மகஜரில் ஒரு லட்சம் அரசு ஊழியர்களின் கையெழுத்துக்களைப் பெறறு ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க உள்ளதாக கெடிலே ஆராச்சி மேலும் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள 196 தொழிற் சங்கங்கள் இந்த ஒன்றியத்தில் இணைந்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (ஐ-ஒ)

# இரு கூட்டுறவுச் சங்கங்களில் நிறுவை அளவையில் மோசடி!

## திடீர் பரிசோதனையில் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை22

இடம்பெயர்ந்த மக்களுக்கு இலவசமாக வழங்கப்படும் நிவாரணப் பொருள்களின் விநியோகத்தின்போது நிறுத்தல் அளவைகளில் மோசடி இடம்பெற்றிருப்பதை உள்நாட்டு வியாபார பரிசோதகர்கள் திடீர்பரிசோதனை மூலம் கண்டுபிடித்துள்ளனர்.

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சிப் பகுதியில் இயங்கிவரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலேயே நிறுத்தல் அளவைகளில் மோசடி செய்யப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த 9ஆம் திகதி நிறுத்தல் அளவைப் பரிசோதகர்களும் உள்நாட்டு வியாபாரப் பரிசோதகர்களும் கூட்டாக இணைந்து குறிப்பிட்ட சங்கக் கிளைக் கடைகளில் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின்போது இந்த மோசடி அம்பலமானது.

பொதுமக்கள் கொடுத்த முறைப்பாடுகளை அடுத்து ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் நிவாரணமாக வழங்கப்பட்ட பன்னிரெண்டரைக் கிலோ அரிசியை மீண்டும் நிறுத்தபோது அதில் அரைக்கிலோ அரிசி குறைவாக இருந்தது கண்டறியப்பட்டதாகவும் -

இன்னொரு கூட்டுறவுச் சங்கத்தில் நிவாரணமாக வழங்கப்பட்ட 27 கிலோ 900 கிராம் அரிசியை மீள நிறுத்தபோது அதில் 700 கிராம் அரிசி குறைவாக இருந்தது கண்டறியப்பட்டதாகவும் -

தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இரு சங்கங்களிலும் இடம்பெற்ற நிறுவை அளவை மோசடிகள் தொடர்பாக யாழ்.அரச அதிபருக்கு முறையிடப்பட்டுள்ளதாகவும் -

அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் -

உள்நாட்டு வியாபாரப் பரிசோதகர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை -

வடமராட்சியில் மற்றொரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை ஒன்றில் உள்ள மேடைத்தராசுக்கு 1984 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முத்திரை இடப்படாமல் இருப்பது கண்டறியப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பாவனையாளர்கள் பொருள்களைக் கொள்வனவு செய்யும்போது விழிப்பாக இருந்து நிறை அளவுகளைச் சரிபார்த்துப் பெற்றுக்கொள்ளுமாறும் மோசடி செய்யும் வர்த்தகர்கள் தொடர்பான விவரங்களைத் தமக்குத் தெரியப்படுத்துமாறும் நிறுவை அளவை பரிசோதகர்கள் மற்றும் உள்நாட்டு வியாபாரப் பரிசோதகர்கள் கூட்டாகக் கோரியுள்ளனர். (ஐ-6)

# அதிசிறப்புத் தர கிராம அலுவலரின் எண்ணிக்கையைக் கூட்ட கோரிக்கை

## அமைச்சர் டக்ளஸுக்கு சங்கம் மகஜர்

யாழ்ப்பாணம், ஜூலை22

ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கும் அதிசிறப்புத், தரத்தைச் சேர்ந்த ஒரு கிராம உத்தியோகத்தரையாவது நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென யாழ். மாவட்ட கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்.மாவட்ட கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தைச் சேர்ந்த குழுவொன்று நேற்று அமைச்சரைச் சந்தித்து கலந்துரையாடியது. தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் அவரிடம் கையளித்தது.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள கோரிக்கைகள் வருமாறு:-

★ 15 வருட சேவையை நிறைவு செய்த கிராம உத்தியோகத்தர் ஒருவரை தரம் Iக்கு உயர்த்துதல்

★ கிராம உத்தியோகத்தர்களுக்கான இடர்காலக் கொடுப்பனவைப் பெற்றுக்கொடுத்தல் -

★ அவசரகாலச் சட்டத்தின்கீழ் பொலீஸாருக்கு வழங்கப்படுவதைப் போன்ற கொடுப்பனவை கிராம உத்தியோகத்தர்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுத்தல் -

★ தற்காலிக கிராம உத்தியோகத்தர்களை நிரந்தரமாக்குதல் -

★ பட்டதாரிகளான கிராம உத்தியோகத்தர்களை பதவியுயர்த்தி சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தல் -

★ அலுவலகங்களுக்கு தளபாடங்களை வழங்க நடவடிக்கை எடுத்தல் -

★ இனம் காண முடியாத பிரேதங்களை அடக்கம் செய்வதற்கான செலவை இரட்டிப்பாக்குதல் -

★ வரிவிலக்குடன் மோட்டார் சைக்கிள் வாங்குவதற்கு ஏற்பாடு செய்தல்-

★ நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, மருதங்கேணி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை பிரதேச செயலகங்களாகத் தரம் உயர்த்துதல் -

★ மீளக்குடியமர்வுப் படிவம், மதிப்பீட்டுப்படிவம் ஆகியவற்றுக்கான கொடுப்பனவை அதிகரிக்க வேண்டும்.

மேற்படி கோரிக்கைகள் குறித்து பரிசீலனை செய்து விரைவில் உரிய நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்தார் என யாழ்.மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கத் தலைவர் க.சிவராசா தெரிவித்தார். (ஐ-7)

### கொழும்பு ஆர்ப்பாட்டங்களின்போது

# செய்தியாளர்கள் வேடத்தில் நடமாடிய படையினர்!

## தகவல் சேகரித்ததாகக் குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூலை22

அரசின் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராக தலைநகர் கொழும்பில் கடந்த வியாழனன்று எதிர்க்கட்சிகள் நடத்திய எழுச்சி ஆர்ப்பாட்டங்களின்போது ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த படையினர் சிலர் செய்தியாளர்கள் போன்ற பாவனையில் நடமாடித் தகவல்களைச் சேகரித்ததாக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் முறையிட்டிருக்கிறார்.

தம்மை பி.பி.ஸி. நிறுவனத்தின் செய்தியாளர்கள் என்று கூறிக்கொண்டே ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த நால்வர் ஆர்ப்பாட்டக்காரர்கள் மத்தியில் நடமாடித் தகவல்களைச் சேகரித்ததாகவும் -

அவர்கள் பி.பி.ஸி. நிறுவனத்தின் அடையாள அட்டைகளை வைத்திருந்ததுடன் செய்தியாளர்கள் பயன்படுத்தும் தொப்பிகளையும் அணிந்திருந்ததாகவும் முறையிடப்பட்டுள்ளது.

ஐதேகட்சி நாடாளுமன்ற உறுப்பினரான எம்.பி. ரஞ்சித் அலுவிஹார என்பவர் இது குறித்து கொழும்பில் உள்ள பி.பி.ஸி. செய்தியாளர் பிரான்ஸிஸ் ஹரிசனிடம் முறையிட்டிருக்கிறார்.

செய்தியாளர்கள் போன்று காணப்பட்ட அவர்களுடன் பேசமுற்பட்டபோது அவர்கள் நைஸாக மறைந்து தப்பிவிட்டதாகவும் பின்னர் பொலீஸாரின் உதவியுடன் விசாரித்தபோது அவர்கள் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்ததாகவும் அலுவிஹார எம்.பி. பி.பி.ஸி. செய்தியாளருக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் தெரிவித்திருக்கிறார். (ஐ)

# யாழ். பொது நூலகத்துக்கு ஒரு தொகுதி புத்தகங்கள்

## படையினர் விரைவில் வழங்குவர்

யாழ்ப்பாணம்,ஜூலை22

யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் யாழ். பொது நூல் நிலையத்துக்கென ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்புச் செய்யவுள்ளது.

இதற்கென 652 தமிழ் நூல்களும் 272 ஆங்கில நூல்களும் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டன.

போக்குவரத்து அமைச்சின் முகாமையாளரிடம் இந்த நூல்களைப் பெற்றுத்தரும்படி இராணுவத் தளபதி கேட்டுக் கொண்டதையடுத்து இந்த நூல்கள் கிடைத்துள்ளதாகவும் -

இவ்வாறு பெறப்பட்ட நூல்கள் யாழ்.பொது நூலகத்துக்கு விரைவில் கையளிக்கப்படவுள்ளதாகவும்-

யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

### கொடிகாமம் - பருத்தித்துறை வீதியோரம்

# பற்றைகள், பனை வடலிகளை வெட்டி அகற்றும் படையினர்

சாவகச்சேரி,ஜூலை22

கொடிகாமம் - பருத்தித்துறை வீதியின் இரு மருங்கிலும் உள்ள பற்றைகள், பனம் வடலிகள் என்பன - படையினரால் வெட்டி அகற்றப்பட்டு வருகின்றன.

வீதிப் போக்குவரத்துப் பாதுகாப்புக் கருதி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரியவருகிறது.

இதேவேளை -

கொடிகாமம் - யாழ்ப்பாண வீதியிலும் வீதிகளின் இரு மருங்குகளிலும் உள்ள பற்றைகள், மரங்கள் வெட்டப்பட்டு வருகின்றன. வீடுகளின் வளவு களில் உள்ள மாமரங்கள், பலாமரங்கள் என்பனவற்றின் கிளைகள், வெட்டி அகற்றப்படுகின்றன. (ஐ-31)

### ஜனாதிபதிக்கு எதிராக

# குற்றப் பிரேரணை தயாரிக்க ஐவர் கொண்ட குழு நியமனம்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீதானகுற்றப் பிரேரணையைத் தயாரிக்கவென ஐவர் கொண்ட குழு ஒன்றை எதிர்க்கட்சிகள் நியமித்துள்ளன.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கரஸின் தலைவர் அ.விநாயகமூர்த்தி, ஐ.தே.கட்சியைச் சேர்ந்த டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார, கே.என்.சொக்ஸி, டிரோன் பெர்னாண்டோ, மகிந்த சமரசிங்க ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற எதிர்க்கட்சித் தலைவர்களுக்கான கூட்டத்தில் வைத்து இந்தக் குழுவினர் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ-7-3-4)



ஜி-8 மாநாடு நடைபெறும் இத்தாலியின் ஜெனோவா நகர வீதிகளில் பொலிஸாருக்கும் உலக மயமாதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே மோதல்கள் இடம்பெறுகின்றன.

மோதல்கள் நடைபெறும் இடத்துக்குள் நுழைய முயற்சிக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிஸார் தடுப்பதையும், ஆர்ப்பாட்டக்காரர்களின் சீற்றத்துக்கு இலக்கான கார்களில் ஒன்றையும், பொலிஸார் வீசிய கண்ணீர்ப்புகைக் குண்டுகள் திருப்பி எறியப்பட்டதால் அவர்கள் தடுமாறுவதையும் மோதலில் காயமடைந்த பொலிஸார் ஒருவரையும் படங்களில் காணலாம். (ஒ)

இத்தாலியில் ஜி-8 மாநாட்டுக்கு எதிராக

# ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் மீது பொலிஸார் சுட்டதில் ஒருவர் பலி!

ஜெனோவா,ஜூலை22

**இத்தாலியில் நடைபெறும் ஜி- 8 மாநாட்டின் போது, ஆர்ப்பாட்டங்கள் நடத்திவரும் உலக மயமாதலுக்கு எதிரான அமைப்பினர் மீது பொலிஸார் சுட்டதில் 23 வயதான மாணவன் ஒருவர் உயிரிழந்தார். மாநாட்டின் ஆரம்ப நாளான நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.**

உலகின் பணக்கார நாடுகளாகக் கருதப்படும் அமெரிக்கா, ஜப்பான், ஜேர்மனி, பிரான்ஸ், கனடா, பிரிட்டன், இத்தாலி மற்றும் ரஷ்யா ஆகிய 8 நாடுகளின் தலைவர்கள் பங்குபற்றும் ஜி-8 மாநாடு இத்தாலியின் துறைமுக நகரான ஜெனோவாவில் கடந்த வெள்ளியன்று ஆரம்பமாகியது.

உலகமயமாதலுக்கு எதிரானவர்கள், பல்லாயிரக்கணக்கில் கூடி, மாநாடு நடைபெறும் பகுதியில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களைக் கட்டுப்படுத்த சுமார் 20 ஆயிரம் இத்தாலியப் பொலீஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் மாநாட்டின் ஆரம்ப தினத்தன்று ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கிப் பொலீஸார் சுட்டதில் மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தையடுத்து ஜி-8 மாநாட்டுக்கு எதிர்ப்பு மேலும் வலுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ)

டில்லியில் உள்ள பூர்வீக வீட்டில்

# முஷாரப் கால்பட்ட தீட்டு கங்கை நீர் தெளித்து கழிப்பு

## இந்துத்துவ அமைப்பு செய்தது

பாகிஸ்தானிய அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப்பின் கால்பட்டதால் தீட்டுப்பட்டதாகக் கூறி புதுடில்லியில் அவரது பூர்வீக வீடு மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் இந்துத்துவ அமைப்பு ஒன்று கங்கை நீர் தெளித்து தீட்டுக் கழிக்கும் சடங்கைச் செய்துள்ளது.

உதய அரங்கில்

கடந்தவாரம் இந்தியா வந்திருந்த முஷாரப், பாகிஸ்தான் பிரிவினைக்கு முன்னர் தனது பெற்றோர் வாழ்ந்த - தான் பிறந்த டில்லி வீட்டை சென்று பார்வையிட்டார்.

முஷாரப் அங்கு வந்துபோனதால் அப்பகுதி தீட்டு பட்டுவிட்டதாகக் கூறி, அகில பாரதிய வித்தியார்த்தி சேவா என்ற இந்து அமைப்பினர் நேற்று முன்தினம் சூரிய உதயத்தின் போது முஷாரப்பின் பூர்வீக வீட்டுக்குச் சென்று கங்கை நீரைத் தெளித்து மந்திரங்கள் கூறி மூன்று முறை அப்பகுதியை வலம் வந்ததாக, அங்கு வசிப்பவர்கள் தெரிவித்தனர். (ஒ)

முதல்வர் பதவி ஏற்றது தொடர்பான

# ஜெயலலிதாவுக்கு எதிரான ரிட் மனுக்கள் உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு ஏற்பு

புதுடில்லி,ஜூலை22

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா தமிழக முதல்வராகப் பதவியேற்றுக் கொண்டதை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட ஏராளமான ரிட் மனுக்களை விசாரணைக்கு ஏற்றுக்கொள்வதாக இந்திய உச்ச நீதிமன்றம் நேற்று முன்தினம் தெரிவித்தது.

நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவர் முதலமைச்சர் பதவியில் நீடிக்கலாமா? என்ற மிக முக்கிய சட்டப் பிரச்சினை இருப்பதால்,

இந்த மனுக்கள் மீதான விசாரணையை ஆகக் கூடிய நீதிபதிகள் அடங்கிய குழுவிடம் கையளிப்பதாகவும் -

அந்த விசாரணையை முடிந்தவரையில் விரைவாக நடத்தி முடிக்கக் கோருவதாகவும் -

3 நீதிபதிகளைக் கொண்ட உச்ச நீதிமன்ற அமர்வு தெரிவித்தது.

எதிர்வரும் செப்ரெம்பர் 3ஆம் திகதி ஆரம்பமாகும் வாரத்தில் விசாரணைகள் தொடங்கப்படும் என்றும்-

மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஜெயலலிதா உட்பட பிரதிவாதிகளுக்கு இது தொடர்பாக பதிலளிக்க 4 வாரங்கள் அவகாசமளிப்பதாகவும் -



நீதிபதிகள் மேலும் தெரிவித்தனர்.

தனக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுக்களை உச்சநீதிமன்றம் ஏற்றுக்கொண்டது குறித்து ஜெயலலிதா கருத்துத் தெரிவிக்கையில்,

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கூறியதற்கு மேல், தான் கூற எதுவுமில்லை என்றார்.

ஜெயலலிதா முதல்வராகப் பதவியேற்றது செல்லாது என்று அறிவிக்கும்படி தி.மு.க. சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட மனு உச்ச நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

## வட லண்டனில் கட்டடம் இடிந்து ஐவர் பலி!

லண்டன், ஜூலை22

வடக்கு லண்டனில் நேற்று அதிகாலை 3 மாடிக்கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் 5பேர் இடிபாடுகளுக்குள் சிக்கி இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. (ஒ)

என்றாவது உயிர்ப்பார் என்ற நம்பிக்கையில்

# தந்தையின் சடலத்தை 13 வருடங்கள் காத்தவர்

டோக்கியோ, ஜூலை22

ஜப்பானில் உள்ள ஜூகோ ஹோமோ நகரில் தனது தந்தையின் சடலத்தை ஒருவர் 13 ஆண்டுகளாக குளிர்சாதனப் பெட்டியில் வைத்துப் பாதுகாத்து வந்துள்ளார்.

52 வயதான இந்த நபர் இறந்து போன தனது தந்தை என்றாவது ஒரு நாள் உயிர்பெற்று எழுவார் என்ற நம்பிக்கையிலேயே விசேட குளிர்சாதனப்பெட்டியில் தந்தையின் உடலை வைத்துப் பாதுகாத்து வந்துள்ளார். இந்த நிலையில்-

கடந்த சில மாதங்களாக இவர் வீட்டு மின்கட்டணத்தைச் செலுத்தவில்லை. அதனால் இவரது வீட்டின் மின் இணைப்புத் துண்டிக்கப்பட்டது.

மின் இணைப்புத் துண்டிக்கப்பட்டதனால் இயங்காத குளிர்சாதனப் பெட்டியில் இருந்த சடலம் அழுகித் துர்நாற்றம் வீச ஆரம்பித்தது. இது குறித்து அயலவர்கள் பொலீஸாரிடம் முறையிட்டனர். பொலீஸார் உடனடியாக அந்த வீட்டைச் சோதனையிட்ட போது குளிர்சாதனப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்த சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் இது தொடர்பாக அந்த நபர் மீது நடவடிக்கை எடுக்க சட்டத்தில் இடமில்லாததால் சடலத்தை எரிக்குமாறு பொலீஸார் அறிவுறுத்தினர். தந்தையின் சடலத்தை அரிக்க அவர் உடன்படவில்லை. ஆகவே தற்போது சடலத்தை எரிக்க அவரது உறவினர்கள் மூலம் அவரை இணங்கவைக்க பொலீஸார் முயற்சித்து வருகின்றனர். (ம-10)

யுத்தம் குறித்து விசாரிக்கச் சென்ற

# ஐரோப்பியப் பிரதிநிதிகள் மஸிடோனியாவில் மாயம்

லண்டன், ஜூலை22

மஸிடோனிய மோதல்கள் குறித்து விசாரிக்கச் சென்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் மூன்று பார்வையாளர்கள் காணாமற் போயுள்ளனர்.

மஸிடோனிய இராணுவத்துக்கும், அல்பேனியத் தீவிரவாதிகளுக்குமிடையில் தொடரும் மோதல்களைத் தடுத்து, மோதலில் ஈடுபடுபவர்களைப் மீண்டும் பேச்சில் கலந்துகொள்ள வைக்கும் நோக்கத்துடன் சென்றவர்களே காணாமற் போயுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளின் குழு மோதல் நடைபெற்ற பகுதியொன்றுக்குச் சென்றதாகவும் -

அப்பகுதியில் பாரிய வெடிச்சத்தம் கேட்டதைபடுத்து அந்தக் குழுவினருடனான தொடர்பு துண்டிக்கப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் சமாதானத் திட்டத்தின் அடிப்படையில் மஸிடோனிய அரசுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே நடந்த பேச்சு தோல்வியடைந்ததாக அறிவிக்கப்பட்ட சமயத்தில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

மஸிடோனிய சனத்தொகையில் 20 சதவீதமாக உள்ள அல்பேனியர்களின் தாய்மொழியை அங்கு உத்தியோகபூர்வ மொழியாக்கும் அல்பேனியத் தலைவர்களின் கோரிக்கைக்கு மஸிடோனிய அரசு மறுத்ததாலேயே பேச்சு தோல்வியடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அல்பேனியர்கள் அதிகம் வாழும் மஸிடோனிய எல்லைப்புறப் பகுதிகளை கொசோவாவுடன் இணைக்க போராடும் தீவிரவாதிகளுடன் மஸிடோனிய இராணுவம் மோதிவருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

## அதிகாரிகளுக்கு ஆங்கிலம் கற்பிக்க சீனா நடவடிக்கை

பெய்ஜிங்,ஜூலை22

2008ஆம் ஆண்டில் ஒலிம்பிக் போட்டிகள் சீனாவில் நடைபெற உள்ளதையடுத்து சுமார் 20 ஆயிரம் பொது சேவைப் பணியாளர்களுக்கு, ஆங்கிலம் கற்பிக்க சீன அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஒலிம்பிக் போட்டிகளின் போது வெளிநாட்டவருடன் பேசுவதற்காகவே சீன அதிகாரிகளுக்கு ஆங்கிலம் போதிக்கப்படுகிறது.

# அமெரிக்கா வேண்டுமென்றே ஈராக்குடன் மோதுகிறது

## ஐ.நா. முன்னாள் அதிகாரி குற்றச்சாட்டு

வாஷிங்ரன்,ஜூலை22

அமெரிக்கா வேண்டுமென்றே ஈராக்குடன் மோதல் போக்கைக் கடைப்பிடிப்பதாக ஐ.நாவின் முன்னாள் ஆயுதக் கண்காணிப்பாளர் ஸ்டல் ரிட்டல் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஈராக்கில் 1995 ஆம் ஆண்டிலேயே ஆபத்தான ஆயுதங்கள் பெரும்பாலும் அழிக்கப்பட்டுவிட்டதாகவும் -

வளைகுடா யுத்தத்தின் பின்னர் ஐ.நா. ஆயுதக் கண்காணிப்புக் குழு ஈராக்கில் மேற்கொண்ட பணிகளை அமெரிக்கா வேண்டுமென்றே குறை கூறுவதாகவும் -

அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் ஈராக்கை மேற்கு நாடுகளுக்கு எதிராக அமெரிக்கா தூண்டிவிடுவதாகவும் அவர் தெரிவித்தார்.

யுத்த முனைகளுக்குள் அடங்காத அதி பயங்கர ஆயுதங்களை ஈராக் தற்போதும் வைத்திருப்பதாக அமெரிக்கா கூறிவருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

# அமர்நாத்தில் குண்டுவெடிப்பு எட்டு பேர் உயிரிழப்பு

அமர்நாத்,ஜூலை22

இந்தியாவில் அமர்நாத் புனித குகைக் கோயிலுக்குச் செல்லும் வழியில் நேற்று இடம்பெற்ற இரு குண்டுவெடிப்புச் சம்பவங்களில் இரு பொலீஸார் உட்பட 8 பேர் உயிரிழந்தனர்; 15 பேர் காயமடைந்தனர்.

இந்தக் குண்டுவெடிப்புகளுக்குக் காரணமானவர் என்று கருதப்படும் ஒருவரைப் பொலீஸார் சுட்டுக் கொன்றனர்.

முதல் குண்டுவெடிப்பு நேற்று அதிகாலை 1.25 மணிக்கும் இரண்டாவது குண்டுவெடிப்பு 1.50 மணிக்கும் இடம்பெற்றது. இந்தக் குண்டு வெடிப்புகளை அடுத்து அமர்நாத் யாத்திரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இமயமலைப் பகுதியில் உள்ள அமர்நாத் குகையில் குறிப்பிட்ட காலப்பகுதியில் தானாக உருவாகும் பனிலிங்கத்தைத் தரிசிக்க ஆண்டு தோறும் பல ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் செல்வது வழக்கம். (ஒ)

# சங்கானைச் சந்தையில் மலகூடம் அமைக்க கோரிக்கை

மூளாய், ஜூலை 22
சங்கானை பொதுச்சந்தையில் பொதுமலசலகூடம் அமைத்துத் தரும்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக மேற்படி சந்தையில் பொதுமலசலகூடம் எதுவும் இல்லை. இதனால் சந்தைக்கு வரும் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதுண்டு. அத்துடன் சந்தையின் சுற்றுப்புறச் சூழலும் மோசமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றது. இதனைத் முன்னிட்டு பொது மலசலகூடம் அமைத்துத் தரும்படி வலி.மேற்குப் பிரதேச செயலரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

(ஐ-99)

# விரிவுரையாளர் இடமாற்றம்; ஆசிரிய மாணவர் ஆட்சேபம்

அச்சுவேலி, ஜூலை 22
பலாலி ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளர்கள் சிலர் இடமாற்றம்செய்யப்பட்டிருப்பதுகுறித்து இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கு ஆசிரிய மாணவர்கள் முறையிட்டிருக்கின்றனர்.

பலாலி ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளர்களில் குறிப்பிட்ட ஒரு பகுதியினரை இடமாற்றம் செய்வதற்கு எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கை, கலாசாலையின் வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிக்கும் என்பதால் மேற்படி கலாசாலையின் வளர்ச்சிக்கு ஏற்புடைய விதத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு ஆவன செய்யுமாறு ஆசிரிய மாணவர்கள் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திடம் முறையிட்டிருக்கின்றனர்.

விரிவுரையாளர்களின் இடமாற்றத்தினால் பயிற்சிகள் பாதிக்கப்படாமல் இருக்க உரிய நடவடிக்கை எடுப்பதாக தமிழர் ஆசிரியர் சங்க வட்டாரங்கள் உறுதியளித்துள்ளன.

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் நிலவும் விரிவுரையாளர்பற்றாக்குறை தொடர்பாக மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர், கோப்பாய், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர்கள், கடந்த ஞாயிற்றுக்கிழமை வடக்கு அபிவிருத்தி புனர் வாழ்வு புனரமைப்பு வடக்கு — கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து எடுத்துக் கூறியதும் —

அதனையடுத்து மத்திய மாகாணக்கல்வி அமைச்சின் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பலாலி ஆசிரிய கலாசாலையில் கடமையாற்றிய நான்கு விரிவுரையாளர்களைக் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு இடமாற்றம் செய்வதற்கு அமைச்சர் ஒழுங்குகள் மேற்கொண்டிருப்பதும் — தெரிந்தவையே

(ஐ-11)

கோழி வளர்ப்பு சுயதொழில் ஊக்குவிப்பு

**தவணைக் கடன் திட்டம்**

கோழி வளர்ப்புக்கான கூடுகள் (முதலாம் தொகுதி) வழங்கப்பட்டு வருகின்றன.

இரண்டாம் தொகுதி கூடுகளுக்கான விண்ணப்பங்களை ஆர்வமுள்ளவர்கள் தமது பகுதி

1. கால்நடை வளர்ப்போர் சங்கம்
2. கூட்டுறவுச்சங்கம்

என்பன மூலம் எம்முடன் தொடர்பு கொண்டு கோழிக் கூடுகளை மாதாந்தத் தவணைக்கடன் செலுத்துதல் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:-

**பொன்னையா மரக்காலை**
பிரதான வீதி,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

(90260)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 15 — 03 — 1947

உதிர்வு 05 — 08 — 1997

**அமரர் பொன்னுத்துரை யோகநாதன்**
(வர்த்தக முகாமையாளர்/பதில் பொது முகாமையாளர், நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்)

திதி: 22-07-2001

அப்பா! உங்களை இழந்து
கண்கள் குளமாகி உருகுகின்றோம்.
ஆத்ம சாந்தியில்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**யோ. ரதிகா** (மனைவி)
**யோ. ரயோசன்** (மகன்)
**குடும்பத்தினர்.**

கோணாவளை லேன்,
கொக்குவில் கிழக்கு.

(90274)

# கரவெட்டி பிரதேச செயலகத்தின் கிராம மட்ட நடமாடும் சேவை

## வியாழனன்று உடுப்பிட்டியில் நடைபெறும்

வடமராட்சி, ஜூலை 22
வடமராட்சி தெற்கு மேற்கு (கரவெட்டி) பிரதேச செயலகப் பிரிவில் கிராம மட்டத்திலான நான்காவது நடமாடும் சேவை எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4. 30 மணிவரை உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச்சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

உடுப்பிட்டி, உடுப்பிட்டி வடக்கு, உடுப்பிட்டி தெற்கு, வல்வெட்டி, வல்வெட்டி மத்தி, சமரபாகு, இமையாணன், இமையாணன் மேற்கு, கரணவாய் வடக்கு, கரணவாய் வடமேற்கு ஆகிய பத்து கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தோர்களுக்கென இந் நடமாடும் பணிமனைச்சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, திட்டமிடல், புனர்வாழ்வு, புனரமைப்பு உட்பட 20 திணைக்களங்களின் சேவைகள் இந்த நடமாடும் பணிமனையின்போது வழங்கப்படும் என வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலாளர் செ.ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார்.

(ஐ-173)

## சோளப்பயிர் செய்கைக்கு ஊக்குவிப்பு

மூளாய், ஜூலை 22
வலிகாமம் மேற்குப் பகுதியில் சோளப் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சோளப் பயிர்ச்செய்கையில் ஆர்வம் உள்ள விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு நடுகைக்குத் தேவையான சோளம் மற்றும் உர வகைகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன. (ஐ-99)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

வலி.தென்மேற்கு, ஜூலை22
. வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி நாய்கள் எதிர்வரும் புதன்கிழமை முதல் பிடிக்கப்படவுள்ளன.

பிரதேசசபை எல்லைக்குள் வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நாய்களை முழுமையாக ஒழிப்பதற்கு மக்கள் ஒத்துழைக்காததால் இப் பிரதேசத்தில் விசர் நாய்களின் எண்ணிக்கை அதிகரித்ததை அடுத்துப் பின்னர் நாய்கள் நஞ்சூட்டி உடன் அழிக்கப்பட்டன.

(ஐ-185)

## சாரதியைத் தேடி பொலீஸார்வேட்டை

வடமராட்சி, ஜூலை 22
ரியூஷன் முடிந்து சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்த மாணவன் மீது மோதிவிட்டுத் தப்பியோடியதாகக் கூறப்படும் மோட்டார்சைக்கிளோட்டியைப் பருத்தித்துறைப் பொலீஸார் தேடி வருகின்றனர்.

பருத்தித்துறை ஓராங்கட்டைச் சந்தியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவனான தி. சிவதேவன் (15 வயது) என்பவர் காயங்களுக்குள்ளாகி மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

சைக்கிளில் வந்த மாணவனை மோதிய மோட்டார் சைக்கிள் நிற்காது வேகமாக ஓடிச்சென்று மறைந்ததாகக் கூறப்படுகின்றது.

காயத்துக்குள்ளான மாணவன் மோட்டார் சைக்கிளின் இலக்கத்தைப் பொலிஸாருக்குத் தெரிவித்திருந்ததை அடுத்தே மோட்டார் சைக்கிளையும், அதன் ஓட்டியையும் பருத்தித்துறைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

(உ-173)

# 'சார்க்' அமைச்சர்கள் கூட்டம் அடுத்த மாதம் கொழும்பில்

கொழும்பு, ஜூலை 22
தெற்காசிய நாடுகள் கூட்டமைப்பான 'சார்க்' அமைப்பின் உயர் அதிகாரிகள் மட்டத்திலான கூட்டம் அடுத்த மாதம் 6 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

'சார்க்' நாடுகளின் வெளிவிவகார அமைச்சுச் செயலாளர்கள் கலந்து கொள்ளும் இந்தக் கூட்டத்தில் 'சார்க்' உச்சி மாநாட்டை விரைவில் நடத்துவது குறித்து ஆராயப்பட உள்ளது.

பாகிஸ்தானின் இராணுவ அதிபர் கலந்து கொள்ளும் பட்சத்தில் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதில்லை என்ற இந்தியாவின் பிடிவாதத்தால் 'சார்க்' மாநாடு பிற்போடப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

(ஓ-4)

## சங்கானைக் கல்விக் கோட்டத்தில்

# 7ஆம், 8 ஆம் தர மாணவருக்கு விஞ்ஞான நூல் வழங்கவில்லை

வலி. மேற்கு, ஜூலை 22
சங்கானைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் கல்வி கற்கும் 7 ஆம், 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு விஞ்ஞானப் பாடநூல் இதுவரை கிடைக்கவில்லை.

வலிகாமம் மேற்குப் பிரதேச சிறுவர் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

இக்குழுக் கூட்டம் செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் கலாநிதி க. குணராசா தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இக்கூட்டத்துக்கு சங்கானைக் கல்விக் கோட்டப் பணிப்பாளர் தொடர்ந்து சமூகம் அளிக்காமல் இருப்பதனால் பாடசாலைகளில் கற்கும் . மாணவர்களின் பிரச்சினைகள், செயற்பாடுகள் குறித்து அறிந்து கொள்ள முடியாது இருப்பதாகக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-175)

# 2,000 தென்னங்கன்றுகள் விநியோகிக்க ஏற்பாடு

மூளாய், ஜூலை 22
வலிகாமம் மேற்குப் பகுதியில் இவ்வாண்டு இரண்டாயிரம் நல்லினத்தென்னங்கன்றுகள் விநியோகிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தென்னை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் இத் தென்னங்கன்றுகள், தருவிக்கப்படவுள்ளன.

வலி. மேற்குப் பிரதேச செயலகமும் கமநலசேவை நிலையமும் இணைந்து இத் தென்னங்கன்றுகளை தேவையான விவசாயிகளுக்கு நியாயமான விலையில் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளன. (ஐ-99)

## புலோலி குரும்பைகட்டியில்

# தவறணை நிறுவுவதற்கு பொதுமக்கள் ஆட்சேபம்

வடமராட்சி, ஜூலை 22
. புலோலி குரும்பைக்கட்டி சனசமூக நிலையத்துக்கு 200 மீற்றர் தூரத்தில் உள்ள கம்பாவத்தை கிராம வீதி ஓரத்தில் கள்ளுத் தவறணை திறப்பதற்கு பலத்த ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சனசமூக நிலையம், வைரவர் ஆலயம் குடியிருப்புகள் கொண்ட இடத்தில் — பருத்தித்துறையிலுள்ள பிரபல பாடசாலைகளுக்கு மாணவ மாணவிகள் சென்று வரும் வீதி ஓரத்தில் —கள்ளுத் தவறணையை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இந்த இடத்தில் தவறணை அமைப்பதால் அது எமது சமூகத்தை பொருளாதார, பண்பாட்டு ரீதியாக சீரழிக்கும். இதனால் ஏற்படும் பாதகமான விளைவுகள் குறித்து நாம் மிகுந்த அச்சமும் வேதனையும் அடைந்துள்ளோம். என்று குரும்பைகட்டி சனசமூக நிலையம் பருத்தித்துறைப் பிரதேச சபைத் தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரனிடம் கையளித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மகஜரின் பிரதிகள் பருத்தித்துறை பிரதேச செயலாளர், பருத்தித்துறை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர், பருத்தித்துறை மதுவரி அத்தியட்சகர் யாழ் உள்ளூராட்சித் திணைக்கள சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(ஐ-173)

## மாநகரசபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 22
யாழ். மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு மேயர் நடராசா ரவிராஜ் தலைமையில் மாநகரசபை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

நிதிக்குழுவின் கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மேயர் ந. ரவிராஜ் தலைமையில் மாநகரசபை அலுவலகத்தில் இடம்பெறும். (ஐ-11)

உதயன்

## மோசமான செயல்

கடந்த 10 ஆம் திகதி மூடப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நாளை திறக்கப்படும் என்று நல்லதொரு செய்தியை யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை விடுத்திருக்கின்றார்.

பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவால் வழிநடத்தப்படும் இந்தப் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி தேசிய மட்டத்தின் அடிப்படையில் அமைந்திருந்தாலும்கூட, இந்தப் பல்கலைக்கழகம் ஈழத்தமிழர்களின் - குறிப்பாக குடாநாட்டுத் தமிழர்களின் - உயர்கல்விக் கலைக்கூடமாகவே மதிக்கப்பட்டு வருகின்றது.

பேராதனைப் பல்கலைக்கழகம் பேராதனைப் பிரதேசத்துக்கோ அல்லது கண்டிக்கோ அல்லது மலையகத்துக்கோ மட்டும் உரியதல்ல. அதற்கு அப்பால் நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் உரியதாக அது கணிக்கப்படுகிறது.

ஆனால் யாழ்.பல்கலைக்கழகம் அப்படிப்பட்டதல்ல. அது ஈழத்தமிழர்களின், குடாநாட்டு மக்களின் உயர் கல்விக் கோயில்.

அதனால்தான் -

பேராதனைப் பல்கலைக்கழகத்திலோ, கொழும்புப் பல்கலைக்கழகத்திலோ நடக்கும் கலாசாரச் சீரழிவுகளுக்கு எதிராக அந்தந்தப் பிரதேசங்களிலிருந்து பெரிதாக எதிர்ப்புகள் கிளம்புவதில்லை. மாறாக, யாழ்.பல்கலைக்கழகத்தை ஒட்டி நடக்கும் -'ராகிங்' உட்பட - அனைத்துக் கலாசாரப் பிரச்சினைகளும் இந்த மண்ணில் பூதாகரமாக உருப்பெருக்கிப் பார்க்கப்பட்டு, பெருங்குரலில் எதிர்ப்புகளும், பதில் நடவடிக்கைகளும் கிளம்புகின்றன.

சுருங்கக் கூறின், யாழ்.பல்கலைக்கழகம் இந்த மண்ணின் மலர்வு. அதனைப் பாதுகாப்பதும், பேணுவதும், அதன் மூலம் பயனீட்டுவதும் இந்த மண்ணின் பொறுப்பு; கடமை.

அதேபோல கைமாறாக இந்த மண்ணின் குரலாகவும், அதன் நாதமாகவும் ஒலிக்கவேண்டியது யாழ்.பல்கலைக்கழகத்தின் பண்பாகும்.

அந்தக் கடமையைச் செய்யும் போது பல்கலைக்கழகம் பல தடங்கல்களை எதிர்கொள்வது தவிர்க்க முடியாததாகும்.

குடாநாட்டு மக்களுக்கு எனச் சுயாதீனமாக ஒலிக்க வேண்டிய பல அமைப்புகள், இயக்கங்கள் இங்கு செயலிழந்துபோக எஞ்சியிருந்த ஒரேகுரல் யாழ்.பல்கலைக்கழகம் தான்.

இதனையே "அரசபயங்கரவாதத்திற்கும் ஆயுதக்குழுக்களுக்குமிடையே சுதந்திரமாகக் கருத்துக்களை வெளியிடுவதற்காகத் தமிழர் மத்தியில் எஞ்சியிருக்கும் ஒரே நிறுவனம் பல்கலைக்கழக சமூகமே!" - என்று தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் - ஒலுவில் வளாக - மாணவர் ஒன்றியம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தது.

எனவே யாழ்.பல்கலைக்கழக விடயங்களைக் கையாளும் அதிகாரிகள், அதனை வெறும் பல்கலைக்கழகச் சட்ட திட்டங்களுக்குள் மட்டும் உட்படுத்திப் பார்க்காமல், அதற்கு அப்பால் சமூகப் பொறுப்புணர்வுடனும் பார்க்க வேண்டியவர்களாகின்றனர்.

எந்த வன்முறையோ, பெருங் குழப்பங்களோ இடம்பெறாத நிலையில் - வெறும் மாணவர் பகிஷ்கரிப்பை மட்டும் வைத்துக் கொண்டு - பல்கலைக் கழகத்தை மூடியது தவறான செயல். அதற்குப் பொறுப்பானவர்கள் கண்டிக்கப்பட வேண்டும்.

பின்னர் பல்கலைக்கழகத்தைத் திறப்பதில் காட்டப்பட்ட இழுத்தடிப்பு அதிலும் மோசமான போக்காகும்.

அதைவிட, பல்கலைக்கழகம் மூடப்பட்டதை வைத்துக்கொண்டு மாணவர்களிடம் நிபந்தனையாக நன்னடத்தைக் கடிதங்களைக் கோரியதும், தாம் 'பந்தம்' பிடிக்கும் அரசியல்வாதிகள் கால்களில் போய் விழுமாறு மாணவர்களை வழிநடத்தி வற்புறுத்தியதும் மிகமிக மோசமான செயல்களாகும்.

சம்பந்தப்பட்டோர் இந்த அனுபவங்களிலிருந்து பாடங்களைப் படித்துக்கொள்வது நல்லது.

அத்துமீறும் இந்தியக் கடற்றொழிலாளர்களால்

# எழுவைதீவு மீனவர்களின் வலைகள் தொடர்ந்து நாசம்

எழுவைதீவிற்கு அப்பால் உள்ள ஆழ்கடல் பகுதியில் தொழில் புரியும் எழுவைதீவு மீனவர்களது வலைகள் தொடர்ந்து இந்திய மீனவர்களால் நாசப்படுத்தப்பட்டு வருவது குறித்து இப்பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் பலர் கவலை தெரிவித்துள்ளனர்.

தமது கடல் எல்லைக்குள் அத்துமீறிவரும் இந்திய மீனவர்களது றோலர்களே கடலில் விடப்படும் தமது வலைகளை அறுத்து நாசப்படுத்தி வருவதாக அவர்கள் தெரிவித்தனர்.

தொடர்ந்து இடம்பெற்றுவரும் இந்த நடவடிக்கைகளால் பல மீனவர்கள் தமது பெறுமதி வாய்ந்த வலைகளை இழந்துள்ளதுடன் அவர்களது தொழில் நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக எழுவைதீவு தோமையர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் செயலாளர் செ.யூயின் தெரிவித்தார்.

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக இப்பகுதி மீனவர்கள் வெளியிணைப்பு மோட்டார் பொருத்தப்பட்ட படகுகளில் சென்று மீன் பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதை அடுத்து கட்டுமரங்களில் சென்றே ஆழ் கடலில் தொழிலில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். (உ-16)

# நாட்டு நடப்பு

வெளிநாட்டால் வந்தான் தன்னை
விரும்பினாள் விமலராணி
ஒளித்திடாது காதல் மேவ
ஒருவாரத்தில் திருமணமுமாச்சு
களிப்புற்ற 'ஹனி மூன்' நள்ளிரவில்
கழன்றதவன் தலையின் டோப்பு
ஒளித்திருந்த கடப்பானை ஒன்று
ஒளிவிட்டுப் பிரகாசித்தது விடியற்காலை.

- விகடகவி -

# கெடு குடி சொற்கேளாது

நிலையற்ற பெரும்பான்மையால் உருவான "நித்திய கண்டங்"களை ஏதோ ஒரு வழியாகச் சமாளித்து வந்த தன் பொதுசன ஐக்கிய முன்னணி -

முன்யோசனையற்ற - தவறான கணிப்பீட்டின் அடிப்படையில் - தான் மேற்கொண்ட சில நடவடிக்கைகளால் -

நிலையான 'சிறுபான்மை'யாகக் குறுகிவிட்டதை உணர்ந்தவுடன் -

அதைப் பதவி விலகச்செய்து -

ஜனநாயக பாரம்பரியத்தைக் கட்டிக் காக்கின்ற புனிதமான கடமையைப் புறந்தள்ளிவிட்டு -

நாளிலும் பொழுதிலும் நாட்டினை நலிவடையச் செய்துவரும் உள்நாட்டுப்போர் -

அதற்குக் காரணமான இனக்குரோதம், போட்டி, பொறாமை -

போரின் நேரடி விளைவான - அகதிகள், அநாதைகள், அங்கவீனர், அகால மரணமடைவோர் ஆகியோர்களின் அதிகரிப்பு -

இவை தனித்தும் சேர்ந்தும் ஏற்படுத்திவரும் பதற்றம் - பொருளாதாரச் சீரழிவு - அரசியல், சமுதாய நெருக்கடி -

ஆகிய அனைத்தையும் அடியோடு ஒழித்து -

நாட்டிலே சாந்தியையும் - சமாதானத்தையும் - சந்தோஷத்தையும் - சந்துஷ்டியையும் நிரந்தரமாக ஏற்படுத்தவேண்டுமானால் -

1978ஆம் ஆண்டில் ஐ.தே.கட்சியின் தலைவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தயாரித்த - இன்றும் நடைமுறையில் இருக்கின்ற - பொருத்தமற்ற அரசியல் யாப்பு தூக்கி வீசப்பட்டு -

புதிய ஓர் அரசியல் யாப்பு உருவாக்கப்படல் வேண்டும் -

ஆனால் -

நானோ - என் அமைச்சர்களோ - நாடாளுமன்ற உறுப்பினர்களோ - எந்த ஒரு "முடிவை"யும் மக்கள் மீது திணிக்காமல் -

மக்கள் ஒவ்வொருவரும் நன்கு சிந்தித்து, பொருத்தமான முடிவொன்றை எடுக்கவேண்டும் என்பதற்காகவே -

நாடாளுமன்ற நடவடிக்கைகளைத் தற்காலிகமாக நிறுத்திவைத்து -

அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்துவதற்கு முடிவுசெய்துள்ளேன் என -

தன் வசமுள்ள சகல ஊடகங்களையும் பயன்படுத்தி -

இப்போதைய ஜனாதிபதி -

விளக்கியும் நீட்டியும் விவரித்தும் வருவது -

ஆட்சியிலே தொடர்கின்ற வாய்ப்பை எதுவரினும் விடன்; எவர் வரினும் கொடேன் என்ற தன் அந்தரங்க அபிலாஷையைப் பூசி மெழுகி மழுப்புவதற்காகவே -

என்பதைப் பெரும்பான்மையினருட் பெரும்பான்மையினரும் உணரத் தொடங்கிவிட்டனர் என்பதை -

அவர்களின் அறிக்கைகளும் பேச்சுக்களும் அரசியல் நடவடிக்கைகளும் சந்தேகத்திற்கிடமின்றிச் சான்றுகூறி வருகின்றன.

தான் அரசியலில் ஈடுபடுவதற்கும் - ஜனாதிபதித் தேர்தலிலே போட்டியிடுவதற்கும் -

பொருத்தமற்ற அரசியல் யாப்பைப் புதைகுழிக்குள் போடவேண்டும் -

சர்வாதிகாரத் தன்மை நிறைந்த நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறைக்குச் சாவுமணி அடிக்கவேண்டும் -

மோதல்களுக்குத் தூபமிடும் இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வு காணவேண்டும் -

என்பவையே முதலும் - முக்கியமும் - முழுமையுமான காரணங்கள் எனச் சொல்லி மக்களை நம்பவைத்து -

நிறைவேற்று ஜனாதிபதியாகி, மனதில் "நிறைவை" ஏற்ற சந்திரிகா -

இரண்டாவது தடவையாகப் போட்டியிட்ட போது -

அதே மக்களிடம் - அதே காரணங்களைக் கூறி - அதே பதவியைப் பெற்ற சந்திரிகா -

யார் எதிர்த்தாலும் அரசியல் அமைப்பை மாற்றுவேன் - இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வு காண்பேன் - இவற்றுக்காகவே 2006ஆம் ஆண்டு வரை நிறைவேற்று ஜனாதிபதியாக இருப்பேன் -

என வாயோயாமல், நாவோயாமல், வார்த்தை பிசகாமல் சொல்லி வந்த சந்திரிகா -

திடீரென்று மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையை - ஜனநாயக விரோதச் செயலை -

நாடாளுமன்றத்திலே பெரும்பான்மைப் பலத்தைப் பெற்ற எதிர்க்கட்சிகள் மட்டும்மல்லாமல் -

ஜனாதிபதியின் 'உள்வீட்டுப்பிள்ளை'களாகவும் அந்தரங்க ஆலோசகர்களாகவும் கருதப்படும் எஸ்.பி.திசநாயக்கா, ஜி.எல்.பீரிஸ் போன்றோரும் சிறுபான்மையினரின் நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்துபவர்களாகக் கருதப்படும் ஜெயராஜ் பெர்னாண்டோப்பிள்ளை, ஆறுமுகம் தொண்டமான் முதலியோரும் -

எதிர்க்கின்றார்கள் என்ற உண்மையை ஏற்றுக்கொண்டு -

இத்தனை எதிப்புக்களுக்கும் மத்தியில் - ஜனநாயக விரோதமான செயல்களைத் தொடர்ந்து - நாட்டிலே குழப்பத்தையும் நெருக்கடியையும் அழிவையும் ஏற்படுத்துவதைவிட -

எதிர்ப்பவர்கள் எதிர்த்துக்கொண்டிருக்க -

சாதகமான சூழ்நிலைகளை உருவாக்கி - பேசவேண்டியவர்களுடன் மனம் விட்டுப் பேசி - இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வு காண்பதற்காக -

நிறைவேற்று ஜனாதிபதிக்குரிய அதே அதிகாரங்களையும் உரிமைகளையும் பயன்படுத்தும்படி -

ஜனாதிபதியைத் தூண்டிச் செயற்பட வைப்பதற்கு -

அரசாங்கத்தை இன்னமும் ஆதரித்துவரும் 'எசமான விசுவாசமுடைய' சிறுபான்மைக் கட்சிகள் ஏன் முன்வரக் கூடாது?

எதிர்ப்புக்களின் மத்தியில் நடந்து கொண்டிருக்கும் அநியாயங்களுக்கு "ஆமாம் சாமி" போடுவதைவிட -

யார் - எவ்வளவுதான் எதிர்த்தாலும் -

நீதியையும் நியாயத்தையும் நிரந்தரமாக நிலைநாட்டி - எதிர்ப்புக்களையே "ஆதரவாக" ஆக்குவதற்கு உதவுவது மேலல்லவா?

சிறுபான்மை இனங்களின் நன்மைக்காகவே அரசுடன் ஒத்துழைத்து வருவதாகக் கூறிவரும் இக்கட்சிகள் -

தாம் ஒத்துழைக்காவிட்டால், அம்மையார் பாடு "அரோகரா" என்பதை உணர்ந்துள்ள இந்தக் கட்சிகள் -

"வாராது வந்த" மணியான இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தங்கள் "வாக்கை"யும் சிறுபான்மை இனங்களின் "வாழ்க்கை"யையும் காப்பாற்ற முன்வருவார்களா?

'கெடுகுடி சொற்கேளாது' என்பதை உணர்ந்தால் -

அந்தக் 'கெடு குடிக்கு' முண்டு கொடுப்பதை விட்டுவிட்டு -

அதனுடன் 'சண்டை'யிட்டு வெல்வது மேலல்லவா?

-சித்தன்.

# தொழில்துறை மேம்பாட்டுக்கு தனியான அலுவலகம் திறப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை22

யாழ்.தொழில்துறை மேம்பாட்டு அலுவலகம் ஒன்று எதிர்வரும் 26ஆம் திகதி யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதனால் திறந்து வைக்கப்படவுள்ளது.

கைத்தொழில் அபிவிருத்திச் சபை கட்டடத்தில் திறந்து வைக்கப்படவுள்ள இந்த அலுவலகத்தில் கைத்தொழில் தொடர்பான தகவல்கள் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்ற வசதிகளை கைத்தொழிலாளர்கள் பெற்றுக் கொள்ளமுடியும்.

இந்த அலுவலகத்தில் கடமையாற்றுவதற்காக தொழில்துறை திணைக்களம் இரு அலுவலர்களை நியமித்துள்ளது.

அலுவலகத் திறப்பு விழாவின் போது யாழ்நகரில் இயங்கும் வங்கிகளின் முகாமையாளர்களை உள்ளடக்கிய புதிய ஆலோசனைக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்படவுள்ளது.

வங்கி முகாமையாளர்களின் ஆலோசனைகளைப் பெற்று குடாநாட்டில் உள்ள கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு வங்கிகளுக்கூடாக பெற்றுக் கொடுக்கக்கூடிய கடன் வசதிகள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளதாகவும்-

குடாநாட்டின் தொழில்துறை நிறுவனங்கள் தொடர்பான விவரங்களும், புள்ளி விவரங்களும், இந்த அலுவலகத்தில் சேகரிக்கப்படவுள்ளதாகவும்-

தொழில்துறை திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-6)

## நாளை

ஆடி - 7
திங்கட்கிழமை
திதி: திருதியை
மாலை 6.56 வரை.
நட்சத்திரம் : மகம்
முன்இரவு 8.08 வரை.
சுபநேரம் : 12.02 - 1.32
ராகுகாலம் :7.32 - 9.02
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

சுறுசுறுப்புடனும், ஆர்வத்துடனும் செயல்படுபவனுக்குத்தான் இந்த உலகம் சொந்தம்.

# கட்டாக்காலி நாய்களை அழிக்க நடவடிக்கை!

தென்மராட்சி,ஜூலை22

கொடிகாமம் நகர் மற்றும் சந்தைப் பகுதிகளில் கட்டாக்காலியாக அலையும் நாய்களை நஞ்சூட்டி அழிக்கும் பணி எதிர்வரும் புதன்கிழமையன்று நடைபெறவுள்ளதால் அன்றைய தினம் வளர்ப்பு நாய்களைக் கட்டி வைக்குமாறு கொடிகாமம் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் என்.நிர்மலானந்தன் அறிவித்துள்ளார். (உ-117)


## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



# தடைகளை மீறி சமயம் வளர்த்த சாங்கோ பாங்கோ சுவாமிகள்

**சாங்கோ பாங்கோ சுவாமிகளின் 259 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரமாகிறது.**

இற்றைக்கு 275 வருடங்களுக்கு முன்பு இலங்கையை ஆண்டு வந்த ஒல்லாத அரசன், கத்தோலிக்க மதம் பரப்பும் பணியை முற்றாகத் தடைசெய்திருந்தான். ஆனால் இந்தக் கால கட்டத்தில், புனித பிலிப் நேரியாரின் பிரசங்கியார் சபைக் குருக்களாகிய - முக்திப்பேறு பெற்ற பட்டம் பெற்ற - அதி வந்தனைக்குரிய ஆசாயோசேவ்வாஸ் முனிவரும், யாக்கோமே கொன்சால்வெஸ் என்னும் சாங்கோ பாங்கோ சுவாமிகளும் அரசனின் தடையைத் தவிடு பொடியாக்கி மறை பரப்பும் பணியில மிகவும் தீவிரமாக ஈடுபட்டார்கள். இலங்கையில் முதன்முதலாக கத்தோலிக்க மறைபரப்பும் பணியை ஆரம்பித்தவர்கள் புனித பிலிப்நேரியார் சபைக்குருக்கள்மார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஞாயிறு நற்பிரசாதம்

இந் நிலையில் புதிய கத்தோலிக்க சமுதாயத்துக்கு சமய அறிவு மற்றும் வழிபாட்டு நூல்கள் தேவைப்பட்டன. எனினும் மேலே கூறப்பட்ட இந்த நூல்களை எழுதுவதற்கு சாங்கோ பாங்கோ சுவாமிகளே பொறுப்பாய் இருந்தார். அந்தக் காலத்தில் அச்சுக்கூட வசதிகள் இலங்கையில் இல்லாத படியால், எல்லாத் தமிழ், சிங்கள வழிபாட்டு நூல்களும் கையெழுத்துப் பிரதிகளாகவே எழுதப்பட்டன. ஆகவே சுவாமிகள் இந்தப் புனிதமான பணியை மேற்கொள்வதற்காக பல நாள்கள் இரவு நேரத்தில் கண் விழித்தே செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

கத்தோலிக்க வழிபாட்டுத் தலங்களில் பக்திப் பரவசத்துடன் மிகவும் புனிதமான முறையில் நடைமுறைப் படுத்த வேண்டிய வழிபாட்டு நூல்களைத் தமிழ் மொழியில் இயற்றியவர் சாங்கோ பாங்கோ சுவாமிகள். அவர் இயற்றிய வழிபாட்டு நூல்களில மிகவும் பக்திப் பரவசம் பொங்கும் நூல்களுள் யேசு கிறிஸ்துநாதரின், திருப்பாடுகளின் காட்சிகளை விவரிக்கும் "வியாகுல பிரசங்கம்" என்னும் நூல் முக்கியமானது. இந் நூலை எந்த மதத்தைச் சேர்ந்தவர் வாசித்தாலும், கிறிஸ்துநாதரின் திருப்பாடுகளின் காட்சியை நேரிற் கண்ட அனுபவம் அடைவர். மெய் சிலிர்க்க வைக்கும் பக்திப் பரவசத்தை அவருடைய நூலில் வரிக்கு வரி காணலாம்.

இலங்கையில் இன்று நடைமுறையிலிருக்கும் எல்லாக் கத்தோலிக்க வழிபாட்டு நூல்களும், சாங்கோ பாங்கோ சுவாமிகள் எழுதிய நூல்களின் அடிப்படையிலேயே அமைந்திருக்கின்றன. உதாரணமாக வியாகுல பிரசங்கம், சிந்துப் பிரார்த்தனை, சுவிசேச விரித்துரை ஆகியன எந்த



மாற்றமும் இல்லாமல் நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

## கி.பி.சேனராயர்

அந்நாள்களில் மறை பரப்பும் பணிக்கு அரசாங்கத்தினரால் தடை செய்யப்பட்டிருந்தாலும், சுவாமி அவர்கள் மிகவும் துணிவுடன் எல்லாத் தடைகளுக்கும் முகங்கொடுத்து, வேகங்கொண்ட வேதப் பரப்புதல் பணியில் மாபெரும் வெற்றியும் கண்டார். எல்லாம் வல்ல இறைவன் சுவாமி அவர்களுக்கு "ஆசிநீர்" மூலம் நோயாளிகளைக் குணப்படுத்த அற்புதவரங் கொடுத்தார். இலங்கையில் 37 வருடங்கள் மாபெரும் அப்போஸ்தலிக்கத் தொண்டு புரிந்து 17.07.1742 இல் சுவாமிகள் அமரரானார்.

# ரணிலை விடப் பிரபா எவ்வளவோ மேல்!

## அமைச்சர் அலவி கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை22

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவிலும் பார்க்க பிரபாகரன் எவ்வளவோ மேலானவர் என்று தொழிலமைச்சரும், முஸ்லிம் சமய விவகார பிரதி அமைச்சருமான அலவிமௌலானா தெரிவித்ததாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது.

கொழும்பில் நேற்று முன்தினம் பத்திரி கையாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சதி வேலைகள் செய்தோ பேரணிகளை நடத்தியோ மக்களை ஏமாற்றி ஆட்சியைக் கைப்பற்ற ஐ.தே.கட்சி எண்ணினால் அது தோல்வியிலேயே முடியும்.

,தொழிற்சாலைகள், அலுவலகங்கள், வர்த்தக நிறுவனங்களை ஸ்தம்பிதமடையச் செய்து பிலிப்பைன்ஸ், பங்காளதேஷ் போன்று எமது நாட்டையும் உலகிற்குக் காட்டுவதற்கு ஐ.தே.கட்சி எடுத்த முயற்சிகள் மட்டுப்படுத்தப்பட்டுவிட்டன.

ஜனாதிபதியினால் வழங்கப்பட்டுள்ள ஊடக சுதந்திரங்களை சில ஊடகங்கள் தவறான முறையில் பயன்படுத்திவருகின்றன.

மாணவர்களின் கல்வியைப் பாதிக்கும் வகையில் இன்றுவரை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. ஆனால் ஐ.தே. கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க அதைவிடவும் மோசமான செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகிறார். - என்றார். (உ-4)

## முகமாலையில் மோதல்

கொழும்பு,ஜூலை22

முகமாலை முன்னரங்க நிலைகளுக்கு சமீபமாகக் கடந்த வியாழன் அதிகாலை 6 மணியளவில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் ஓர் அதிகாரியும் நான்கு படையினரும் காயம் அடைந்தனர் என விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

இந்த மோதலில் விடுதலைப் புலி உறுப்பினர் இருவர் உயிரிழந்தனர் என்றும் மற்றும் இருவர் காயமடைந்தனர் என்றும் தகவல் நிலையம் மேலும்தெரிவித்தது. (ஐ-3)



**நீர்வேலி தெற்கு ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர் ஞாபகார்த்த நூல் நிலையத்தில் உரும்பிராய் லயன்ஸ் கழகத்தினரால் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட கண்பார்வை குறைந்தவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.**

**நூல்நிலைய ஸ்தாபகர் கு.சண்முகநாதன் பார்வை குறைந்த ஒருவருக்கு மூக்குக் கண்ணாடி வழங்குவதையும் அருகில் உரும்பிராய் லயன்ஸ் கழகத் தலைவர் பேராசிரியர் வ.ஆறுமுகம், செயலாளர் எஸ். கிருஸ்ணராஜா ஆகியோர் உட்பட பலர் நிற்பதையும் படத்தில் காணலாம். (ஐ-78)**

## யாழ்.இந்துவில் மெய்வன்மை போட்டி

யாழ்ப்பாணம்,ஜூலை22

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி அதிபர் அ.சிறிக்குமரன் தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவர் சங்கச் செயலாளரும், 'உதயன்' பத்திரிகையின் இணை ஆசிரியருமான ந.வித்தியாதரன் கலந்து கொள்வார்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை திருமதி இரத்தினகலா வித்தியாதரன் வழங்கிக் கௌரவிப்பார். (உ-4)

## ம.எண்ணெய் அருந்திய இரு குழந்தைகள்

தென்மராட்சி,ஜூலை22

வடமராட்சிப் பகுதியில் வெவ்வேறு இடங்களில் மண்ணெண்ணெய் பருகிய இரு குழந்தைகள் மந்திகை ஆஸ்பத்திரியில் கடந்த வியாழனன்று அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கரவெட்டி மத்தியைச் சேர்ந்த நித்தியானந்தம் கோகிதா (ஒன்றரை வயது), கரவெட்டி நவிண்டிலைச் சேர்ந்த இராசரத்தினம் சுவர்ணன் (ஒன்றரை வயது) ஆகிய இரு குழந்தைகளுமே மண்ணெண்ணெய் அருந்தியவர்களாவர்.

சோடாப் போத்தலுக்குள் இருந்த மண்ணெண்ணெயை குழந்தைகள் குடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-117)

## வகுப்பறை அமைக்க நிதிஉதவி

ஊர்காவற்றுறை,ஜூலை21

தீவக கல்வி வலயத்தில் உள்ள மூன்று பாடசாலைகளுக்கு புதிய வகுப்பறைக் கட்டடங்கள் அமைப்பதற்கென வடக்கு - கிழக்கு மாகாண சபையினால் 13 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தீவக கல்வி வலய வேலைப்பகுதி பரிசோதகர் எ.சத்தியசீலன் தெரிவித்தார்.

இந்த நிதியைக் கொண்டு எழுவைதீவு றோ.க.தமிழ் கலவன் பாடசாலைக்கு 6 லட்சம் ரூபா செலவிலும் -

நெடுந்தீவு மங்கையர்க்கரசி வித்தியாலயத்துக்கு 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவிலும் -

வேலணை ஐயனார் வித்தியாலயத்துக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவிலும் -

புதிய வகுப்பறைக் கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம-16)

## வாசகர் திருமுகம்

# யாழ்.குடாநாட்டு மக்கள் ஞாபக மறதிக்காரர்களா?

யாழ்ப்பாணப்பல்கலைக்கழக மாணவன் கி.திவ்வியன் கைது செய்யப்பட்டதை அடுத்துயாழ்.மாணவ சமூகமே தமது எதிர்ப்பை பூரணமாகத் தெரிவித்தது. ஏன் கிழக்கு, வன்னிப் பகுதிகளிலும் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. அந்தச் சூழ்நிலையில் 'யாழ்சேவை' வானொலி ஒலிபரப்புச் சேவையில் ஒலிபரப்பப்பட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் உரையில அவர் தெரிவித்த கருத்துக்கள் மாணவர்களின் மனத்தை புண்படுத்தும் வகையில் அமைந்திருந்ததுடன் பல மாணவர்களையும் மக்களையும் வெறுப்படைய வைத்தது. தமிழ் மக்கள் 'பழசை' எல்லாம் விரைவில் மறந்துவிடுவார்கள் என்று அமைச்சர் எண்ணியிருந்தாரோ என்னவோ தெரியவில்லை.

"பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவன் என்ற காரணத்திற்காக நாசகார நோக்கம் கொண்ட செயற்பாடுகள் எதுவும் கண்டுகொள்ளப்படாமல் விடப்பட வேண்டுமா?" என்று தனது உரையின் போது அமைச்சர் கேள்வி எழுப்பியிருந்தார். மாணவனை நீதிமன்றில் ஆஜர் செய்து நீதிமன்றம் அவரை விசாரணை செய்து நீதிபதி தீர்ப்பளிக்கும் முன் அவர் நாசகார வேலையில் ஈடுபட்டதாக அமைச்சர் கூறுவதன் உள்நோக்கம் என்ன? அல்லது தமிழ் மக்களின் மீதான அடக்கு முறைகளுக்கெதிராக மாணவர்கள் மேற்கொண்ட ஜனநாயகரீதியிலான போராட்டங்களைத்தான் அமைச்சர் நாசகாரவேலைகள் என்கிறாரா? என்கின்ற கேள்விகள் மக்கள் மனதில் எழுகின்றன.

அமைச்சர் தொடர்ந்து தனது உரையில் 'பூநகரியில் இருந்த முகாமை அகற்றவேண்டுமென்று 1995இல் அடம்பிடித்ததாலேயே யாழ்.குடாநாடு முழுவதும் பூநகரியாகிப் போனது" என்று கூறியிருந்தார். கிளாலிக் கடற் பாதையில் உயிரைப் பணயம் வைத்து மக்கள் மேற்கொள்ளும் பயணத்திற்கு மாற்றீடாக பூநகரியூடு பாதுகாப்பான, இலகுவான பாதை திறக்கப் படவேண்டும் என்று கோரியே பூநகரி முகாமை அகற்றுமாறு அப்போது கேட்கப்பட்டது. ஆனால் அன்று அதைச் செய்ய முடியாத அரசாங்கம் முல்லைத்தீவு முகாம் தாக்கியழிக்கப்பட்ட கையோடு ஒரே நாளில் பூநகரி முகாமை காலி செய்ய அனுமதி அளித்தது. தமிழ் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கப்போகும் சமாதானப் பேச்சுக்களுக்கு பூநகரி முகாம் தடையாக இருந்தபோது அதனை அகற்ற முடியாது என தெரிவித்த அரசு, தமது படைகள் தாக்கப்படலாம் என்ற வெறும் அச்சத்தின் காரணமாக ஒரே நாளில் முகாமை அகற்றியது. இவற்றையெல்லாம் அமைச்சர் தனது உரையில் கூறாமல் விட்டது ஏன்? 'யாழ்ப்பாணமே பூநகரியாகிவிட்டது' என்று கூறியதன் மூலம் யாழ்ப்பாணம் இப்போது ஓர் இராணுவ முகாமைப் போல - இராணுவ மயப்பிரதேசமாக - இருப்பதை கோடிகாட்டிய அமைச்சரின் துணிச்சலைப் பாராட்டத்தான் வேண்டும்.

"செம்மணி விவகாரம் முதல், மிருசுவில் படுகொலைவரை தமிழ்ப் பெண்கள் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாகும் சம்பவங்கள் முதல் மீனவர் பிரச்சினை வரை அனைத்திற்கும் நாங்கள் குரல் கொடுத்துள்ளோம்" என்று கூட அமைச்சர் சந்தடிசாக்கில் கூறினார். என்னதான் இருந்தாலும் மக்களின் ஞாபகமறதியில் அமைச்சருக்கு இவ்வளவு நம்பிக்கை கூடாது. அண்மையில் தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் பலாத்காரங்கள், சித்திரவதைகளைக் கண்டித்து நடைபெற்ற ஹர்த்தாலின் போது ஈ.பி.டி.பி. எவ்வாறான நிலைப்பாட்டை எடுத்தது என்பதை மக்கள் அவ்வளவு சீக்கிரத்தில் மறந்திருப்பார்களா?

*யாழ்ப்பாணம்.* பா.பிரசன்னா.

# யாழ்.ஆஸ்பத்திரியிலும் வேடிக்கை வேண்டுமா?

யாழ்.மாவட்டத்தில் மக்களின் மருத்துவப் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதில் அதிமுக்கிய பங்குவகிப்பது யாழ்.போதனா வைத்தியசாலை ஆகும். இது தற்போதைய போர்ச் சூழ்நிலையிலும் மருந்துத் தட்டுப்பாடு, மருத்துவ வசதியீனங்கள் மற்றும் பல நடைமுறைப் பிரச்சனைகளின் மத்தியிலும் அவற்றுக்கெல்லாம் முகங்கொடுத்து சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. இருந்த போதிலும் எம்மக்கள் மத்தியில் உள்ள சிலரின் அசிரத்தைத் தன்மையினால் இம்மகத்துவச் சேவைக்கு இடையூறுகள் ஏற்பட்ட வண்ணமே உள்ளன.

இதற்கு எடுத்துக் காட்டாக வெளிநோயாளர் பிரிவு, அவசர அனுமதி பிரிவை எடுத்துக்கொள்ளலாம். குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் அவசர அனுமதிக்காக பல நோயாளர்கள் இங்கு எடுத்துவரப்படுகிறார்கள். உதாரணமாக விபத்துக்கள், மிதிவெடியில் காயமடைந்தோர், மகப்பேற்றுக்காக வருவோர் மற்றும் விசம் அருந்தி உயிருக்குப் போராடிக்கொண்டு வருபவர்கள் போன்ற பலரும் வாகனங்கள் மூலமாகவும், அம்புலன்ஸ் வண்டி மூலமும் எடுத்து வரப்படுகின்றனர்.

இவ்வாறு வருபவர்களைக் கண்டதும் வெளிநோயாளர் பிரிவில் நிற்கும பலரும் ஓடோடி வந்து வேடிக்கை பார்ப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இவர்கள் காவலாளிகளின் பேச்சைக் கூடப் பொருட்படுத்தாமல் நோயாளியையும் அவருடன் கூட வந்தவர்கள் படும் துன்பத்தையும் விநோதமாகவே பார்க்கின்றனர்.

இந்த விடயத்தில் முக்கியமாக வைத்தியசாலை முன்வீதியில் கடைகள் வைத்திருப்போர், நடைபாதை வியாபாரம் செய்வோர் மற்றும் வைத்தியசாலைக்கு வருவோர் போன்ற பலரும் இவ்வாறு நடந்துகொள்கிறார்கள். வீதியில் சைக்கிளில் செல்வோர் கூட இதற்கு விதிவிலக்கு அல்ல. அவர்கள் கூட சைக்கிளை நிறுத்திவிட்டு வைத்தியசாலைக்குள் நுழைவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இதனால் வைத்தியசாலையின் வழமையான செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன. வேடிக்கை பார்ப்பது என்பது மனிதனுடன் கூடிப்பிறந்த ஒரு இயல்பு. எனினும் இவ்வாறான இடங்களில் வேடிக்கை பார்ப்பதைத் தவிர்த்துக்கொள்ளுதல் வேண்டும். இதை உணர்ந்து சம்பந்தப்பட்டவர்கள் திருந்துவார்களா?

*யாழ்ப்பாணம்* வான்மீகி

## மிதிவெடியில் கால் இழப்பு

சாவகச்சேரி வடக்கு - மட்டுவில் அம்மன் கோயிலடிப் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் காலை 7 மணியளவில் இடம்பெற்ற மிதிவெடிச சம்பவம் ஒன்றில் சிக்கி இளைஞர் ஒருவர் தனது வலதுகால் பாதத்தை இழந்தார். ஆடி அமாவாசை தினத்தை முன்னிட்டு தனது வீட்டைத் துப்புரவு செயயச் சென்ற அதே இடத்தைச் சேர்ந்த கந்தசாமி ரஜீவன் (வயது 16) என்பவரே இந்தச் சம்பவத்தில் படுகாயம் அடைந்து மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-7-117)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

வடமராட்சி,ஜூலை22

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை வளவுக்குள் நடமாடித்திரிந்த 12 கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்பட்டன.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு மந்திகைப் பகுதிக்கான பொது சுகாதாரப் பரிசோதகர் தலைமையில் கட்டாக்காலிகளாகத்திரிந்து தொல்லை கொடுத்து வந்த நாய்கள் அனைத்தும் நஞ்சூட்டி அழிக்கப்பட்டன. (ம-173)

# சைவ மரபைப் பேணிக் காத்து அதற்காகவே வாழ்பவர் கந்தசாமி

**யாழ்.சைவபரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் வ.கந்தசாமி இன்று வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ள விழாவில் 'சைவ பூஷணம்' என்னும் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார். இதனை ஒட்டி இச் சிறு குறிப்பு இடம்பெறுகிறது.**

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை என்றதுமே எம் நினைவிற்கு வருபவர் அதன் தேர்வுச் செயலாளராக விளங்கும் சைவப்புலவர் வ.கந்தசாமி. காரணம் அவ்வளவு தூரம் சபையுடன் ஒன்றித்து இணைந்து செயற்பட்டவர் அவர்.

கல்வி கற்கும் மாணவர்களிடையே சைவசமய அறிவை வளர்க்கும் நோக்கில் சைவசமய பாடப் பரீட்சையை நடத்தி, அதில் சித்தி பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி, சைவத்திற்கும் தமிழுக்கும் மாணவர் மத்தியில் அறிவின் ஊன்றுகோலாக விளங்கியவர் இவர் வகித்து அந்த ஆலயங்களின் வளர்ச்சிக்கும் அரும்பாடுபட்டு வருகின்றார்.

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கக் காரியதரிசியாக விளங்கி, அவ்வப்போது புராணபடனப் போட்டி, சைவ விழாக்கள், இளஞ்சைவப் புலவர் தேர்வு, சைவப் புலவர் தேர்வு முதலானவற்றை தனியொருவராகவே முன்னின்று நடத்திய பெருமை அன்னாரையே சாரும். இன்று யாழ்ப்பாணத்தில் இளஞ்சைவப் புலவர்கள், சைவப்புலவர்கள் நம்மத்தியில் நடமாடுவதற்கு வித்திட்டவர் வ.க. அவர்களை உருவாக்கிப் பட்டமளித்து, சான்றிதழ் வழங்கி, விழா வெடுத்து நம்முன்னே அறிவுக் களஞ்சியங்களாக உலாவ விட்டவர் வ.க. என்று கூறின் அது சாலப்பொருந்தும். சைவப் பெரியார் சு.சிவபாத சுந்தரம்பிள்ளையிடம் கல்வி கற்று சைவப்பழமாகவே தோற்றமளிக்கும் வ.க. எப்போதும அமைதியாகவே உரையாடுவார். கோபம் என்பதே அவருக்கு வராது. புன்முறுவல் பூத்த முகத்துடன் எந்நேரமும் சாந்த சொரூபியாகக் காணப்படுவார். சிவதேஜஸ் அவரிடம் தாண்டவமாடும். அவரைப் பார்த்தாலே கடவுளைப் பார்த்தமாதிரி. அவ்வளவுக்குப் புனிதம் நிறைந்த புண்ணிய சீலர் அவர்.

## இன்று அவருக்குப் பட்டமளிப்பு

என்று கூறினால் அது மிகையாகாது.

தம்மாலான மட்டும் இடைவிடாது, கண்துஞ்சாது, மெய்வருத்தம் பாராமல் இரவுபகலாகத் தம்மையே முற்றாக அர்ப்பணித்து அருஞ்சேவை ஆற்றிவருபவர் திரு.வ.கந்தசாமி. அவரது சேவை- அளவிடற்கரியது. எந்த நேரமும் சாந்தமான தோற்றம்; நெற்றியில் திருநீறு; நடுவில் அழகிய சந்தனப் பொட்டு. இது அவரது எளிமையான தோற்றம்.

எங்கெல்லாம் சைவ விழாக்கள் நடைபெறுகின்றனவோ அங்கெல்லாம் அவர் திருவுருவம் காட்சியளிக்கும். அவரைப் பார்த்தாலே சிவத்தோற்றம். சைவத்தின் பாரம்பரியம் பேணிவரும் வ.க. அவர்கள் புகழை விரும்பாதவர். அடக்கமாக இருந்து அரிய பணிகள் செய்து வரும் அவருக்கு, அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் 'சைவபூஷணம்' என்னும் விருதை விரும்பி வழங்கியமை மிகப் பொருத்தமானதே. இதனால் சைவப்புலவர் சங்கத்துக்குத்தான் பெருமையே தவிர அவருக்கல்ல.

வண்ணை சாந்தையர் மடம் கற்பக விநாயகர் ஆலயத்தின் வளர்ச்சிக்கு அயராது முன்னின்றுழைத்த இவர் பன்றிக்கோட்டுப் பிள்ளையார் போன்ற பல சைவ ஆலயங்களின் அறங்காவலர் சபையிலும் அங்கம்

இவர் யாழ்.சைவபரிபாலன சபையில் 1950 முதல் சேவையாற்றிவருகிறார். இவரது சேவைகளில் யாழ். சிறைச்சலை, கோப்பாய் திறந்த வெளிச் சிறைச்சாலை என்பவற்றில் கைதிகளுக்கு சமயபோதனை செய்தமையும், கைதடி வயோதிபர் விடுதியில் வசிப்போருக்கு சைவ அறிவு புகட்டியமையும், பல்வேறு சமய நிறுவனங்களிலும் சைவசமயப் பகுதி அமைப்பாளராகச் சேவையாற்றியமையும் குறிப்பிடத்தக்கவை. 'இந்து சாதனம்' சைவ சஞ்சிகை வெளிவர அயராது பாடுபட்டு சாதனை நிலை நாட்டியுள்ளார்.

சைவப்புலவர் சங்க உறுப்பினராகி, தலைவராகி, செயலாளராகி, தேர்வுச் செயலாளராகி இன்று விருது பெறுமளவிற்கு உயர்ந்துள்ள இவரைப் பெற்றெடுத்த மகான் கந்தையா வல்லிபுரமாவார். தாயார் வள்ளியம்மை.

சைவத்தின் காவலரகவும், சைவத்தின் விரிவாக்கச் செயலாளராகவும் விளங்கி சைவமரபு பேணிக்காத்து வருகின்ற திரு.வ.க. அவர்கள் அற நெறிப் பாடசாலை அதிபராகவும் கடமையாற்றி சின்னஞ்சிறு சிறார்களையும் சைவ ஆர்வலர்களாக ஆக்கிய பெருமை இவரையேசாரும்.



இன்றும் சைவத் தொண்டினை இடையறாது செய்துவருகின்ற இவர் விஜயராணி என்பவரைத் திருமணஞ் செய்து-

*"அன்பும் அறனும் உடைத்
தாயின் இல்வாழ்கை
பண்பும் பய னும் அது"* என்ற தெய்வப் புலவர் வான்புகழ் வள்ளுவரின் குறள் நெறிப்படி வாழ்ந்து, இல்லறத்தை நல்லறமாக நடத்தி நன்மக்கட் பேறையும் அடைந்துள்ளார்.

அன்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தம்மைச் சைவத்திற்கும் தமிழுக்கும் முற்றாக அர்ப்பணித்து எவ்வாறு அரும பணி ஆற்றினரோ அதே போன்று இன்று தம்மை முற்று முழுதாக சைவத்திற்கே அர்ப்பணித்து அளப்பரிய சேவையாற்றி வருபவர்தான் 'சைவ பூஷனம்' விருதுபெறும் திரு. வ.க அவர்கள்.

**சைவப்புலவர்
இராசையா ஸ்ரீதரன்**

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்ற ஔவைப் பிராட்டியாரின் கூற்றுக்கு இணங்க, மனிதப் பிறவி எடுத்ததன் மாண்பினை உலகுக்கு உணர்த்தி வாழ்ந்து காட்டி வருபவர் கந்தசாமி. 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்றபடி சைவ மணத்தோடு, சைவப் பாரம்பரியம் குன்றாமல் அரும் பணியாற்றிவரும் இவர் மிகவும் பாராட்டப்பட வேண்டியவரே.

வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவரான சிவபெருமானின் திருவருட் கருணையினால் இன்னும் நீண்ட நாள்கள் நோயின்றி வாழ்ந்து, எமது சைவத்திற்கும் தமிழுக்கும் அரிய பல தொண்டுகளைச் செய்து வரவேண்டும் என்றும் அந்தப் பரங்கருணைத் தடங்கடலான பரமேஸ்வரனையே துதித்து பிரார்த்தனைசெய்து வழிபடுவோம். அவர் வாழும் காலத்தில் நாமும் சேர்ந்து அவருடன் பணிசெய்யும் பாக்கியம் எமக்குக் கிடைத்ததனால் நாமும் பாக்கியசாலிகளே.

*வாழ்க அவர்தொண்டு!*
*வளர்க அவரது திருப்பணி!*


# யாழ்: ஞானம் ரெக்ஸ்ரைல்ஸ்

ஸ்தாபனத்தாரின்

## மாபெரும் ஆடிமாத சிறப்புத்தள்ளுபடி

**சாறி வகைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ரசியன் சாறி | 1200/= | - 800/= | பட்டுக்காஞ்சிபுரம் | 3800/= | - 2800/= |
| நிலாக் சாறி | 1060/= | - 750-/= | பஞ்சாபி வகைகள் | 1000/= | - 800/= |
| ஹொப்பர் சில்க் சாறி | 1250/= | - 950/= | பெரிய கவுண் | 1200/= | - 850/= |
| மேர்க்குறி சாறி | 1300/= | - 1050/= | சிறிய கவுண் | 750/= | - 550/= |
| ஜப்பான் சாறி வகைகள் | 950/= | - 750/= | சிறிய ஸ்கேட்பிளவ்ஸ் | 680/= | - 500/= |
| சிறிய ஸ்கேட் பிளவ்ஸ் | 600/= | - 450/= | | | |

**சேட் வகைகள்**

| | | |
|---|---|---|
| பொக்ஸ் சேட் | 825/= | - 700/= |
| " | 800/= | - 650/= |
| " | 400/= | - 300/= |
| " | 750/= | - 600/= |
| " | 700/= | - 550/= |

**ஸ்கேட்ஸ் அன் பிளவ்ஸ்**

| | | |
|---|---|---|
| பெரிய ஸ்கேட் அன் பிளவ்ஸ் | 1000/= | - 700/= |
| " " | 780/= | - 600/= |
| " " | 1200/= | - 900/= |
| பெரிய வெல்வெற்ஸ் ஸ்கேட் அன் பிளவ்ஸ் | 1000/= | - 850/= |

**துணி வகைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வெல்வெற்ஸ் பிளேன் பிறின்ற் | 275/= | - 210/= | ரைற்றானிக் பிறின்ரட் | 140/= | - 110/= |
| பட்டர் சில்க் பிறின்ற் | 130/= | - 120/= | ரைற்றானிக் பிளேன் | 130/= | - 110/= |
| டயானாப் பிறின்ற் | 110/= | - 100/= | பட்டர் சில்க் பிளேன் | 80/= | - 70/= |
| சலஞ்சர் பிளேன் | 80/= | - 70/= | சீத்தை (சைனா) | 60/= | - 50/= |
| | | | சீத்தை (சைனா) | 50/= | - 40/= |

**சூட்டிங்ஸ்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| றேக் பிளேன் | 380/= | - 325/= | ரைற்றானிக் சூட்டிங் | 400/= | - 350/= |

*மற்றும் சகலவிதமான புடைவைத் திறுசுகளும் மலிவு விலையில் விசேட கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்!*

# ஞானம் ரெக்ஸ்ரைல்ஸ்

18A, நவீன சந்தை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்

*கிளை:* யோகாஸ் புடைவையகம், யாழ்ப்பாணம். (C/17497)


# போரிலும் தர்மம் பேணிய மன்னர்கள் புவியோர்க்கு உணர்த்திய பண்புகள்!

கொலை பஞ்சமா பாதகங்களில் ஒன்று. ஆனாலும் மரணதண்டனை, யுத்தம் போன்றவற்றில் கொலை குற்றமற்றதாகிறது. யுத்தத்தில் கொல்பவன் வீரன் என்பதும், கொல்லப்பட்டவன் வீர சுவர்க்கம் அடைவான் என்பதும் மரபு. ஆனால் எமது முன்னோர்கள் யுத்தத்திலும் சில கொலைகளைச் செய்வது பாவமானது என்று விலக்கப்பட்டுள்ளதை இலக்கியங்கள் வாயிலாகக் காண்கிறோம். மகாபாரதத்தில் "கிருஷ்ணன் தூது" மிகவும் முக்கியமானதும், சிந்தனையைத் தூண்டுவதுமாகும்.

தூதுக்கு வந்த கண்ணபிரானைக் கொல்வதற்குத், துரியோதனன் வழிகோலுகின்றான். இதனை எதிர்த்து நூற்றுவரில் இளையோனான விகர்ணன் இன்ன இன்னவர்களைக் கொல்லுதல் பாவம் என்கிறான் அவனது வாயால் வில்லிபுத்தூரர்.

*"மூத்தவரிளையோர் வேத முனிவரர் பிணியின் மிக்கோர்
தோத்திர மொழிவோர் மாதர் தூதரென்றிவரைக் கொல்லிற்
பார்த்திவர் தமக்கு வேறு பாவமற்றிதனினில்லை
பூத்தெரி தொடையாய் பின்னு நரகினும் புகுவ ரென்றான்"*

அதாவது வயது முதிர்ந்தோர்கள், வேதமோதுகின்ற பிராமணர், சாதுகள், நோயாளர், அயலில் இருந்து புகழ்மொழிகளைக் கூறுவோர், பெண்கள், தூதர் இவர்களைக் கொல்வது பாவமான காரியமென்றும், மறுமையில் கொன்றவர்கள் நரகத்தையடைவார்கள் என்று கூறினான். இதே கருத்தை மகாபாரதத்தில் 'கீழ் நிரை மீட்சிச் சருக்கத்தில்' வில்லி புத்தூரர்

*"இரவலர் இளையவரேத்து நாவலர்
விரவிய தூதர், விருத்தர், வேதியர்
அரிவையர், வெஞ்சமரஞ்சுவோர் பெருங்
குரவரென்றிவரைக் கோறல் பாவமே"* என்றும் கூறுகிறார்.

இதில் மேற்கூறியவர்களுடன் இரந்து வாழ்வோர், போருக்கஞ்சி நிற்பவர், பெரிய குரவர்கள் இவர்களையும் சேர்க்கிறார். கிருஷ்ணன் சாதாரணமான தூதனாகவே மகாபாரதத்தில் வருகிறான்.

**இலக்கியச் சோலை**

ஆனால் இராமாயணத்தில் வரும் இராம தூதனான அநுமானோ வலிய இலங்கையுள் அடாத்தாகப் புகுந்து அட்டகாசம் செய்து இராவண மைந்தன் அட்சன் உள்ளிட்ட இராவண சேனையை அழித்து பின்னர் இந்திரஜித்தால் இராவணன் முன் நிறுத்தப்படுகின்றான். அவனைக் கொல்லுமாறு இராவணன் பணித்தபோது அவன் தம்பியாகிய விபீடணன் எழுந்து -

*"மாதரை கொலை செய்தார்களுளரென வரினும் வந்த
தூதரைக் கொன்றுளார்கள் யாவரோ தொல்லை நல்லோர்"*

என்று கூறித் தடுக்க இராவணனும் ஏற்றுக் கொள்கிறான். மேலும் புறநானூற்றில்

'பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி' என்ற பாண்டியன் பகைவர் மேற்போர் தொடுக்க ஆயத்தமாகின்றான். அதற்கு முன்னே அவன் கூறும் செய்தியை நெட்டிமையார் வாயிலாகக் கூறுகின்றான்.

*"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்
தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன் போற் புதல்வர்ப் பெறா அதீரும்
எம் அம்பு கடி விடுதும் நும் அரண் சேர்மின்..."*

"யுத்தம் நடக்கும் போது அதனுள் அகப்படாது பசு, பசுவையொத்த பார்ப்பனர், பெண்கள், நோயாளர், பிதிர்க்கடன் செய்வதற்குப் புதல்வரைப் பெறாத தம்பதியினரும், பாதுகாப்பான இடத்திற்குச் செல்லுங்கள். நான் யுத்தத்தை ஆரம்பிக்கப் போகின்றேன்" - என்கிறான்.

**உதங்கா**

இப்படியான தர்ம சிந்தையுடைய பாரம்பரியத்தில் யுத்தம் அப்பாவி மக்களை என் செய்யும்? யுத்தம் நடந்தாலும் உழுபவன் உழுவான்; தொழுபவன் தொழுவான்; அன்றாட வாழ்வை அது பாதிக்கவே செய்யாது.

## யாழ்.பிரதேச செயலகக் காணி கொள்வனவு:

# மக்களை வற்புறுத்தி நிதிபெற எவரும் அனுமதிக்கப்படவில்லை

## பிரதேச செயலர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,ஜூலை22

யாழ்.பிரதேச செயலகத்துக்கு புதிய பணிமனையை அமைப்பதற்குரிய காணிக் கொள்வனவுக்கென எவரிடம் இருந்தும் வற்புறுத்திப் பணம் பெற்றுக்கொள்ள எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. அவ்வாறு வற்புறுத்திப் பணம் பெற்றுக்கொள்ள எவராவது முயன்றால், அது குறித்து முறையிடுமாறு பொது மக்களிடம் கேட்டுக் கொள்கிறோம்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் யாழ்.பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன்.

யாழ்.பிரதேச செயலகக் காணிக் கொள்வனவுக்காகப் பொது மக்களிடம் வற்புறுத்தலின்பேரில் நிதி சேகரிக்கப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்திருப்பது தொடர்பாக 'உதயன்' செய்தியாளர் பிரதேச செயலரிடம் கேட்டபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

யாழ். பிரதேச செயலகத்திற்கு இதுவரை சொந்தக் காணியோ, கட்டடமோ இல்லை. வாடகைக் கட்டடங்கள் பலவற்றில் பல்வேறு பிரிவுகளாக எமது அலுவலகச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில் எமக்குத் தேவையான கட்டட நிதியை அரசாங்கம் தருமாயினும் அதற்குரிய காணிக் கொள்வனவுக்கான நிதியை நாங்களே திரட்ட வேண்டி உள்ளது. எமது செயலக தீர்மானங்களுக்கமைய நாம் பொது மக்களிடம் உதவிகோரி நின்றோம். பெருமனது கொண்ட யாழ்.வர்த்தகப் பெருமக்களும் மற்றும் பொது மக்களும் எமக்கு உதவி வருகிறார்கள்.கடந்த மே மாதம் 7ஆம் திகதி ராஜா தியேட்டரில் இடம்பெற்ற மூன்று படக்காட்சிகள் மூலமும் நிதியைத் திரட்டியுள்ளோம்.

எனது கட்டுப்பாட்டிற்குட்பட்ட ஜே - 61 முதல் ஜே - 88 வரையான எந்தவொரு கிராம சேவையாளர் பிரிவிலும், யாரிடமும் வற்புறுத்தி நிதி பெறப்படவில்லை. அவ்வாறு வற்புறுத்தப்படுவதாக யாராவது உணர்ந்தால் உடனடியாக என்னிடம் முறைபபாடு செய்யலாம்.

நிதியைச் செலுத்துபவர்களுக்கு உடனடியாக பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படுகின்றது. எனினும் அதற்கும் நிவாரணக் கொடுப்பனவுகளுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை.

யாழ். பிரதேச செயலகத்தைப் போன்று, பல பிரதேச செயலகங்கள தமக்குரிய காணியைப் பொதுமக்களிடமிருந்து பெற்ற அன்பளிப்பு நிதிகளின் மூலம் கொள்வனவு செய்துள்ளன. அந்த வகையில் எமது மக்களும் எம்முடன் பூரணமாக ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு - என்று அவர் தெரிவித்தார்.

# கொக்குவிலில் புதன்கிழமை இரவு பல வீடுகளில் கொள்ளைச் சம்பவம்

## இராணுவப்பாணியில் வந்த கும்பல் அட்டகாசம்

வலி.வடக்கு,ஜூலை22

கொக்குவிலில் பல இடங்களிலும் கடந்த புதன் இரவு ஏழுக்கும் மேற்பட்ட வீடுகளில் கொள்ளை மற்றும் திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன.

இராணுவத்தினர் போன்ற பாணியில் திருடர் கோஷ்டி ஒன்று வீடுகளைச் சோதனையிடுவதாகக் கூறிக் கொண்டு தொடராகப் பல வீடுகளில் தனது கைவரிசையைக் காட்டியுள்ளதாகக் கொக்குவில் வாசிகள் கூறுகின்றனர்.

கொக்குவில் கிழக்கில் ஏழு வீடுகளிலும், கொக்குவில் சந்திக்கு அருகில் இரு கடைகளிலும் கொள்ளை மற்றும் களவுகள் இடம் பெற்றிருக்கின்றன.

தென்மராட்சியில் இருந்து இடம் பெயர்ந்து கொக்குவில் கிழக்கில் வசிக்கும் க.பொன்னுத்துரை என்பவரின் வீட்டினுள் புகுந்த கொள்ளையர்கள் வீட்டில் ஒருவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அபகரித்துள்ளனர்.

காங்கேசன்துறை வீதியில் உள்ள க.தெட்சணாமூர்த்தி என்பவரின் வீட்டில் பத்தாயிரம் ரூபா பெறுமதியான சைக்கிள்களும்-

வேறு சில வீடுகளில் இருந்து துணி வகைகள் உட்பட பல பெறுமதியான பொருள்களும் திருடப்பட்டிருக்கின்றன.

கொக்குவில் சந்தியில் இரவுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த காவலாளிகளைக் கத்தி முனையில் மிரட்டிய கொள்ளைக் கோஷ்டியினர் அவர்களை ஓரிடத்தில் தடுத்து வைத்துவிட்டு கடைகளில் கொள்ளையிட்டுள்ளனர்.

கடைகளில் இருந்த குளிர்பானங்களை அருந்திய கோஷ்டியினர் அங்கிருந்த முட்டைகளையும் விட்டு வைக்கவில்லை.

சில வீடுகளில் கொள்ளையிட முனைந்தோர் இராணுவத்தினர் போன்ற சீருடையில் காணப்பட்டதாகவும் -

அவர்கள் சிங்களத்தில் உரையாடியதாகவும் -

பொதுமக்கள் தெரிவித்தனர்.

கொள்ளையர்களைக் கண்டதும் சிலர் உதவி கோரி அயலவர்களை அழைத்த போதும் படையினரே சோதனையிட வந்ததாக எண்ணி அஞ்சி அயலவர்கள் வீடுகளை விட்டு வெளியே வரவில்லை - என்றும கூறப்படுகிறது.

கொள்ளைக் கோஷ்டியில் காணப்பட்டோர் தமது முகத்தை சேலைத் துணியினால் கட்டியிருந்ததாகவும், கத்தி, வாள் என்பவற்றை வைத்திருந்ததாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர். இச்சம்பவங்களால் கொக்குவில் பகுதியில் பதற்றம் நிலவியது.

இந்தக் கொள்ளைக் கோஷ்டியின் அட்டகாசம் தொடர்பாக கொக்குவில் மக்கள் படையினரிடமும், பொலீஸ் நிலையத்திலும் முறையிட்டிருக்கின்றனர். (ஐ-86)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 10 - 02 - 1952

உதிர்வு 17 - 07 - 1996

### அமரர் இளையதம்பி குணசிங்கம்

(B.A.Dip.in.Edu.)

திதி:- 22-07-2001

**உம் உயிர் தனை அரக்கரின்**
**கட்டில்லா அராஜகம் கவர்ந்து**
**பன்னீர் ஐந்து மாதங்கள் கழிந்தனவோ!**
**ஆண்டுகள் எத்தனை சென்றாலும்**
**என்றும் உம் நினைவுகள்**
**எம் நெஞ்சை விட்டு நீங்காது!**

*கொண்டபுலம்,*
*கரவெட்டி.*

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(90204)

# வடமராட்சிப் பிரதேசத்தில் வீதிகளில் இளைஞர்கள் மீது படையினர் திடீர் சோதனை

வடமராட்சி,ஜூலை22

வடமராட்சிப் பகுதியில் வீதிகளிலும் பொது இடங்களிலும் கூட்டமாக நிற்கும் இளைஞர்கள் கடந்த சில தினங்களாக படையினரின் திடீர் சோதனைக்குள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

சில இடங்களில் வீதிகளில் கும்பலாக நின்ற இளைஞர்களின் அடையாள அட்டைகள் பறிமுதல் செயயப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

கடந்த வியாழன் இரவு நெல்லியடி நகரப் பகுதியில் கடை ஒன்றின் முன்பாக நின்ற ஐந்து இளைஞர்களின் அடையாள அட்டைகள் பறித்துச் செல்லப்பட்டிருக்கின்றன.

இதேவேளை -

வடமராட்சிப்பகுதியில் மோட்டார் சைக்கிள் படைப்பிரிவினரின் ரோந்து நடவடிக்கைகளும் அதிகரிக்கப் பட்டுள்ளன. (ஐ-117)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வி அ.இந்துமதி**



**திருமதி கி.சிவகெங்கா**

| | | | | |
|---|---|---|---|---|
| 05-05-1968 | ← | தோற்றம் | → | 11-04-1950 |
| 25-07-1998 | ← | மறைவு | → | 25-07-1998 |

**திதி:22-07-2001**

*ஆழ்கடலில் இருவீரும் ஆறாத்துயிலில் மூழ்கியிந்நாள்*
*ஆண்டுகள் மூன்றிங்கு அகன்றபடி உணர்கிலமே*
*ஏழ் ஜென்மம் எது தன்னில் இன்முகத்தில் விழிப்பமினி*
*என்றென்றும் கலங்கிறமே இனுமொருகால் உதிமீரோ?*

தங்கள் பிரிவால் துயர் மூழ்கும்
ஆ.கி.அருணகிரிராசாவும்
குடும்பத்தினரும்.

*கம்பர் மலை,*
*வல்வெட்டித்துறை.*

(90207)



(C/17493)

# கோப்பாய் பிரதேச செயலர்

# உயர் திரு கதிரவேலு கேதீஸ்வரன் அவர்களின்

# மணி விழாச் சிறப்பு மலர்

## அரச அதிபரின் செய்தி

இன்று மணிவிழாக் கொண்டாடும் கோப்பாய் பிரதேச செயலர் திரு. க. கேதீஸ்வரன் அவர்களைக் கௌரவிக்கும் வகையில் வெளிவரும் இச்சிறப்பித ழுக்குப் பாராட்டுரை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

ஏறக்குறைய 50 (ஐம்பது) ஆண்டுகளுக்கு மேலாக தனக்கென ஒரு நிரந்தர இடமின்றி பற்பல இடங்களிலும் மாறி மாறி இயங்குகின்ற இப் பிரிவிற்குரிய நிர்வாக அலுவலகத்தை ஒரு நிரந்தரமான இடத்தில் அமைய வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து அதற்கான காணியையும் இப்பகுதி மக்களின் பூரண பங்களிப்புடன் கொள்முதல் செய்வதில் பெரும் பங்கு எடுத்துக் கொண்டமை என்றும் நினைவில் கொள்ள வேண்டியது. அவர் மேலும் சகல செல்வங்களும் பெற்று நீடு வாழ்கவென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**க.சண்முகநாதன்**
அரச அதிபர்

## வண. பிதாவின் செய்தி

பரி. மரியாள் ஆலயத்தின் சபை போதகராகிய நான்.இன்று மணிவிழாக் காணும் திரு. க. கேதீஸ்வரன் அவர்களுக்கு ஆசியுரை அளிப்பதில் உள்ளம் பூரிப்படைகின்றேன். எங்களுடைய கோப்பாய் பிரதேச செயலகத்தின் வரலாற்றை நாம் மீண்டும் திரும்பிப் பார்க்கும் போது எத்தனையோ பிரச்சினைகள், தடைகள் மத்தியிலும் இறைவனின் வழிநடத்துதலுடன் இம்மணி விழாவின் நாயகனாகிய திரு. க. கேதீஸ்வரன் அவர்கள் தென்மராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்டவராக இருந்த போதிலும் இப்பிரதேச மக்களுக்கு அளப்பரிய சேவைகளை மேற்கொண்டவர். கடமை, கட்டுப்பாடு, கண்ணியமிக்கவர். நடைபெறும் விழாக்களில் பங்குகொண்டு பெருமை சேர்த்தவர். இன, மத பேதமின்றி எல்லா மக்களையும் ஒரு தாய்ப்பிள்ளையைப் போல நேசிப்பவர். மக்கள் சேவையே இறைவனின் சேவை என எண்ணுபவர். இப்பிரதேச செயலகம் அமைவதற்கு மூல காரணமானவரும் இக்கட்டடத்தை அமைப்பதற்கான நிலத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு உள்ளிப்பாக முன்னின்று உழைத்த வரும் ஆவார். இவர் கலை, கலாசாரப் பிரியரும் கலாசார விழாக்களை நடத்தி மலர் வெளியீடு மேற்கொண்டவரும் ஆவார். இவருடைய பணி இன்னும் பல ஆண்டுகள் நீடித்துச் சிறப்புற்றுத் தொடர எமது மனமார்ந்த இறையாசியைக் கூறுவதுடன் எல்லாம் வல்ல இறைவனின் ஆசீர்வாதம் அவருக்குக் கிட்ட வேண்டும் என பிரார்த்திக்கிறேன்.

**வண.பிதா.T.ஜோர்ஜ்**
கோப்பாய் பரி.மரியாள் ஆலயம்.

## ஆழ்ந்த பட்டறிவு மிக்கவர்

கோப்பாய் பிரதேச செயலர் திருவாளர், க. கேதீஸ்வரன் அவர்களைப் பல வருடங்களாக நான் அறிவேன். மிக அமைதியான இயல்புடையவர். ஆழமாகச் சிந்திப்பவர். தனது பிரதேசத்தின் தேவையை மிக உன்னிப்பாக உள்வாங்கித் தன் செயற்பாடுகளைத் திட்டமிட்டுக் கொள்வார்; செயல் வடிவம் கொடுப்பார். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு வேண்டிய கட்டடம் அமைப்பதற்கான காணியைப் பெற்றுக் கொடுப்பதில் அரும்பாடுபட்டு வெற்றி கண்டார். எமது கல்லூரி வளர வேண்டும். அதன் புத்தாக்கச் செயற்பாடுகள் யாழ் சமூகத்தின் வளர்ச்சிக்கு உதவ வேண்டுமென்பதில் பெரு விருப்புக் கொண்டவர்.

அவரது உயர்ந்த சிந்தனையும் ஆழ்ந்த பட்டறிவும் அவரது செயற்பாடுகள் மிகக் கண்ணியமான போக்கினை கொண்டமைந்தன. இதனால் சகலராலும் அவர் நேசிக்கப்பட்டார்.

இப் பெரியார் அகவை அறுபதையடைகின்றார். எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு நீண்ட ஆயுளையும் உடல் நலத்தையும் வழங்க வேண்டுமென பிரார்த்திக்கிறேன். இன்னும் பலகாலம் மக்களுக்குப் பணி செய்ய இறையருள் கிட்ட வேண்டுமெனவும் பெரிதும் விரும்புகின்றேன்.

**கலாநிதி தி.கமலநாதன்**
பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

## கொள்கைப் பற்றுமிக்கோன்

திரு. க. கேதீஸ்வரன் தென்மராட்சி நுணாவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட கோப்பாய் தத்தெடுத்துக் கொண்ட பெருமகன். இவர் 1994ஆம் ஆண்டு கோப்பாய் பிரதேச செயலராக வந்த காலம் தொட்டு, கோப்பாய் பகுதியை முன்னேற்ற இவர் எடுத்துக் கொண்ட முயற்சிகளும், சிந்திய வியர்வையும் ஏராளம்.

கொண்ட கொள்கையில் மிக உறுதியாய் நிற்கும் இந்தப் பெருமகனார்; மற்றவர் அபிப்பிராயம் அறிந்து விட்டுக் கொடுக்கும் பெரும் தன்மையும் மிக்கவர்.

இப்பெருமகனார் கோப்பாய்க்குச் செய்த, நான் அறிந்த சேவைகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுகிறேன்.

1. கோப்பாய் உப்பாற்று அணையைச் சீராக்கி, வயல் நிலங்களை உவராகாமல் தடுத்தமை.

2. கோப்பாய் உவர் வடிய நெற்செய்கைத் திட்டத்தை அமுல்படுத்தி அமோக வெற்றி கண்டமை.


3. 1995ஆம் ஆண்டு கலவரத்தில் பலத்த சேதம் அடைந்திருந்த கோப்பாய் வைத்தியசாலையை குறுகிய காலத்தில் புனரமைப்புச் செய்து; இயங்கச் செய்து; கோப்பாய் மக்களின் பிணி தீர்த்து வைத்தமை.

4. நிரந்தரக் கட்டடம் எதுவும் இன்றி இருந்த கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு ஒரு காணியைக் கொள்வனவு செய்து ஒரு வருடத்திற்குள் புதியதோர் கட்டடம் அமைத்துக் கொடுத்தமை.

இப்பெருமகனார், தனிப்பட்ட ரீதியிலும் நிர்வாக ரீதியிலும் என்னுடன் நெருங்கிப் பழகியமையால், அன்னாரின் நற்குணங்களையும் பெருமைகளையும் நன்கு அறியக்கூடிய வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

மணிவிழாக்காணும்; இப்பெரியார் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து மக்கள் சேவை செய்ய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

**க.இ.குமாரசாமி ஜே.பி.**
கோவைக்கிழார்.



[illegible]
- வடகோவை வரதராஜன்.

### வாழ்க்கைக் குறிப்பு

பிறப்பு: 17-05-1941
பிறந்த இடம்: நுணாவில், சாவகச்சேரி.
ஆரம்பக்கல்வி: நுணாவில் [illegible] வித்தியாசாலை.
உயர்கல்வி: [illegible] கல்லூரி, யாழ்ப்பாணம்.
அரச உத்தியோகத்தில் இணைவு: [illegible]
தொழில் அனுபவம்: [illegible]
பதவியேற்பு: [illegible]
[illegible] இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்.
பிரதேச செயலாக அமர்வுகள்:
[illegible]

## எளிமையானவர்

கோப்பாய் பிரதேச செயலர் திரு. க. கேதீஸ்வரன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைவோரில் நானும் ஒருவன். திரு. க. கேதீஸ்வரன் அவர்கள் 1994 ஆம் ஆண்டு கோப்பாய் பிரதேச செயலராக இங்கு வந்தது தொடக்கம் தன் பணிகளை விட எம்முடன் இணைந்து நலிவுற்ற மக்களுக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்துடனும் கோப்பாய் அபிமாக் கரகத்தினுடனும் சேவையாற்றுவதில் முன் நின்று வழிகாட்டியவர்.

பெரிய பதவியைப் பெற்றிருந்தும் அப்பதவியை பெருமை எனக் கருதாது, பெருமை சிறுதுமின்றி மக்களோடு மக்களாகப் பழகி எல்லோர் நன்மதிப்பையும் பெற்ற பெருந்தகை. கோப்பாய் பிரதேச செயலாளராக பணிபுரிகின்ற காலம் கோப்பாய் பிரதேச மக்களின் பொற்காலம் எனக் கூறலாம். இடர்பாடுகளினால் வாடகை வீட்டில் செயற்பட்ட பிரதேச செயலகத்தை நிரந்தர செயலகமாக்க அவர் மேற்கொண்ட பணி, போற்றப்பட வேண்டும். சொந்தக் காணியில் நிமிர்ந்து நிற்கும் கட்டடம் அதனை அழகு படுத்தப்பட்ட விதம் மனதை விட்டு அகலாது. மணிவிழாக் காணும் இந்நாயகனை, பல்லாண்டு வாழ்ந்து பல வழிகளிலும் எம்மக்களுக்கு சேவையாற்ற வேண்டி, பிரார்த்திக்கிறேன்.

**வை.தியாகராசா.**
யாழ். மாவட்ட இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர்.

## பன்முக ஆளுமை நிறைந்தவர்

கோப்பாய் பிரதேச செயலர் உயர்திரு. கதிரவேலு கேதீஸ்வரன் அவர்களுக்கு அறுபதாவது அகவை நிறைவில் மணிவிழாக் கொண்டாடப்படுவது அறிந்து அகமகிழ்வடைகின்றேன். தென்மராட்சியின் நுணாவில் கிராமத்து மைந்தனாகத் தோன்றி, பன்முக ஆளுமைகளும் படைத்தவராக விளங்குபவர். அவர் இலங்கை நிர்வாக சேவையில் இணைந்து மக்களுக்கான தமது பணியினை மனச்சுத்தியுடன் ஆற்றிய பெருந்தகை. அவர் 1993ஆம் ஆண்டு முதலாகக் கோப்பாய் பிரதேசத்தில் தமது கடமையை முழுமனத்துடன் செய்துவருவதுடன் கடந்த சில மாதங்களாக உடுவில் பிரதேச பதில் செயலாளராகவும் பணிசெய்து வருபவர். கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முன்னேற்றத்திலும் வளர்ச்சியிலும் காலத்திற்குக் காலம் திரு. கேதீஸ்வரன் அவர்களது பாரிய ஒத்துழைப்பு அளப்பரியது.

சமயப்பற்றும் பொது நலவிருப்பும் கொண்ட மக்கள் பெரியாரின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். அன்னார் பல்வளமும் பெற்று நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

**மு.பரஞ்சோதி**
அதிபர், ஆசிரிய கலாசாலை, கோப்பாய்.

## இந்துக் குருவின் ஆசி

திரு. கதிரவேலு கேதீஸ்வரன் அவர்கள் கோப்பாய் பிரதேச செயலராக 1994ஆம் ஆண்டு பதவி ஏற்றார். இவர் தெய்வ நம்பிக்கையும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கோட்பாடும், மக்களுடன் சேர்ந்து பழகும் நற்பண்பும் உடையவர். கோப்பாய் மக்கள் சுதந்திரமாகவும் அமைதியாகவும் வாழக் கடமை செய்யும் உத்தமனான பண்பாளர். இவரின் தன்னலமற்ற சேவையும் அமைதியான சுபாவமும் இனிமையாகப் பழகும் பண்பும் எம்மால் மறக்க முடியாது. சிறந்த பண்பாளர்.

திரு. க. கேதீஸ்வரன் அவர்கள் எந்த நேரம் என்று பார்க்காமல் ஆலயங்கள், சுகாதார நிலையங்கள், பாடசாலைகள் போன்ற பொது நிறுவனங்களுக்குத் தன்னாலான சகல உதவிகளையும் செய்து சிறப்பிப்பவர். இப்படியான நற்பண்புகள் நிறைந்த திரு. க. கேதீஸ்வரன் அவர்கள் தமது குடும்பத்தினருடன் நீடூழி காலம் வாழ வேண்டுமென்று அம்பிகையைப் பிரார்த்திக்கிறேன். அவர்களின் விழா சிறப்புற நடைபெற எல்லாம் வல்ல அம்பிகையின் பாதக் கமலங்களை வணங்கி ஆசி கூறுகிறேன்.

இங்ஙனம்,
"சிவாச்சார்ய திலகம்"
"வேத சிவாகம வித்தியா பூஷணம்"
**சிவஸ்ரீ.ப.சண்முகராஜக் குருக்கள்.**
பிரதம குரு, கண்ணகை அம்மன் கோயில், கோப்பாய்.

## சிறந்த சேவையாளன்

வலி. கிழக்குப் பிரதேச செயலரும், வலி. கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் விசேட ஆணையாளருமாகிய திரு. க. கேதீஸ்வரன் அவர்கள் தமது 60 ஆவது அகவையை பூர்த்தி செய்வதையிட்டு அவரை வாழ்த்திப் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

இவர் கடந்த ஏழு வருடங்களாக வலி. கிழக்குப் பிரதேசத்தினை கட்டியெழுப்புவதில் விடாமுயற்சியுடன் சேவையாற்றிய சிறந்த சேவையாளனாவார். குறிப்பாக 1995 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையின் போது எமது பிரதேசம் பாதிப்படைந்த நிலையிலிருந்தது. இதனைக் கருத்திற் கொண்டு அரசிடமும், அரசசார்பற்ற நிறுவனங்களிடமும் நிதியுதவிகளைப் பெற்று அச்சுவேலி, உடுப்பிட்டி பகுதிகளில் சந்தைக் கட்டடங்களையும், அலுவலகக் கட்டடங்களையும் புனரமைப்பதற்கு பெரிதும் பாடுபட்டு உழைத்தமை பாராட்டிற்குரியது.

இவரது சேவைக்காலத்தில் தமது சக ஊழியரை அன்பாய் கட்டுப்படுத்தி, திறமையாக வழி நடத்தி தமது தலைமைத்துவப் பண்பை ஏனைய அரச சேவையிலுள்ளவர்களிற்கு மிளிர வைத்த பெருமை இவரையே சாரும்.

மேலும் இவரது சேவை எமது பிரதேச மக்களிற்கு என்றென்றும் தேவை. இவ்வாறு வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணி பூண்ட திரு. க. கேதீஸ்வரன் அவர்கள் நீண்ட ஆயுளுடன் சகல சௌபாக்கியங்களும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ எல்லாம் வல்ல இறைவனின் அருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.

**தலைவர், செயலாளர், உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள்.**
வலி. கிழக்குப் பிரதேச சபை.

## நிர்வாக இயந்திரத்தில் ஒரு மனிதன்

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் கடந்த இருபது ஆண்டுகளாக இடர்களின் மத்தியில் வாழும் மக்களுக்கான புனர்வாழ்வு, நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. இந்தக் காலத்தில் 'தமிழ் மக்களின் இடப்பெயர்வு அவர்த்தம்' முக்கியமானது. இவ் இடப்பெயர்வு தொன்னூறுகளில் யாழ்ப்பாணத்தை உலுப்பியது. அவ்வேளைகளில் யாழ்ப்பாணத்தில் இருந்த அரசசார்பற்ற நிறுவனங்களும், அரச அதிபர், பிரதேச செயலர்களும் ஒரு புரிந்துணர்வு அடிப்படையில் இணைந்து சேவையாற்றினர். ஒரு மனிதனை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் 90களில் சந்தித்தது. அம்மனிதன் தற்போது கோப்பாய் பிரதேச செயலராக அன்றில் இருந்து இன்றுவரை உள்ள திரு. கேதீஸ்வரன். தொடர்ந்து பல்வேறு செயற்பாடுகளில் எம்முடன் இணைந்து செயற்பட்டு வருகின்றார். இவர் போன்றவர்களின் பணியால்தான் எம் இனம் உயிர்ப்போடு வாழ முடிகிறது.

TRRO நிறுவனம் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்று பல தடவைகள் திரு. கேதீஸ்வரன் தொடர்பு கொண்டு அம்மக்கள் நன்மையடைய வழிசமைத்துள்ளார். இவ்வாறான பணியில் பின்வருவனவற்றை நாம் குறிப்பிடலாம்.

1. இடப்பெயர்வின் போது மறவன்புலோ மக்களின் நீரில்லாப் பிரச்சினையை கவனத்தில் எடுத்து பல கொட்டில்களை கட்டிக் கொடுத்தது மல்லாமல் மூன்று குழாய்க் கிணறுகளையும் அடித்து அவர்களுக்கு சுத்தமான நீர் பெறுவதற்கு வசதி செய்து கொடுத்தமை.

2. 1995ஆம் ஆண்டு பாரிய இடம்பெயர்வின்பின் மக்கள் மீளவும் கோப்பாய்ப் பகுதிகளில் குடியேறினர். இவ்வேளை அவர்கள் மீண்டும் வாழ்வைத் தொடங்குவதற்கு வசதியாக அடிப்படைப் பொருள்களை TRRO நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொடுத்தமை.

3. அச்செழுப் பகுதியில் இராணுவ நடவடிக்கை காரணமாக தமது நிலங்களை மீள் உருவாக்கம் செய்யமுடியாமல் இருந்த விவசாயிகளுக்கு கடனுதவிகளை TRRO நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொடுத்து உற்பத்தி ஊக்குவிப்புப் பணியை மேற்கொண்டமை.

4. அச்சுவேலியில் உழைப்பாளரை இழந்த பெண்களுக்காக அவர்களின் வாழ்வு மேம்பாட்டு பணிக்கான நிதியை TRRO நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொடுத்த செயற்பாடு

மக்கள் தேவைகளை இனங்கண்டு அத்தேவைகளை பூர்த்தி செய்வதற்காக மக்களிடம் சென்று செயற்படும் பண்பை திரு. கேதீஸ்வரனிடம் காண முடியும். கடன் வழங்கு நடவடிக்கை, நிவாரண நடவடிக்கைகளில் எம்மோடு களத்தில் நின்று உற்சாகம் ஊட்டுவார்.

**அ.நல்லதம்பி**
தலைவர்,
அகதிகள் புனர்வாழ்வு நிலையம். (TRRO).


விளம்பர அன்பளிப்பு:-

- வலி.கிழக்கு(நீர்வேலி) பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்.
- வலி.கிழக்கு(அச்சுவேலி) பல.நோக்கு கூட்டுறவுச் சங்கம்.
- வலி.கிழக்கு(கோப்பாய்) பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.
- வலி.கிழக்கு(அச்சுவேலி) பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.
- இராசையா இராஜேஸ்வரன் – இருபாலை கோண்டாவில் வீதி, கோப்பாய் தெற்கு.
- மணியம் கிறெஸ்சர் – இராச வீதி, கோப்பாய்.
- வேல் ரேட் சென்ரர் – ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(81)7513

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜுலை22

யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளி இடங்களுக்குச் செல்வதற்கான பயண அனுமதிக்கு விண்ணப்பித்தவர்களில இம்மாதம் 15ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

### சங்கானை

(181470ஏ) (186774ஏ) (187042ஏ)
(187042பி) (189332ஏ) (189333ஏ)
(190473ஏ) (190495ஏ) (190506ஏ)
(190534ஏ) (190534பி) (190589ஏ)
(190589பி) (190624ஏ) (190624பி)
(190652ஏ) (190658ஏ) (190658பி)
(191768ஏ) (191768பி) (191983ஏ)
(192043ஏ) (192043பி) (192232ஏ)
(192245ஏ) (192246ஏ) (192269ஏ)
(192269பி) (192340ஏ) (192340பி)
(198710ஏ)

### நல்லூர்

(182772ஏ) (189592ஏ) (190650ஏ)
(190650பி) (190687ஏ) (191790ஏ)
(191965ஏ) (192039ஏ) (192040ஏ)

### சண்டிலிப்பாய்

(179133ஏ) (179133பி) (179133சி)
(182788ஏ) (185102ஏ) (185207ஏ)
(185243ஏ) (186854ஏ) (186854பி)
(186934ஏ) (187015ஏ) (187172ஏ)
(187172பி) (188701ஏ) (188754ஏ)
(189320ஏ) (189418ஏ) (189492ஏ)
(189492பி) (189543ஏ) (190485ஏ)
(190485சி) (190485டி) (190485பி)
(190591ஏ) (190625ஏ) (190741ஏ)
(191754ஏ) (191754பி) (191760ஏ)
(191812ஏ) (191812பி) (191837ஏ)
(191837பி) (191837சி) (191837டி)
(191838ஏ) (191846ஏ) (191846பி)
(191900ஏ) (191906ஏ) (191906பி)
(191906சி) (191906டி) (191908ஏ)
(191910ஏ) (191910பி) (191910சி)
(191910டி) (191933ஏ) (191933பி)
(191933சி) (191933டி) (191961ஏ)
(191961பி) (191961சி) (191961டி)
(191967ஏ) (191967பி) (191968ஏ)
(192021ஏ) (192036ஏ) (192036பி)
(192036சி) (192036டி) (192037ஏ)
(192218ஏ) (192218பி) (192224ஏ)
(192230ஏ) (192260ஏ) (192260பி)
(192260சி) (192268ஏ) (192268பி)
(194836ஏ)

### தெல்லிப்பழை

(184866ஏ) (184917ஏ) (184918ஏ)
(187195ஏ) (189471ஏ) (189576ஏ)
(189576பி) (190472ஏ) (190494ஏ)
(190494பி) (191844ஏ) (191887ஏ)
(191887பி) (191904ஏ) (191909ஏ)
(191923ஏ) (192008ஏ) (192015ஏ)
(192015பி) (192016ஏ) (192195ஏ)
(192198ஏ) (192249ஏ) (192249பி)
(192249சி) (192308ஏ)

### உடுவில்

(172857ஏ) (176568ஏ) (176568பி)
(180362ஏ) (183129ஏ) (183272ஏ)
(183272பி) (186773ஏ) (187090ஏ)
(187090பி) (187090சி) (187090டி)
(187090ஈ) (187090எவ்)
(187153ஏ) (187153பி) (187153சி)
(189399ஏ) (189399பி) (189457ஏ)
(189457பி) (189457சி) (189457டி)
(189459ஏ) (189459பி) (189537ஏ)
(190471ஏ) (190503ஏ) (190561ஏ)
(190625சி) (190627ஏ) (190627பி)
(190627சி) (190630ஏ) (190633ஏ)
(190634ஏ) (190634பி) (191774ஏ)
(191824ஏ) (191829ஏ) (191830ஏ)
(191830பி) (191830சி) (191899ஏ)
(191899பி) (191924ஏ) (191941ஏ)
(191941பி) (191956ஏ) (191956பி)
(191964ஏ) (192009ஏ) (192049ஏ)
(192049பி) (192191ஏ) (192351ஏ)
(192413ஏ)

இம் மாதம் 18ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

### சங்கானை

(191892ஏ) (191917ஏ) (191917பி)
(191917சி) (192219ஏ) (192219பி)
(193514ஏ) (193672ஏ) (193672பி)
(193672சி) (193686ஏ) (193686பி)
(193686சி) (193686டி) (193686ஈ)
(194304ஏ) (194909ஏ) (194909பி)
(194982ஏ)

### மருதங்கேணி

(164895ஏ) (164899ஏ) (164899பி)
(164913ஏ) (164922ஏ) (164929ஏ)
(164929பி) (164929சி) (164929டி)
(164929ஈ) (164929எவ்)(164930ஏ)
(164930பி) (164930சி) (164931ஏ)
(164933ஏ) (164934ஏ)

### நல்லூர்

(191868ஏ) (192440ஏ) (192441ஏ)
(192441பி) (192465ஏ) (192465பி)
(194307ஏ) (194307பி) (194406ஏ)

### சண்டிலிப்பாய்

(174795ஏ) (182641ஏ) (184965ஏ)
(184967ஏ) (184967பி) (184967சி)
(184967டி) (191783ஏ) (191783பி)
(193638ஏ) (193638பி) (193693ஏ)
(193736ஏ) (193736பி) (193737ஏ)
(194286ஏ) (194301ஏ) (194301பி)
(194301சி) (194301டி) (194301ஈ)
(194401ஏ) (194405ஏ) (194466ஏ)
(194490ஏ) (194490பி) (194490சி)
(194490டி) (194858ஏ) (194858பி)
(195027ஏ)

### தெல்லிப்பழை

(193620ஏ) (193620பி) (193621ஏ)
(194236ஏ) (194236பி) (194403ஏ)

### உடுவில்

(190697ஏ) (190697பி) (190698ஏ)
(190698பி) (192306ஏ) (192350ஏ)
(192350பி) (192350சி) (192350டி)
(193610ஏ) (193611ஏ) (193611பி)
(193714ஏ) (193287ஏ) (195004ஏ)
(195092ஏ) (195092பி)

### சங்கானை

(186857ஏ) (186857பி) (189322ஏ)
(189379ஏ) (189380ஏ) (189516ஏ)
(189516பி) (190514ஏ) (190514பி)
(190514சி) (190657ஏ) (190657பி)
(190657சி) (191762ஏ) (191781ஏ)
(191781பி) (191792ஏ) (191809ஏ)
(191911ஏ) (192031ஏ) (192244ஏ)
(192244பி) (192244சி) (192290ஏ)
(192290பி) (192291ஏ) (192414ஏ)
(192414பி) (193515ஏ) (193607ஏ)
(193618ஏ) (193660ஏ) (193660பி)
(193678ஏ) (193789ஏ) (193789பி)
(194207ஏ) (194218ஏ) (194252ஏ)
(194252பி) (194258ஏ) (194322ஏ)
(194332ஏ) (194333ஏ) (194333பி)
(194334ஏ) (194355ஏ) (194355பி)
(194355சி) (194409ஏ) (194462ஏ)
(194890ஏ) (194890பி) (194893ஏ)
(194924ஏ) (194983ஏ) (194983பி)
(194983சி) (194984ஏ) (195044ஏ)
(195079ஏ)

### நல்லூர்

(192336ஏ) (192452ஏ) (192454ஏ)
(193502ஏ) (193502பி) (193519ஏ)
(193703ஏ) (193703பி) (193703சி)
(194194ஏ) (194194பி) (194246ஏ)
(194247ஏ) (194247பி) (194293ஏ)
(194293பி) (194451ஏ) (194474ஏ)
(194474பி) (194474சி) (194952ஏ)
(194956ஏ) (194989ஏ) (194990ஏ)
(194992ஏ) (195018ஏ) (195043ஏ)
(195879ஏ)

### சண்டிலிப்பாய்

(179298ஏ) (179298பி) (179298சி)
(183148ஏ) (183148பி) (183244ஏ)
(183244பி) (183244சி) (183926ஏ)
(183966ஏ) (183966பி) (186804ஏ)
(186804பி) (186977ஏ) (186981ஏ)
(189589ஏ) (190464ஏ) (190573ஏ)
(190603ஏ) (190603பி) (190716ஏ)
(191771ஏ) (191785ஏ) (191785பி)
(191931ஏ) (191931பி) (191931சி)
(191931டி) (191986ஏ) (191986பி)
(192310ஏ) (192347ஏ) (192353ஏ)
(192396ஏ) (192396பி) (192490ஏ)
(193551ஏ) (193551பி) (193584ஏ)
(193598ஏ) (193598பி) (193659ஏ)
(193699ஏ) (193699பி) (194197ஏ)
(194198ஏ) (194209ஏ) (194209பி)
(194209சி) (194314ஏ) (194314பி)
(194354ஏ) (194393ஏ) (194393பி)
(194415ஏ) (194415பி) (194415சி)
(194865ஏ) (194868ஏ) (194904ஏ)
(194953ஏ) (194959ஏ) (194998ஏ)
(194998பி) (195000ஏ) (195013ஏ)
(195014ஏ) (195014பி) (195016ஏ)
(195031ஏ) (195031பி) (195125ஏ)
(195426ஏ) (195847ஏ) (195862ஏ)
(197189ஏ) (197189பி)

### தெல்லிப்பழை

(189461ஏ) (189461பி) (192267ஏ)
(192267பி) (192267சி) (192267டி)
(192267ஈ) (192379ஏ) (193649ஏ)
(193649பி) (193683ஏ) (193683பி)
(193710ஏ) (193710பி) (193748ஏ)
(194196ஏ) (194196பி) (194259ஏ)
(194259பி) (194262ஏ) (194262பி)
(194262சி) (194302ஏ) (194302பி)
(194302சி) (194321ஏ) (194416ஏ)
(194440ஏ) (194443ஏ) (194855ஏ)
(194855பி) (194856ஏ) (194866ஏ)
(194913ஏ) (194955ஏ) (194955பி)
(195038ஏ) (195039ஏ) (195143ஏ)
(195843ஏ) (195843பி)

### உடுவில்

(161930ஏ) (161930பி) (161930சி)
(182644ஏ) (183204ஏ) (189454ஏ)
(189455ஏ) (190696ஏ) (190696பி)
(191818ஏ) (191818பி) (191820ஏ)
(191820பி) (191820சி) (191958ஏ)
(191979ஏ) (191979பி) (191979சி)
(191987ஏ) (191987பி) (192193ஏ)
(192193பி) (192363ஏ) (192437ஏ)
(192437பி) (192442ஏ) (193523ஏ)
(193523பி) (193549ஏ) (193549பி)
(193594ஏ) (193594பி) (193595ஏ)
(193595பி) (193635ஏ) (193635பி)
(193676ஏ) (193676பி) (193680ஏ)
(194200ஏ) (194229ஏ) (194233ஏ)
(194264ஏ) (194294ஏ) (194295ஏ)
(194295பி) (194341ஏ) (194342ஏ)
(194417ஏ) (194418ஏ) (194418பி)
(194480ஏ) (194839ஏ) (194896ஏ)
(194930ஏ) (194980ஏ) (194980பி)
(194980சி) (199363ஏ) (க-10)


## 43ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

25 - 10 - 1985



10 - 06 - 2001

### செல்வன் ஸ்ரீநிதி கபில்

**கோடையிடி இடித்ததுவோ வானம் குலுங்கியதோ!**
**காலனுக்கு அவசரமோ கனிதவறிப் பறித்தானோ?**
**சாடையாகத் தெரிந்திருந்தால் கூற்றுவனை விடுவோமா?**
**விதியினிலே பழி போட்டு விம்முகிறோம் விதிர்க்கின்றோம்?**

இன்று (22. 07. 2001) ஞாயிற்றுக்கிழமை அமரரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய வைபவத்திலும் மற்றும் மதிய போசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அழைப்புக் கிடைக்காதவர்கள் இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**-குடும்பத்தினர்.**

*ஊரெழு கிழக்கு, ஊரெழு.* (90303)


# மட்டு. மாமாங்கேஸ்வரத்தில் ஆடி அமாவாசை உற்சவம்

## பெரும் எண்ணிக்கையானோர் பங்குபற்றினர்

மட்டக்களப்பு,ஜுலை22

வரலாற்றுச் சிறப்பு மிக்க மட்டக்களப்பு ஸ்ரீமாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நண்பகல் சிறப்பாக நடைபெற்றது. உற்சவத்தில் பெருந்தொகையான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

ஆடி அமாவாசை தினமான அன்று பெருந்தொகையானோர் விரதம் இருந்து பிதிர்க்கடன்களைத் தீர்த்தக்குளத்தில் நிறைவேற்றினர்.

காலை 10.30 மணியளவில் மூலமூர்த்திகள் ஆலயத்திலிருந்து புறப்பட்டு, யாகசாலையில் நடைபெற்ற பூசைகளையடுத்து தீர்த்தக்குளத்தில் 12மணியளவில் தீர்த்தோற்சவம் நடைபெற்றது. அன்னதான சபையினர் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர்.

மாமாங்கேஸ்வரர் ஆலய தீர்த்தோற்சவத்தை முன்னிட்டு, மட்டக்களப்பு நகரில் உள்ள பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. நகரில் வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன. அலுவலகங்களுக்கும் ஊழியர் வரவு குறைவாகவே காணப்பட்டது. ஆலயத்திற்குச் செல்வோரின் வசதி கருதி மக்கள்மயப்படுத்தப்பட்ட ஈஸ்ரன் பஸ் கம்பனி விசேட சேவைகளை நடத்தியது.

(ஐ-21)

## சர்வஜன வாக்கெடுப்பு

# 1 கோடி 22 லட்சம் பேர் வாக்களிப்பதற்குத் தகுதி

கொழும்பு, ஜுலை22

அடுத்தமாதம் 21 ஆம் திகதி நடைபெற்றவுள்ள சர்வஜன வாக்கெடுப்பில் ஒரு கோடியே 22 லட்சத்து 28 ஆயிரத்து 667 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் எனத் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இவர்களின் பெயர் விவரங்கள் அனைத்தும் வாக்காளர் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை 2000ஆம ஆண்டில் வாக்காளர் இடாப்பில் புதிதாகப் பதிவு செய்தவர்களின் பெயர்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் -

சர்வஜன வாக்கெடுப்பை ஒட்டி தேர்தல் திணைக்களத்தின் பணிகளை துரிதப் படுத்துவதற்காக தேர்தல் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற ஊழியர்களை கடமைக்கு அழைத்துள்ளதாகவும் -

தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(உ-4)

# பிரசாரக் கூட்டங்கள் குறித்து ஆராய நாளை மறுதினம் கூட்டம்

கொழும்பு, ஜுலை22

சர்வஜன் வாக்கெடுப்பை ஒட்டிய தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நடத்துவது, குறித்து ஆராய்வதற்கான கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை இராஜகிரியவில் உள்ள தேர்தல் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட சகல அரசியல் கட்சிகளினதும் செயலாளர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வர்.

இதேவேளை -

சர்வஜன வாக்கெடுப்புத் தொடர்பான யோசனைக்கு பொது மக்கள் ஐக்கிய முன்னணி, லங்கா சமசமாஜக் கட்சி, ஈ.பி.டி.பி முதலிய 16 அரசியல் கட்சிகள் ஆதரவளித்துள்ளன என்றும் -

ஐ.தே.கட்சி, - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், சிஹல உறுமய, தமிழர் விடுதலைக் கூட்டணி முதலிய ஆறு கட்சிகள் எதிர்புத் தெரிவித்துள்ளன என்றும் -

தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க அறிவித்துள்ளார்.

மேற்படி யோசனை குறித்து தங்களது முடிவை இதுவரை தனக்கு அறிவிக்காத அரசியல் கட்சிகள் இது விடயத்தில் நடுநிலைக் கட்சிகளாகக் கருதப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-7)

# தேர்தலுக்குத் தேவையான நிதி திணைக்களத்திடம் உள்ளதாம்!

கொழும்பு, ஜுலை22

சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்குத் தேவையான நிதி, அரசாங்கத்தினால் ஏற்கனவே தேர்தல் திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்டிருப்பதாக உதவித் தேர்தல் ஆணையாளர் கே.சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

இதேவேளை வாக்கெடுப்புப் பணிகளுக்கான வாகனங்கள் வெளியிடங்களில் இருந்து வாடகை அடிப்படையில் பெறப்படவுள்ளதாகவும் -

பணியாளர்களுக்கு வரையறையற்ற மேலதிக கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அனுமதியளிக்கப்பட்டிருப்பதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார்.

வாக்குகளை எண்ணும் பணியில 15 ஆயிரம் முதல் 40 ஆயிரம் பேர் வரை ஈடுபடுத்தப்படவுள்ளதாகத் தேர்தல் திணைக்களத்தின் மற்றுமொரு அதிகாரி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் குறை நிரப்புப் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பிக்காமல், சர்வஜன வாக்கெடுப்புக்கான நிதி வேறுவழி மூலம் பெறுவதற்கு அரசு முயற்சி எடுத்தால் அதற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப் போவதாக எதிர்க்கட்சிகள் எச்சரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(உ-4)

# எதிர்த்து வாக்களிக்க எதிர்க்கட்சிகள் முடிவு!

கொழும்பு, ஜுலை22

அடுத்தமாதம் 21ஆம் திகதி அரசு நடத்தவிருக்கும் சர்வஜன வாக்கெடுப்பில் அரசின் கோரிக்கைக்கு எதிராக வாக்களிப்பதென எதிர்க்கட்சிகள் நேற்று முன்தினம் ஒன்றுகூடி முடிவு செய்துள்ளன.

நாடாளுமன்றக் கூட்டத்தில் நேற்று முன்தினம் ஒன்றுகூடிய எதிர்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பல விடயங்கள் குறித்து ஆராய்ந்தனர்.

அங்கு எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் வருமாறு:-

★ அடுத்தமாதம் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள சர்வஜன வாக்கெடுப்பில் அரசுக்கு எதிராக வாக்களித்தல்.

★ கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தைத் தடுப்பதற்கு அரசு எடுத்த அடக்குமுறை நடவடிக்கைகளைக் கண்டித்தல்.

★ ஜனாதிபதி மீது குற்ற விசாரணைப் பிரேரணை கொண்டு வருதல்.

# பச்சிலைப்பள்ளி பகுதி மக்களுக்கு புதிய உலர் உணவு அட்டைகள்

## நாளைமுதல் விநியோகிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 22

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கு நாளை முதல் புதிதாக 'இ' 'உ' உலர் உணவு அட்டைகள் வழங்கப்படவுள்ளதாக உதவி அரசாங்க அதிபர் சு. புத்திசிகாமணி அறிவித்துள்ளார்.

பருத்தித்துறையில் வசிப்பவர்களுக்கு நாளை திங்கள் கிழமையும் —

வல்வெட்டித்துறை, மருதங்கேணிப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு 25 ஆம் திகதி புதன்கிழமையும் —

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுகளில் வசிப்பவர்களுக்கு 26 ஆம் திகதி வியாழக்கிழமையும் —

பருத்தித்துறையில் இயங்கும் பளைப் பிரதேச செயலகத்தில் வைத்து நிவாரண அட்டைகள் வழங்கப்படும்.

சண்டிலிப்பாய், சங்கானை பிரதேச செயலர் பிரிவுகளில் வசிப்பவர்களுக்கு 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும், யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், உடுவில், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுகளில் வசிப்பவர்களுக்கு எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் யாழ்ப்பாணத்தில் இயங்கும் பளைப் பிரதேச செயலக உப அலுவலகத்தில் வைத்து அட்டைகள் வழங்கப்படும்.

மேற்படி நிவாரண அட்டைகளுடன் குடும்பப் பதிவு அட்டை, சேத மதிப்பீட்டுப் படிவம் என்பனவும் வழங்கப்படும் என்றும்—

நிவாரண அட்டைகளைப் பெறவருவோர் தேசிய அடையாள அட்டை குடும்பத்தில் உள்ள அனைவரினதும் விசேட அடையாள அட்டை விவரங்கள், பழைய நிவாரண அட்டைகள் ஆகியவற்றை எடுத்து வரவேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

## அச்சுவேலி ஆஸ்பத்திரிக்கு மருத்துவ உபகரணங்கள்

அச்சுவேலி, ஜூலை 22

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்கு கண், காது, மூக்கு, தொண்டை பரிசோதனைக்கான கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளருக்கான சிகிச்சை முறைகளை மேம்படுத்தும் நோக்குடன் கண், காது, மூக்கு, தொண்டை பகுதிகளில் சோதனைகளை மேற்கொள்வதற்கான கருவிகள் சுகாதாரப் பகுதியினால் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி சாதனங்கள்மூலம் சிகிச்சை அளிப்பதற்கும், பொருத்தமான முறையில் நோயாளருக்கு வழிகாட்டல் ஆலோசனைகளை மேற்கொள்வதற்கும் வசதிகள் செய்யப்பட்டிருப்பதாக அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ஐ-11)

## கொழும்புத்துறைப் பகுதியில் படையினர் மீட்ட நகைகளை உரியவர் பெற்றுக்கொள்ள வசதி

யாழ்ப்பாணம், ஜூலை 22

அண்மையில் கொழும்புத்துறைப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த 51 ஆவது படையணியின் இராணுவப்பொறியியல் பிரிவினர் அப்பகுதியில் சில தங்க ஆபரணங்களை மீட்டுள்ளதாக 51 ஆவது படையணியினர் அறிவித்துள்ளனர்.

இரண்டுதங்கச் சங்கிலிகள் 2 தங்க வளையல்கள், ஒரு தங்க மோதிரம், ஒருசோடி தங்கத்தோடுகள் என்பனவே மீட்கப்பட்டுள்ளன என்றும்–

இந்த நகைகளின் உரிமையாளர்கள் யாழ்ப்பாணம் சுபாஸ் ஹோட்டலில் உள்ள 51 ஆவது படையணித்தலைமையகத்தின் இராணுவ பொலிஸாருடன் தொடர்பு கொண்டு உரிய ஆதாரங்களைக்காட்டி அவற்றைப்பெற்றுக் கொள்ளுமாறு 51 ஆவது படையணியின சிவில் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ-4)

## கிராம அபிவிருத்திச் சங்கம் வறியோருக்கு கண்ணாடிகள்

சண்டிலிப்பாய், ஜூலை22

வலி. தென் மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவு கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தின் அனுசரணையுடன் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் வறுமை நிலையில் உள்ள கண்பார்வை குறைந்தவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

வலி.வடக்கு பிரதேசசபையின் முன்னாள் தலைவரும், மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் முன்னாள் தலைவருமான அமரர் எஸ். ஸ்ரீ பாஸ்கரனின் ஞாபகார்த்தமாக இக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவரும், மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவருமான திருமதி பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன் இக்கண்ணாடிகளை வழங்குவார். வலி. தென் மேற்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஒவ்வொன்றும் தமது பிரிவில் வறுமை நிலையிலுள்ள கண்பார்வை குறைந்தவர்கள் ஐந்து பேரைத் தெரிவு செய்து சமாசத்திற்கு சமர்ப்பிக்குமாறு சண்டிலிப்பாய் பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க. சிறிபதி தெரிவித்துள்ளார். (ஐ-135)

## இந்துநாகரிக பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ்.சைவபரிபாலன சபையினரால் கடந்த 12 ஆம் 13 ஆம் திகதிகளில் நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுப் பின்னர் ஒத்தி வைக்கப்பட்ட ஜி. சி. ஈ. உயர்தர மாணவர்களுக்கான இந்து நாகரிகம், இந்துசமயம் ஆகிய பாடங்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 26 ஆம், 27 ஆம் திகதிகளில் நடைபெறும் என்று பரீட்சைச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஐ-7)

## பாலர் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 22

கோண்டாவில் கிழக்கு கலைமகள் பாலர் பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு கோண்டாவில் அரசடிப்பிள்ளையார் ஆலய முன்றிலில் இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் சபா. ஜெயராஜா பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (ஐ-7)

## கூட்டம்

சண்டிலிப்பாய், ஜூலை 22

பண்டத்தரிப்பு பிரஜைகள் குழுவின் புனரமைப்புப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குழுவின் தலைவரும், பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவருமான ஏ.வி. துரையாப்பா தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் முக்கிய விடயங்கள் பல ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-135)

## சிறுவர் இல்லத்துக்கு தளபாடங்கள்

வலி.தென்மேற்கு ஜூலை. 22

திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்லத்திற்கு 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாட உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இன்று ஞாயிறு மாலை 2 30 மணிக்கு வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினால் மேற்படி தளபாடங்கள் சிறுவர் இல்லத்திற்கு வழங்கப்படும்.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் எஸ். சதாசிவம் மேற்கொண்டுள்ளார். (ஐ-185)

## தாச்சிப் போட்டி

வலி. வடக்கு, ஜூலை 22

யாழ். மாவட்டத் தாச்சி சங்கம் நடத்தும் தாச்சி சுற்றுப் போட்டியில், இன்று ஞாயிறு பிற்பகல் 4.30 மணிக்கு மருதனார்மடம் சந்திக்கு அருகில் உள்ள ஆடுகளத்தில் நடைபெறவுள்ள ஆட்டத்தில், உடுவில் சிந்து விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் சிவசக்தி விளையாட்டுக்கழகம் அணிமோதும். (உ-86)

## சைவப்புலவர் சங்க பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 22

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் 41 ஆவது ஆண்டு பட்டமளிப்பு விழாவும், சைவப்புலவர் வ. கந்தசாமியின் 'சைவபூஷணம்' பட்டமளிப்பு விழாவும் இன்று காலை 9 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

சங்கத்தின் தலைவர் சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக் கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

அருளுரையை நல்லைஆதீன முதல்வரும், ஆசியுரையை சைவப்புலவர், பண்டிதர் இ. செல்லத்துரையும் நிகழ்த்துவர்.

தொடர்ந்து இளஞ்சைவப் புலவர் பட்டசையில் சித்தி பெற்றவர்களுக்கான பட்டமளிப்பு இடம்பெறும். யாழ். சைவபரிபாலன சபையின் பரீட்சைச்செயலாளர் சைவப் புலவர் வ. கந்தசாமி இந்த நிகழ்வில் 'சைவபூஷணம்' என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படுவார். (ஐ-7)

## சாரணர் தேசிய விழா

தென்மராட்சி, ஜூலை 22

இலங்கை முதலுதவிச் சங்கத்தின் வடமராட்சி, தென்மராட்சி பிரதேசக் கிளைகள் நடத்தும் இலங்கை முதலுதவிச் சங்க தேசிய விழா இன்று காலை 10 மணிக்கு கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச சாரண ஆணையாளர் மு. விஜயரட்ணம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் இலங்கை முதலுதவிச் சங்க இயக்குநரும், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருமான கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை பிரதமவிருந்தினராகவும், வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா, தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (ஐ-7-117)

## இறுதியாட்டமும் பரிசளிப்பும்

வடமராட்சி, ஜூலை 22

தும்பளை தம்புருவளை விளையாட்டுக் கழகம் அமரர் நா. செல்வமாணிக்கம் ஞாபகார்த்தமாக நடத்திய மென்பந்து கிரிக்கெற் சுற்றுப்போட்டியின்இறுதிப்போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கணக்கிலாவத்தை மைதானத்தில் கழகத் தலைவர் சி. சிவசங்கர் தலைமையில் நடைபெறும்.

பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி பிரதம விருந்தினராகவும் ஓய்வு பெற்ற நில அளவையாளர் ஆ. வேல்முருகு சிறப்பு விருந்தினராகவும் ஷன்சன் – போல் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வார்கள். (ஐ-173)

## அச்சுவேலியில் கிளை நிலையத்தை நிறுவுக

யாழ். மாவட்ட அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கத்தின் கிளை நிலையத்தை அச்சுவேலியில் ஆரம்பிக்குமாறு அச்சுவேலி தெற்கு விவசாயிகள் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

அச்சுவேலிப்பகுதியில் உள்ள விவசாயிகள், கால்நடை வளர்ப்போரின் வசதியைக் கருத்தில் கொண்டும், பால் உணவுப் பொருள்களின் பாவனையை அதிகரிக்கும் நோக்குடனும் விற்பனை நிலையத்தை உடனடியாக அச்சுவேலியில் ஆரம்பிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

வடமராட்சியில் மந்திகைக்கும், வலி. கிழக்கில் இருபாலைக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில், யாழ்ப்பாணம் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் விற்பனை நிலையம் எதுவும் இயங்கவில்லை. புதிதாகக் கிளை நிலையத்தை ஆரம்பிப்பதற்கு அச்சுவேலிப் பகுதியே பொருத்தமான மத்திய நிலையம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-11)

## மரதன் ஓட்டம்

வலி.தென்மேற்கு, ஜூலை 22

வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையினால் நடத்தப்படும் மரதன் ஓட்டப்போட்டி இன்று ஞாயிறு காலை 6.00மணிக்கு ஆரம்பமாகும்.

தொடர்ந்து சைக்கிள் ஓட்டப் போட்டி காலை 7–30 மணிக்கும் மானிப்பாய் பிரதேச சபை வாயிலில் இருந்து ஆரம்பமாகும். (ஐ-185)

## சமய சந்திகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 22

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 10 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நாளை திங்கட்கிழமை காலை 7 மணிக்கு தேர்த்திருவிழாவும், நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (உ-4)

★ ★ ★

நீர்வை மாசிவன் அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோவில் அலங்கார உற்சவம் கடந்த 13 ஆம் திகதி முதல் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது,

உற்சவ காலங்களில் சிவத்தமிழ் சொல்லழகர் ச. லலீசனின் சமய சொற்பொழிவு இடம்பெற்று வருகிறது.

இந்தச் சமயப் பேருரையின் அடிப்படையில் சமய அறிவுப் போட்டி ஒன்று நாளை திங்கட்கிழமை மாலை ஆலய மண்டபத்தில் நடைபெற உள்ளது.

பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பாடசாலை மாணவர்கள், ஆலய பரிபாலன சபையினருடன் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-72)

★ ★ ★

கோண்டாவில் தில்லைபம்பதி ஸ்ரீ சிவகாமி அம்மன் ஆலயத்தின் ஆடிப்பூரத் திருவிழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

விசேட அபிஷேக ஆராதனைகள், ருதுசோபன வைபவம் என்பன இடம்பெற்று அம்பிகை வெளிவீதியுலாவும் நடைபெறும். (ஐ-7)

★ ★ ★

கரணவாய் மூத்தவிநாயகர் கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

அடுத்த மாதம் 2 ஆம் திகதி வியாழக்கிழமை இரதோற்சவமும், மறுநாளான 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறுவதுடன் மஹோற்சவம் நிறைவுறும். (ம-173)

★ ★ ★

ஏழாலை களபாவோடை வசந்தபுரம் அருள்மிகு வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான ஆடிப்பூரப் பெருவிழா, நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

காலை 10. 30 மணிக்கு ''அன்னைக்குகந்த ஆடிப்பூரம்'' என்னும் தலைப்பில் சிவானந்த வாரிதி சிவத்திரு வ. குமாரசாமி ஐயா சொற்பொழிவாற்றவுள்ளார். (உ-4)

சுன்னாகம் மயிலணி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை ஆடிப்பூரத் திருவிழா நடைபெறவுள்ளது.

முற்பகல் 11 மணி முதல் அபிஷேகம், ருதுசாந்தி வைபவம், அன்னதானம் என்பன இடம்பெறும். (ஐ-7)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

சகல வகையான இறைச்சிக்கோழிகளும் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19,முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச்சந்தையடி, நல்லூர். (90161)

புறொயிலர் இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். தொடர்பு: சங்கீத், 40, விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். (கல்வியங்காட்டுச் சந்தைக்கு அருகில்).(90282)

## புறொயிலர் குஞ்சுகள்

புறொயிலர்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. மற்றும் இறைச்சிக்கோழி, புறொயிலர், கல்பேட்ஸ் என்பனவும் விற்பனைக்கு உண்டு. சே.கிருஷ்ண குமார், பொன்னாலை வீதி (விதானை வளவு), மானிப்பாய். (90269)

## குருவிகள் விற்பனைக்கு

**African Love Birds** பல நிறங்கள், **Silver Ducks**, புறாக்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: 60, சேர் பொன்.இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். (90315)

## தவறிவிட்டது

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த சிவபாக்கியநாதன் நிலஜா என்பவருடைய விசேட அ. அட்டை (இல.091006990) 18.07.2001 அன்று அச்சுவேலி அரசினர் வைத்திய சாலைக்கும், பத்தமேனிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நாற்சதுர சுவிசேஷ சபை, பத்தமேனி, அச்சுவேலி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (90294)

**14/6,** சீனியர் லேன், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பூபாலசிங்கம் அன்னலெட்சுமி என்பவருடைய விசேட அ. அட்டை (இல.0902040199) தட்டா தெருச் சந்திக்கும், யாழ்.நகருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அபிராமி புடைவையகம், 155, 156, நவீன சந்தை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். **T.P.3525.** (90317)

## வியாழ மாற்ற பலாபலன்கள்

எங்கும் விற்பனையாகின்றன. ரூபா 10/= கணிப்பு: சத்தியா, அரசுத் தலைமை - அவிட்டம் முதலாம் பாதம மகரராசிக்கு 5 இல் சனி தோஷம், 6இல் வியாழன் மறைவு. (வியாழ சுகயீனம்) அரசை ஆட்டங்காணச் செய்யும். (90313)

## விற்பனைக்கு

**கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட, அன்னாசிப்பழம், மங்குஸ்தான், றம்புட்டான் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.**

**ஸ்ரீராம் நாதன் களஞ்சியம்,**
*213C, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
T.P.No. 2916 (90314)

## YOGI'S CAKE EXHIBITION

எனது மனையியல் வகுப்புகளில் பயிற்சி பெற்ற மாணவிகளுக்கான

**கேக் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கலும்**

எதிர்வரும **AUGUST** முதல் வாரத்தில் நடத்தத் தீர்மானித்திருப்பதால் என்னிடம் பயின்ற மாணவிகள் அனைவரும் உடன் வந்து சந்திக்கவும்.
அத்துடன் பழைய மாணவிகளும் இக்கண்காட்சியில் பங்குபற்றலாம்.

ஆசிரியை,
*75,அம்மன் றோட்,*
*நல்லூர்,யாழ்ப்பாணம்.*
(90316) T.P.2796

## வெளிவந்துவிட்டது!

## பொருளியல்

## நடைமுறை விடயங்கள்

2001 A/L பரீட்சை எதிர்பார்ப்புகள் அடங்கியது.

**ஆசிரியர் வே.கருணாகரன்** (90310)

☆ 2000இல் வெளிவந்த நடைமுறை விடயங்கள் அவ்வாண்டு A/L பரீட்சையில் 51புள்ளிகள் பெற உதவியது.

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



வலி.வடக்கு சமுர்த்தி
உத்தியோகத்தராகிய எங்களுக்கு
மிகவும் குறுகிய காலத்தில் நிரந்தர
நியமனம் பெற்றுத்தந்த
வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு,
வடக்கு - கிழக்கு தமிழ் விவகார,
இந்து சமய கலாசார அமைச்சர்
மாண்புமிகு கௌரவ
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்
காங்கேசன்துறை அமைப்பாளரும்
வலி.வடக்கு பிரதேச சபை
உறுப்பினருமாகிய
**திரு.தி.சிவகுமார் (வேலு)**
அவர்களுக்கும் மற்றும் ஏனைய
உறுப்பினர்களுக்கும் நன்றி
கூறுவதுடன் அவர்களைப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பிரதேச செயலகம்,
*வலி.வடக்கு, நிரந்தர நியமனம் பெற்ற சமுர்த்தி*
*அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.*
(90304)

## மணமகள் தேவை

67ஆம் ஆண்டு, செவ்வாய்க் குற்றமுள்ள, கார்த்திகை நட்சத்திரமுடைய, பொறியியலாளராகக் கொழும்பில் வேலை பார்க்கும் மணமகனுக்குத், தகுந்த மணப்பெண் தேவை. குறிப்பு, படத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும் தூர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (90312)

## புறொயிலர் விற்பனைக்கு

**Broiler** குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. **Broiler** இறைச்சிக்கோழிகளும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். **1Kg - 140/=,** வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும். தொடர்பு:- ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, **T.P.No. 3529, 2867** (90272)

இறைச்சிக்கோழி **(BROILERS)** கல்பேட்ஸ், சேவல் என்பன விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.15, 6ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (90080)

## விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் மலிவு விலையில் விற்கப்படும். புறொயிலர் விலை ரூபா 150/=. கல்பேட் விலை ரூபா 140/=. (குணம் கொத்துறொட்டிக் கடைக்கு அடுத்த வீட்டில்) இல.334, **K.K.S.** வீதி, சிவன் கோயிலடி. சுத்தம் செய்து கொடுக்கப்படும்.(90311)

## வீடு விற்பனைக்கு

பெருமாள் கோயில் தெற்கு ஒழுங்கையில் சகல வசதிகளுமுடைய 2 பரப்புக் காணி, வீடு (சுற்றுமதில், நனனீர்) உடன் விற்பனைக்குண்டு. தரகர் இல்லை. தொடர்பு:- இல.14, ஸ்ரீவெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம்.(90275)

## இலகு திருமணசேவை

1965 ஆயிலியம், படித்த அழகிய மணப்பெண்ணுக்கு உத்தியோக மணமகன் தேவை. சீதனம் உண்டு. 1963 **Computer** ஆஸ்திரேலியாவில் உத்தியோக, வதிவுடைமை மணப்பெண்ணுக்கு மணமகன் தேவை.. துரை விமலா, நாச்சியார் கோயிலடி, யாழ்ப்பாணம். (90237)

## வீடு வாடகைக்கு

கச்சேரி, பிரபல்ய பாடசாலைகளுக்கு மிக அண்மையில் வீடும், வளவும் வாடகைக்கு (விற்பனைக்கும்) உண்டு. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல.1333, மே/பா. உதயன்.(90308)

## டிஸ் அன்ரனா விற்பனைக்கு

**Receiver** நெக்ஸ்வேவ் **EX-8105**, யூரோஸ்ரார் **LT-950** கோல்ட், அல்பா கோல்ட், **LT-730** பிளஸ், யூரோஸ்ரார **LNB**, யூரோஸ்ரார் **LNBF**, அன்ரனா (8அடி, 10அடி) என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: **R.RAHKUMAR,** மார்கெட் லேன், ஆவரங்கால்.(90302)

## மணமகள் தேவை

கடந்த பத்து வருடங்களாக இங்கிலாந்தில் நிரந்தரமாக வசிக்கும் 29 வயது, 6 அடி உயர வெள்ளை நிறமுடைய அச்சுவினி நட்சத்திர M.Sc. பட்டம் பெற்று வங்கியில் உயர் பதவி வகிக்கும் பொறியியலாளருக்கு CIMA / பல்கலைக்கழகத்தில் கணனி / பொறியியல் பட்டம் பெற்ற பட்டதாரியை / இவ்வருடம் பட்டதாரியாகவுள்ள அழகிய மணமகளை இந்து கௌரவ குடும்பம் பெற்றோர் விரும்புகின்றனர். ஜாதகக் குறிப்பு ஏனைய விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்:
**விள.இல.1332 மே/பா. உதயன்.** (C/17492)

## விற்பனைக்கு

**மந்திகை மடத்தடி வீதியில் 'கருகம்பன்' என்னும் இடத்தில் தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு. அத்துடன் மந்திகை பஸ் நிலையத்தில் இருந்து மடத்தடி வீதியில் (250 யார் தூரத்தில்) வீதியோரமாக உள்ள காணியும் விற்பனைக்கு உண்டு.**

தொடர்பு:
கே.எஸ்.முத்துக்குமாரசுவாமி,
*(சட்டத்தரணி)*
*அம்பசிட்டி வீதி,*
*பருத்தித்துறை* (90309)

## கைப்பணியாளர் சங்கம் அங்குரார்ப்பணம்

தென்மராட்சி பிரதேச கைப்பணியாளர் சங்கத்தின் அங்குரார்ப்பண வைபவம் நாளை திங்கட்கிழமை பி.ப. 2.00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறும். பிரதேசத்தில் கிராமியக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள, ஈடுபட விருப்பமுள்ள கைத்தொழில முயற்சியாளர்கள் இந்நிகழ்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இச்சங்கத்தில் இணைந்துகொள்ள தத்தமது பிரிவு கிராம அலுவலர் ஊடாக விண்ணப்பித்தவர்களும் விண்ணப்பிக்க முடியாமற் போனவர்களும் கூட்டத்தில் கலந்துகொள்ளலாமென பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார். (க-117)

## 47 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

மலர்வு 17 - 10 - 1923



உதிர்வு 06 - 06 - 2001

## திருமதி ஆறுமுகம் தங்கம்மா

**அன்புடனும் பாசத்துடனும் திகழ்ந்தீரே!**
**உமது பிரிவைத் தாங்கமுடியவில்லையே!**
**ஆத்மா சாந்திபெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

எமது குடும்பத் தலைவியின் பிரிவுச் செய்தி அறிந்து எமது இல்லம் நாடி வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு எங்களது துயரில் பங்கேற்றவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் எமக்கு ஆறுதல் கூறி உதவிகள் செய்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

இன்று (22-07-2001) ஞாயிற்றுக்கிழமை சித்தன்கேணியிலுள்ள இல்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மற்றும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகியவற்றிலும் வந்து கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**கே.பொன்னம்பலம்,**
*வட்டு.கிழக்கு, சித்தன்கேணி.*
*(வட்டு.இந்துக் கல்லூரிக்கு அருகில்)*

பிரிவால் துயருறும்:
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
(C/17520)

## இவரைக் காணவில்லை



இல.16, இராசா வீதி, நல்லூரைச் சேர்ந்த

**வீரையா ஜெயகாந்தன்**

**(வயது 14)**

**என்பவரைக் கடந்த 09/07/2001 அன்றில் இருந்து காண வில்லை. இவருக்குக் காது கேட்பது குறைவு. தகவலறிந்தவர்கள் தயவுடன் கீழ்க்காணும் முகவரிக்குத் தெரியப்படுத்தி உதவவும்.**

குமார் ரயர் வேக்ஸ்,
பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு. (90307)

ராஜா தொமினிக்கேசன்,
பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு.
**T.P.2919**

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் துரைராசா (துரை)

திருநெல்வேலி மேற்கு அம்மன் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் துரைராசா (துரை) 18.07.2001 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், பாக்கியத்தின் அன்புக் கணவரும், ராஜேந்திரா (இலங்கை வங்கி - கொழும்பு, வானம்பாடி சேவை அறிவிப்பாளர், அரியாலை **STAR** கல்வி நிறுவன நிர்வாகஸ்தரும் **STAR, UNIVERSAL, NORTHERN EXPRESS** கல்வி நிறுவனங்களின் முன்னாள் **MATHS** ஆசிரியரும்), நீலா (கிளி), உமாதேவி (ரவி), இலங்காதேவி (வவா, ஜேர்மனி), காஞ்சனாதேவி (பேபி - ஹொலண்ட்), சுதேந்திரன் (லண்டன்), நிரஞ்சனாதேவி (ராசாத்தி - கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கமலாவேதி, சற்குணம் நித்தியானந்தம் (செல்வம்), சிவராஜா (ஜேர்மனி), பழனித்துரை (ஹொலண்ட்), புவனபாஸ்கரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், பவளம், இராசதுரை (ராசு), நல்லம்மா, கமலாம்பாள், யோகாம்பாள் காலஞ்சென்ற தங்கம்மா (செவ்வந்தி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், டிலுக்ஷன், சுலக்ஷன், கீர்த்தனா, அனோஜன், லாவர்ணன், கவிவர்ணன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான கந்தையா, சுப்பிரமணியம், மாணிக்கம் மற்றும் செல்லத்துரை (இராமலிங்கம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (24.07.2001) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பத்திரகாளி கோயிலடி,*
*திருநெல்வேலி மேற்கு.* (90306)

தகவல்:
V.T.ராஜேந்திரன் J.P.
(ராஜேந்திரா மாஸ்ரர் - மகன்)

# மாகாண மட்ட மெய்வன்மைப் போட்டிகளில் யாழ்.மாவட்ட மெய்வல்லுநர்கள் சாதனை

யாழ்ப்பாணம்,ஜுலை22

அண்மையில் திருகோணமலையில் நடைபெற்ற வடக்கு - கிழக்கு மாகாண மட்ட மெய்வன்மைப் போட்டிகளில் 15 தங்கப் பதக்கங்களையும், 9 வெள்ளிப் பதக்கங்களையும், 14 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று யாழ். மாவட்ட அணி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இந்த மெய்வன்மைப் போட்டிகளில் யாழ். வீர, வீராங்கனைகள் பல புதிய சாதனைகளையும் நிலை நாட்டியுள்ளனர்.

**பெண்கள் பிரிவு**

பெண்கள் பிரிவில் கே.மிதிலா 200 மீற்றர் ஓட்டம், 400 மீற்றர் ஓட்டம், நீளம் பாய்தல் ஆகிய மூன்று விளையாட்டுகளிலும் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டதுடன் 200 மீற்றர், 400 மீற்றர் ஆகியவற்றில் ஏற்கனவே இருந்த சாதனையை முறியடித்து புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

யாழ்.மாவட்ட வீர்களின் ஏனைய போட்டி முடிவுகள் வருமாறு:-

ரி.மைதிலி - 100 மீற்றர் ஓட்டம் - மூன்றாமிடம்,

எஸ்.பகிர்தா - நீளம் பாய்தல்- மூன்றாமிடம், உயரம் பாய்தல்- இரண்டாமிடம்.

எஸ்.சுகிர்தா - முப்பாய்ச்சல்- முதலாமிடம்.

எஸ்.குகாயினி - முப்பாய்ச்சல்- மூன்றாமிடம், 100 மீற்றர் தடை தாண்டல் - மூன்றாமிடம், 400 மீற்றர் தடைதாண்டல் - மூன்றாமிடம்.

வி.சேந்தினி - 400 மீற்றர் தடை தாண்டல் - இரண்டாமிடம்.

ரி.கலைமகள் - தட்டெறிதல்- மூன்றாமிடம்.

இவற்றுடன் 4x100 மீற்றர், 4x400 மீற்றர் ஆகிய இரு அஞ்சலோட்ட நிகழ்வுகளிலும் முதலாமிடத்தைப் பெற்று பெண்கள் அணியினர் சாதனை படைத்தனர்.

வடக்கு - கிழக்கின் மைதான, சுவட்டு நிகழ்வுகளின் சிறந்த வீராங்கனையாக யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த கே.மிதிலா தெரிவு செய்யப்பட்டார்.

**ஆண்கள் பிரிவு**

ஆண்கள் பிரிவில் பெற்ற பெறுபேறுகள் வருமாறு:-

சி.ஏ.அரவிந்தன் - 1500 மீற்றர் ஓட்டம் - இரண்டாமிடம்.

பி.வெலிங்ரன் - 200 மீற்றர் ஓட்டம் - முதலாமிடம்.

எஸ்.ரஞ்சித்குமார் - நீளம் பாய்தல் - இரண்டாமிடம், 110 மீற்றர் தடைதாண்டல் - மூன்றாமிடம், 400 மீற்றர் தடைதாண்டல் - இரண்டாமிடம்.

எஸ்.சுதேஸ்குமார் - 400 மீற்றர் தடைதாண்டல் - மூன்றாமிடம்.

கே.இராசகுமார் - 400 மீற்றர் ஓட்டம் - மூன்றாமிடம்.

எஸ்.சுரேன் - 400 மீற்றர் ஓட்டம்- இரண்டாமிடம்.

இ.உதயகுமார் - தட்டெறிதல்- முதலாமிடம்.

எஸ்.பிரதீப்குமார் - தட்டெறிதல் - இரண்டாமிடம்.

ரி.ஜெயந்தன் - 10,000 மீற்றர் ஓட்டம் - மூன்றாமிடம், 5,000 மீற்றர் ஓட்டம் - மூன்றாமிடம்.

கே.கமலகிறேசியன் - 10 மீற்றர் தடைதாண்டல் - இரண்டாமிடம்.

ஆண்களுக்கான அஞ்சலோட்ட நிகழ்வுகளில் யாழ்.மாவட்ட வீரர்கள் 4x400 மீற்றர் ஓட்டத்தில் முதலாமிடத்தையும், 4x100 மீற்றர் ஓட்டத்தில் மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

இப்போட்டியில் பங்குபற்றிய யாழ்.வீரர்கள் அனைவரும் கடந்த வாரம் யாழ்ப்பாணம் திரும்பினர்.

இந்தப் போட்டிகளில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற வீர, வீராங்கனைகள் அனைவரும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் குருநாகலில் நடைபெறவுள்ள தேசிய மட்ட மெய்வன்மைப் போட்டியில் பங்குபற்றவிருப்பதாகவும் -

இதற்கான முன்னேற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் -

யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம் தெரிவித்துள்ளார். (உ-4-6)

## கருத்தரங்கு

அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜி.ச.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பொருளியல் பாடக் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (உ-4)

## தென்மராட்சி மாணவருக்கு அழைப்பு

கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்தில் கல்வி கற்று, இடம்பெயர்வினால் தற்போது வேறு பாடசாலைகளில் ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்கு முதல் தடவை மற்றும் இரண்டாவது தடவையாக தோற்ற உள்ள மாணவர்களை, எதிர்வரும் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு, மேற்படி பாடசாலை தற்காலிகமாக இயங்கும் வதிரி கரவெட்டியிலுள்ள 'பீகொன்' கல்வி நிலையத்திற்கு வரும்படி அதிபர் தெ.துரைச்சாமி கேட்டுள்ளார். (ஒ)

★ ★ ★

யாழ்.மந்துவில் ஸ்ரீ பாமதி வித்தியாலயத்தில் கல்விகற்று, இடம்பெயர்வினால் வேறு பாடசாலைகளில் கல்வி கற்கும் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் முதல் தடவை மற்றும் இரண்டாவது தடவையாகத் தோற்றுவோர் எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு, வித்தியாலயம் தற்காலிகமாக இயங்கும் வதிரி கரவெட்டி 'பீகொன்' கல்வி நிலையத்திற்கு வருமாறு அதிபர் கேட்டுள்ளார். (ஒ)

## ஜி.சீ.ஈ. உயர்தர அனுமதி அட்டைகள் வந்தன

தென்மராட்சி,ஜுலை22

அடுத்த மாதம் 4 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு வந்துள்ளதாகவும் பரீட்சார்த்திகள் அவற்றை உடன் பெற்றுக் கொள்ளுமாறு அஞ்சல் அதிபர்கள் கேட்டுள்ளனர். (ம-117)

## குருபீடாதிபதியின் இல்லத்தில் திருட்டு

யாழ்ப்பாணம்,ஜுலை22

இந்து மதகுருமார் ஒன்றிய பீடாதிபதி பிரம்மஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்களின் சுதுமலை இல்லத்தில் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் நுழைந்த திருடர்கள் மோட்டார் சைக்கிள், நகைகள் மற்றும் ரெக்கப் பணம் ஆகியவற்றைத் திருடிச்சென்றுள்ளனர்.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக பொலீஸாரிடம் முறையிடப்பட்டிருக்கிறது.

வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவரும், ஈ.பி.டி.பியின் இந்து விவகாரங்களுக்கு பொறுப்பானவருமான ந.திரிலோகநாதன் இத்திருட்டு சம்பவம் குறித்து அதிர்ச்சி தெரிவித்ததுடன் கடும் கண்டனத்தையும் வெளியிட்டிருக்கிறார். (ஐ-ஒ)

# அராலி முதல் மூளாய் வரை உள்ள உவர்நீர் அணையைப் புனரமைக்குக!

## விவசாய அமைப்புகள் கோரிக்கை

மூளாய்,ஜுலை22

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள உவர்நீர்த் தடுப்பு அணையைப் புனரமைப்புச் செய்யும்படி விவசாய அமைப்புக்கள் பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

மேற்படி பிரதேச செயலர் பிரிவின் தென்மேற்கு எல்லையில் உவர்நீர் தரைப் பரப்புக்குள் ஊடுருவிச் செல்வதைத் தடுப்பதற்காக - அராலியில் இருந்து மூளாய் வரைக்கும் - உவர்நீர்த் தடுப்பு அரண் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நீண்ட அணைக்கட்டைப் புனரமைத்துப் பலப்படுத்தும் முயற்சிகள் எதுவும் மிக நீண்ட காலமாக மேற்கொள்ளப்படவில்லை. இதனால் இந்த அணைக்கட்டின் சேதமடைந்த பகுதிகள் ஊடாக உவர்நீர் உட்புகும் அபாயம் அதிகரித்துள்ளது. இதனால் அராலிப் பகுதியின் பயிர்செய்யும் நிலப் பகுதிகள் படிப்படியாக உவர்த் தன்மை அடைந்து வருகின்றன.

மேற்படி விடயங்கள் தொடர்பாக அண்மையில் வலி.மேற்குப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற விவசாயக்குழுக் கூட்டத்தின்போது விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள் பிரதேச செயலரின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். உவர்நீர்த் தடுப்பு அணைக்கட்டைப் புனரமைப்புச் செய்வதன்மூலம் விவசாய நிலங்கள் உவர்த்தன்மை அடைவதைத் தடுக்க முடியும் என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-99)

**ஜெயா மிக்ஷர்**

எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மிக்ஷர் கொம்பனிக்கு வேலையாள்கள் (பெண்கள் மட்டும்) தேவை. நேரில் தொடர்புகொள்ளவும்.

உரிமையாளர்,
P.சண்முகராசா
ஜெயா இன்டஸ்ரீஸ்,
31/6, நடுத்தெரு லேன்,
அரியாலை, யாழ்ப்பாணம். (90333)

**IPE நிறுவன LOGIC**

**இறுதி முன்னோடிப் பரீட்சையில் கூடிய புள்ளி பெற்றோர்**

| | |
|---|---|
| ★S. சிவசங்கர் | 93 |
| ★S. கல்யாணி | 89 |
| ★S. சஞ்சீவன் | 88 |
| ★M. கஜேந்திரா | 86 |
| ★T. ரூபநிசாந்தி | 86 |
| ★R. மதிவதனா | 86 |
| ★சற்குணேஸ்வரன் | 86 |
| ★K. லெனின்குமார் | 84 |
| ★R. வனஜா | 84 |
| ★V. தீபா | 82 |

LOGIC A/L 2002 பகுதி II
விஞ்ஞானமும் வகையீடும்
ஆரம்பம் 28.07.2001 சனி 5மணி.
மதுபாரத் கல்வி நிறுவனம்
குமாரசாமி வீதி.
EXAMINER & TUTOR MR.P.KAMAL (90332)

**சுந்தர் வெளியீடு**

எமது புலமைப்பரிசில் பொதுப் பரீட்சையில் வடமராட்சிப் பிரிவில் உச்சப்புள்ளி பெற்றோர்

| | |
|---|---|
| சி. மெக்சி பாரதிதா | 170 |
| யா/துன். காசிநாதர். | |
| ப. நிஷானி | 168 |
| யா/மெ. மி. த. க. | |
| ப. ஜெசிதா | 167 |
| சா/இ. ஆ. பா. | |
| அ. பிரியங்கா | 163 |
| யா/மெ. மி. த. க. | |
| த. ஹம்ஷாலினி | 154 |
| யா/மெ. மி. த. க. | |

அடுத்த பரீட்சை: இன்று வழமையான நேரம்.
38.கோயில் வீதி, யாழ். சுந்தர். (90334)

**NEW SCIENCE HALL**
JAFFNA
A/L 2001
★ முன்னோடிப் பரீட்சை ★
உயிரியல்
பகுதி I
24.07.2001
செவ்வாய் 9.00 - 11.00
★ இரசாயனவியல் ★
பகுதி I
25.07.2001
புதன் - 9.00 - 11.00
குறிப்பு :- பரீட்சை முடிந்தவுடன் வினாத்தாள் பற்றிய கலந்துரையாடல் இடம்பெறும். (90328)

**வீடு வாடகைக்குத் தேவை**

சிறிய குடும்பத்துக்கேற்ற வசதியான வீடு வாடகைக்குத் தேவை.
கொக்குவில், திருநெல்வேலிப் பகுதிகள் விரும்பத்தக்கவை.
தொடர்பு:-
விளம்பர இல. 1334
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம். (90318)

**தேவை**

இனிப்புத் தொழிலகத்தில் பணியாற்றுவதற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை.
'காமதேனு இனிப்புத் தொழிலகம்'
குமரக்கோட்டம், கோண்டாவில் எனும் முகவரிக்கு நேரில் வரவும்.
(நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோயிலுக்கு அருகில்) (90305)

**ராஜா** யாழ்ப்பாணம்

இன்று மட்டும்
9 வேடங்களில் நடித்த அஜித், வசுந்தராதாஸ், நக்மா, மீனா மற்றும் பலர் நடிப்பில்
CITIZEN சிட்டிசன்
தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2.00, 5.00(பு.நே.)
நாளை முதல் விஜயகாந்தின்
வாஞ்சிநாதன் (C/17443)

**நாகம்ஸ்** சுன்னாகம்



சரத்குமார், மீனா, சுவலட்சுமி, வடிவேல் நடித்த இனிய பாடல்கள் நிறைந்த
மாயி
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30
(புதிய நேரம்) (90325)

**யாழ். மக்களால்**

**நன்றியுடன் நினைவுகூரப்படவேண்டிய**

**வண.K.P.கோவிந்தராஜா அவர்கள்**

யாழ். குடாநாட்டு மக்களின் கண்ணீர் துடைக்கும் பணியில் ஈடுபட்டவரான பிலிமத்தலாவை இறையியல் கல்லூரி அதிபர் மெதடிஸ்த திருஅவை போதகர் **வண. K.P.கோவிந்தராஜா** அவர்களின் மறைவையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கும், பிலிமத்தலாவை இறையியல் கல்லூரிச் சமூகத்திற்கும் எம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*யாழ்.பிரதேச முதல்வர்,*
*குருமார், சபை மக்கள்,*
*சுண்டிக்குளி. யாழ்.அங்கிலிங்கன் திருச்சபை.* (90320)

## மரண அறிவித்தல்

**வண.K.P. கோவிந்தராஜா**

இலங்கை இறையியல் கல்லூரி - பிலிமத்தலாவை அதிபரும் இலங்கை மெதடிஸ்த திரு அவையின் மத்திய மாவட்ட சபாசங்கத்தின் தலைவருமான வண.கந்தையா போல் கோவிந்தராஜா அவர்கள் 19.07.2001இல் காலமானார்.

இவர் சறோஜாவின் அன்புக் கணவரும், கரன் (U.S.A), பிறிஸ்ரிலா (மெதடிஸ்த கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் பெரிய கல்லாரையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான J.K.கந்தையா தம்பதிகளின் அன்பு மகனும், 99,சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்து வந்த காலஞ்சென்றவர்களான K.S.திரவியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் திருமதி செல்வராஜா, K.T.கோபால், திருமதி கமல் கந்தையா, D.K. கோபன், திருமதி கோகிலம் அழகுராஜா, D.K.கந்தையா, காலஞ்சென்ற J.கோனிர்ஸ் கந்தையா மற்றும் J.K.கந்தையா ஆகியோரின் சகோதரனும், டாக்டர் T.W.பத்மதேவா, திருமதி ரதி புவனபூசணம், C.T.பத்மஜெயன், L.T.பத்மநாபன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இலங்கை இறையியற் கல்லூரி பிலிமத்தலாவையில் இன்று(22.07.2001) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கும் பின் மெதடிஸ்த திரு அவை கொள்ளுப்பிட்டியில் நாளை (23.07.2001) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கும் நடத்தப்பட்டு பூதவுடல் கனத்தை பொது சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

அன்னாரை நினைவு கூரும் ஞாபகார்த்த நன்றி வழிபாடு யாழ்.பரி.பேதுரு மெதடிஸ்த ஆலயத்தில் நாளை (23.07.2001) திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இறையியல் கல்லூரி,
*பிலிமத்தலாவை.*
*T.P.08-575618*

தகவல்:-
டி.ஆர்.அருமைநாயகம்,
*214,கச்சேரி நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (90324)

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் சி.ரத்தினசோதி (பெரிய ராசு)**

**(புன்னாலைக்கட்டுவன்)**

*அவர்கள் எம்மோடு பழகிய காலம் சொற்பமாகினும் எமது நெஞ்சத்தில் ஆழமான அன்பையும், நட்பையும் வளர்த்துவிட்டு எதிர்பாராத விதத்தில் திடீரென எம்மை விட்டுப் பிரிந்த துயரில் துடிக்கின்றோம். இனி என்று காண்போம் உங்கள் புன்னகை பூத்த முகத்தை?*

அவரது ஈடுசெய்ய முடியாத இழப்பால் துன்பத் துயர்க் கடலில் மூழ்கித் தத்தளிக்கும் அவரது மனைவி, பிள்ளைகள் மற்றும் சகோதரர்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் ஆறுதலையும் சோகத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*பிரிவால் துயருறும்:*
**யாழ். ருவிங்கிள் ஸ்ரார் சிட்ஸ் அன் பினான்ஸ் நிறுவனத்தினரும்**
**சங்கானை சேவ(ர்) பாடசாலை சேவை சிவா குடும்பத்தினர்களும்.**
(90331)

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மோதலில் சிக்கி உயிரிழந்த பெண் 4 குழந்தைகளின் தாய் எனவும் -

வீட்டு விறாந்தையில் படுத்திருந்த அவர் துப்பாக்கி வேட்டுச் சதங்களை கேட்டுப் பயந்து எழுந்து உள்ளே செல்ல முற்பட்டபோது அவர் மீது துப்பாக்கிச் சன்னங்கள் பாய்ந்ததில் அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார் என்றும் - கூறப்பட்டது.

மோதல்களை அடுத்து அன்புவழிபுரம், அலஸ்தோட்டம் பகுதிகளைச் சுற்றிவளைத்த படையினர் தீவிர தேடுதல்களை நடத்தினர். (ம-6)

## ஈவினை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடப்பட்டிருந்த ஒரு பழைய வீட்டுக்குள் இருந்து கிளைமோர்கள் மற்றும் அது தொடர்பான உபகரணங்கள் மீட்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

நேற்று மாலை சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு மல்லாகம் மாவட்ட நீதிபதி சுப்பிரமணியம் நேரில் சென்று பார்வையிட்டார்.

உயிரிழந்து கிடந்த இருவரில் ஒருவருக்கு மிக நெருக்கமாக மேலும் சில கிரனேட்டுகள் அப்போது காணப்பட்டன.

அவற்றை வெடிக்க வைத்த பின்னர் சடலத்தை யாழ்.ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல அனுமதி வழங்கிய நீதிபதி சடலங்களின் மீது பிரேத பரிசோதனை செய்யும்படியும் உத்தரவிட்டார். இம்மரணங்கள் தொடர்பான விசாரணை நாளை பிற்பகல் மல்லாகம் நீதிமன்றத்தில் நடைபெறும் என்றும் அவர் அறிவித்தார்.

சடலங்கள் இரண்டும் நேற்று மாலை யாழ்.ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டன. (உ-4-6-9-133-173)


விசேட

மாலை நேர வகுப்புகள்

ஆரம்பம்:

25/07/2001 (6.30 மணிக்கு)

அலுவலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், ஆசிரியர்கள், உயர் கல்வி கற்கும் மாணவர்களுக்கான விசேட கணனி வகுப்புகள் மாலை 6.30 மணிமுதல் 8.00 வரை கிழமை நாள்களில் ஆரம்பமாக உள்ளது.

மேலதிக விவரங்கள் 23.07.2001 திங்கட்கிழமை உதயனில்.

இயக்குநர், IIS, யாழ்ப்பாணம்.

(C/17515)


## துப்பாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் சித்தாண்டி இராணுவ முகாமுக்கு அருகில் படையினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது சிப்பாய் ஒருவரின் துப்பாக்கியைப் பறிக்க முனைந்த நபரொருவரை மற்றைய சிப்பாய் சுட்டுக்கொன்றதாகவும் -

அவரது இடுப்பில் கட்டப்பட்டிருந்த கிளைமோர் ஒன்றும் கிருஷ்ணபிள்ளை வீரப்பன் என்பவரின் அடையாள அட்டையும் படையினரால் கைப்பற்றப்பட்டதாகவும் -

விசேட ஊடகத் தகவல் மையம் அறிவித்துள்ளது. (ம-6)

## மல்வத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதி சந்திரிகா குமாரதுங்கவிடம் நேரில் தெரிவித்திருப்பதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டிருக்கின்றது.

நேற்று முன்தினம் ஜனாதிபதி குமாரதுங்க கண்டிக்கு விஜயம் செய்து மல்வத்தை பீடாதிபதியைச் சந்தித்து ஆசி பெற்ற சமயமே மகாநாயக்கர் தமது விசனத்தை ஜனாதிபதிக்கு வெளிப்படுத்தியதாகவும் கூறப்பட்டது. (உ)

## நடிகர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடித்துப் புகழ்பெற்ற பி.சி. கணேசன், கலைஞர் கருணாநிதியின் கனல் தெறிக்கும் வசனங்களைக் கொண்ட 'பராசக்தி' படம் மூலம் திரைப்பட உலகுக்கு அறிமுகமானார்.

'வீர சிவாஜி' என்ற கதாபாத்திரத்தில் சிறப்பாக நடித்ததற்காக தந்தை பெரியார் இவருக்கு 'சிவாஜி' என்ற பட்டத்தை அளித்தார். அன்று முதல் அவர் தனது பெயருக்கு முன்பாக சிவாஜி என்ற பட்டத்தைச் சேர்த்துக் கொண்டார்.

தாதா சாஹிப் பால்கே மற்றும் பத்மஸ்ரீ விருதுகள் அவருக்கு வழங்கப்பட்டபோதும் சிறந்த நடிகருக்குரிய இந்தியத் தேசிய விருது அவருக்கு அளிக்கப்படவில்லை.

பிரான்ஸ் அரசு அவருக்கு 'செவாலியர்' விருது வழங்கிக் கௌரவித்துள்ளது. 'வீரபாண்டிய கட்டப்பொம்மன்' படத்தில் நடித்ததற்காக எகிப்துப் பட விழாவில் அவர் சிறந்த நடிகருக்கான விருதையும் வென்றுள்ளார்.

அவர் சிறிது காலம் அரசியலிலும் பங்காற்றியுள்ளார். ஆரம்பத்தில் தி.மு.கவில் இருந்த அவர், பின்னர் நீண்டகாலம் காங்கிரஸில் இருந்தார். எனினும் திரைப்படத்துறையில் வெற்றி பெற்ற அளவுக்கு அவரால் அரசியலில் வெற்றிபெற இயலவில்லை (ம-6)

## ஜே.வி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் கடுவல்ல மற்றும் மஹரகம ஆகிய இடங்களில் இந்த ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும். ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளும் மக்களின் எண்ணிக்கையைப் பொறுத்து ஊர்வலம்ஒன்றை நடத்துவதற்கும் திட்டமிட்டுள்ளோம்.

எமது கட்சியின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த ஆர்ப்பாட்டத்துக்கும் ஊர்வலத்திற்கும் பொலீஸாரிடம் அனுமதி கோரப்போவதில்லை - இவ்வாறு அவர் மேலும் சொன்னார்.

## பிஸ்டல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டுவிட்டுத் தப்பியோடியதாகத் தெரிவிக்கப்பட்டது. கழுத்தில் காயமடைந்த அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

சம்பவம் இடம்பெற்ற சில நிமிடங்களில் அந்த இடத்துக்கு விரைந்து வந்த படையினர், அந்தப் பிரதேசத்தைச் சுற்றிவளைத்துத் தேடுதல்களை நடத்தினர். சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து சுமார் 200 மீற்றர் தூரத்தில் மஞ்சத்தொடுவாய் பொலீஸ் காவல் நிலையம் இருப்பது குறிப்பிடத்தக்கது (ம-21-6)

## மறைந்த ஆயரின் சேவை வழிபாடு

யாழ்ப்பாணம்,ஜூலை22

1950 ஆம் ஆண்டு முதல் 1972 ஆம் ஆண்டு காலமாகும் வரை யாழ். ஆயராக மறைத்திருப்பணி புரிந்த வண.ஜெரோம் எமிலியானஸ்பிள்ளை அவர்களின் நூறாவது பிறந்ததினம் கடந்த வெள்ளியன்றாகும். அதை ஒட்டி நேற்று முன்தினம் மாலை யாழ். ஆயர் இல்லத்தில் உள்ள சிற்றாலயத்தில் சேவை வழிபாடு இடம்பெற்றது. (உ)

## சந்திரிகாவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது என்று சுட்டிக்காட்டியுள்ள மன்னிப்புச்சபை, சுடுகலன்களைப் பயன்படுத்தும்போது அடிப்படை ஒழுங்குநெறிகளைப் பொலீஸாரும், படையினரும் பின்பற்றுவதை உறுதிப்படுத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை கோரியிருக்கின்றது. (உ-ம-6)

## கோட்டே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜே.வி.பி. உட்பட எதிர்க்கட்சிகள் அனைத்தையும் சேர்ந்த 115 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்துகொள்ள வைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திஸ்ஸ அத்தநாயக்க என்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (ம)

## பொதி யாருடையது?

வடமராட்சி,ஜூலை22

மந்திகைக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் சில தினங்களுக்கு முன்னர் கண்டெடுக்கப்பட்ட பொதி ஒன்று பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

க.சுப்பிரமணியம் (இமையாணன், உடுப்பிட்டி) என்பவருடைய அடையாள அட்டையும் ஒரு தொகைப் பணமும், முக்கிய பொருள்கள் சிலவும் இந்தப் பொதியில் இருந்ததாகவும் -

உரியவர்கள் அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் -

பருத்தித்துறைப் பொலீஸ் நிலைய குற்றத்தடுப்புப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் முஹம்மட் தெரிவித்தார். (உ-173)

# சர்வஜன வாக்கெடுப்பில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றை எதிர்வரும் 3ஆம் திகதி தாம் ஆரம்பிக்கப்போவதாகவும் -

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவரும் எம்.பியுமான அ.விநாயகமூர்த்தி நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

"இந்த சர்வஜன வாக்கெடுப்பு ஓர் ஏமாற்று வேலை. தமிழர்களின் காதில் பூச்சுற்றும் நடவடிக்கை. இந்த வாக்கெடுப்பால் புதிதாக நன்மை ஏதும் தமிழர்களுக்கு வந்துவிடப்போவதில்லை. பிரயோசனமற்ற இந்தச் செயற்பாடு மூலம் மக்களை திசைதிருப்புவதற்கு ஜனாதிபதி எடுக்கும் முயற்சிகளுக்கு உடந்தையாகவோ, ஒத்துப்போகவோ நாம் தயாரில்லை" - என்றும் அவர் கூறினார்.

### கூட்டணியின் நிலைப்பாடு

சர்வஜன வாக்கெடுப்புத் தொடர்பாகத் தமது நிலைப்பாட்டைத் தீர்மானிப்பதற்காகக் கூட்டணியின் அரசியல் குழு எதிர்வரும் 4ஆம் திகதி கூடுகின்றது.

எனினும், எதிர்த்து வாக்களிப்பது என்ற முடிவை கூட்டணியின் உயர் வட்டாரங்கள் ஏற்கனவே எடுத்துவிட்ட[illegible]கவும் -

அந்த நிலைப்பாடு நான்காம் திகதிக் கூட்டத்தில் உறுதிப்படுத்தப்படும் என்றும் மூத்த கூட்டணிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

"1994ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் அரசமைப்பைத் திருத்துவதற்கு அங்கீகாரம் அளித்தே ஆளும் கட்சிக்கு மக்கள் வாக்களித்திருக்கின்றார்கள். எனவே இப்போது அந்த அங்கீகாரத்தைப் பெறுவதற்கு அவசர - அவசிய - தேர்தலுக்கு என்ன கட்டாயம் ஏற்பட்டிருக்கின்றது. இது மக்களைத் திசைதிருப்பும் செயல். எந்த வகையில் அரசமைப்பு அமையப்போகின்றது என்று காட்டாமல் அதற்கு எப்படி நாம் அங்கீகாரம் வழங்கமுடியும்? எனவே எதிர்த்து வாக்களிக்க முடிவு செய்வோம்.

"அதன் அர்த்தம் அதிகாரப் பரவலாக்கலுக்கான அரசமைப்பு மாற்றத்தை நாம் எதிர்க்கின்றோம் என்பதல்ல; இருக்கின்ற அரசமைப்பை நாம் அங்கீகரிக்கின்றோம் என்பதுமல்ல.

"இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து நீண்டகாலமாகப் பேசப்பட்டு வந்தது. அதற்காக ஆக்கபூர்வமான பேச்சுகளில் ஈடுபடும்படி பல தரப்புகளாலும் வலியுறுத்தப்பட்டும் வந்தது. பேச்சுக்கான முயற்சிகள் களை கட்டிய வேளையில் அதை அப்படியே 'தொப்' என்று போட்டுவிட்டு, மக்களின் கவனத்தைத் திசைதிருப்பும் விதத்தில் ஜனாதிபதி இந்தத் தேவையற்ற சர்வஜன வாக்கெடுப்பை முன்வைத்திருக்கின்றார்.

எனவே நிச்சயமாக இந்த சர்வஜன வாக்கெடுப்பில் முன்வைக்கப்படும் கோரிக்கைக்கு ஆதரித்து வாக்களிக்குமாறு நாம் மக்களைக் கோரமாட்டோம். எதிர்த்து வாக்களிக்கும்படி மக்களைக் கோரும்போது நாம் ஏன் அத்தகைய முடிவுக்கு வந்தோம் என்பதை மக்களுக்கு மிகத் தெளிவாக எடுத்துரைப்போம்" - என்றார் அந்தக் கூட்டணிப் பிரமுகர்.

### புளொட் கருத்து

சர்வஜன வாக்கெடுப்பில் ஆதரித்து வாக்களிப்பதில்லை என்ற முடிவையே புளொட் உயர்பீடம் எடுத்திருப்பதாகத் தெரிகின்றது.

"இது அவசியமற்ற ஒன்று. நம்பிக்கையில்லாப் பிரேரணை விவகாரத்தில் தோல்வியைச் சந்திக்க இருந்த அரசு, அதிலிருந்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்புவதற்காக சர்வஜன வாக்கெடுப்பு என்ற புதிய துரும்பை எடுத்து வெளியே விட்டிருக்கின்றது. இதுவரை காலமும் நம்பிக்கையில்லாப் பிரேரணை என்ற விடயத்தைக் கதைத்துக் கொண்டிருந்த மக்கள் இப்போது சர்வஜன வாக்கெடுப்புக் குறித்துப் பேச ஆரம்பித்துவிட்டார்கள். அந்த வகையில் ஜனாதிபதிக்கு இந்த விவகாரத்தில் வெற்றியே.

"என்றாலும் மக்களைத் திசைதிருப்பும் இந்த முயற்சிக்கு புளொட் அமைப்பு துணை போகாது" - என்று அந்த அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

### ஏனைய கட்சிகளின் நிலைப்பாடு

ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) ஆகியவையும் சர்வஜன வாக்கெடுப்பில் எதிர்த்து வாக்களிக்கும்படி மக்களைக் கோருவதில் மிகத் தீவிரமாக இருப்பதாகத் தெரிகின்றது.

நேற்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்பு அலுவலகத்தில் நடைபெற்ற பத்துத் தமிழ்க் கட்சிகளின் கூட்டத்திலும் இந்த விடயத்தில் ஏகமனதான கருத்தொற்றுமை இருந்ததாக அறியவந்தது.

மலையகத் தலைவர்களான தேவராஜ், செல்லச்சாமி, மனோ கணேசன் ஆகியோர் சார்ந்த கட்சிகள், அமைப்புகளும் கூட சர்வஜன வாக்கெடுப்பில் எதிர்த்து வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை இக்கூட்டத்தில் அடித்து வலியுறுத்தியதாக அறியவந்தது. (உ)


பொருளியல் கருத்தரங்கு

A/L 2001

செவ்., புதன், வியா., வெள்ளி

8.00 - 12.00

ஆசிரியர்:-S.ஜெயகுமார் B.A. (Hons) Eco.Spl

ஆரம்பம் 24-07-2001 செவ்வாய் 8மணி.

SUBRA (14)

கல்வி நிறுவனம் - சித்தன்கேணி.

NOTE:- வெளிமாவட்டவர்களும் கலந்து கொள்ளலாம்.

(C-17522)

ஈசன் கல்வி நிலையம்

A/L 2002 PAPER CLASS

கடந்த கால வினாவிடைகளின் அலகுரீதியான மீட்டல் வகுப்பு

| CHEMISTRY | PHYSICS |
|---|---|
| K.சிவத்திரன் (B.Sc.) | R.குமரன் (B.Sc.) |
| 3.30 p.m. | 4 .30 p.m. |
| செவ்வாய் | திங்கள் |

ஆரம்பம்:- 24-07-2001

(90244)

மிற்சுயி (MITSUI), அட்லஸ் (ATLAS) சீமெந்து விற்பனை

இரு தினங்களில் வரவிருக்கும் மிற்சுயி (MITSUI), அட்லஸ் (ATLAS) சீமெந்துக்கான ஓடர்களை வாடிக்கையாளர்கள் அனைவரும் முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

எதிர்வரும் (25.07.2001) புதன்கிழமை விநியோகம் மேற்கொள்ளப்படும்.

தொடர்பு:

ஜெசீபா ஏஜென்சி

132, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

T/P: 2407 FAX: 2140

(C-17519)

ஆசிரியர்களுக்கான விடுமுறைக்கால விசேட கணனிப்பயிற்சி நெறி

மேற்படி விடுமுறைக்கால கணனிப்பயிற்சி நெறியை IBMS கணனி நிறுவனம் வழங்கவுள்ளது. ஆசிரியர்கள், வங்கி ஊழியர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்கள் யாவரும் இக்கற்கை நெறியில் இணைந்து கொள்ளலாம். இக்கற்கை நெறி தொடர்பான மேலதிக விபரங்களுக்கு IBMS தலைமைக்காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு தங்களது பதிவினை 25.07.2001க்கு முன்னர் உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

Director (Ad).

Director / Administration, IBMS No.701 K.K.S Road Jaffna. Email: ibmsjaf[illegible]yahoo.com

Phone: 021-3165

Branches : Near M.P.C.S Chankani, M.M.V Road,Nelliyadi


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.07.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.